439

# பஞ்சாமிர்தம்

ஒரு மாதாந்தரப் பத்திரிகை

நான் ஒரு மானுடன் : நான் மதியாதன
மானுட வாழ்வில் இலை.

மாலை-I புரட்டாசி—1924 காசு-6

## இந்திய சுயராஜ்யம்

(356-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பத்திராதிபர்



னிதர் உள்பட எல்லாப் பிராணிகளுக்கும், இயற்கையிலே சில சில தடைகளும் குறைகளும் ஏற்பட்டிருக்கின்றன : மனிதனுக்கு இறகில்லை, பறக்க ஒண்ணாது; பறவைகளுக்குப் பல்லில்லை, கடிக்க முடியாது ; மீன்களுக்கு நீரின் வெளியே வாழும் வலியில்லை ; விலங்குகள் நிமிர்ந்து நடக்கவும் பறக்கவும் கூடாதன. இவ்வண்ணம் பிறவியில் ஏற்பட்டுள்ள எல்லைகளுக்குட்பட்டு, ஒவ்வொரு மனிதனுக்கும், ஜீவ ஜந்துவுக்கும், தன்னிஷ்டப்படி நடக்க வேண்டும் என்னும் பேரவா, உள்ளத்தில் வேரூன்றிப் பிறவிக்குணமாக அமைந்திருக்கிறது. இந்த ஆசை தான் ஒவ்வொரு பிராணியின், ஜீவாத்மாவின், சிறப்பான தனிக் குறியாகும். இதனால் தான் சுயராஜ்யம் ஒவ்வொரு மனிதனுக்கு முரிய பிறப்புரிமை என்று சொல்கிறோம். ஆயின், நாம் பிறந்துவாழுமிடமாகும் இவ்வுலகமோ, பல வில்லங்கங்களும் கட்டுப்பாடுகளும் பொருந்தியது : இவற்றுள், முதல் முதல், இயற்கையில் ஏற்பட்டுள்ளனவும் ; பிறகு, நம்மைப் போன்ற மற்ற மனிதர்க்குரிய சுதந்தரங்களால் ஏற்படுவனவும் ; பிறகு, குடும்பம், இனம், சாதி முதலிய கூட்டுறவு வாழ்க்கையால் ஏற்படுவனவும், நம்மைக்கட்டுப்

படுத்துகின்றன. மனிதன் பறக்க முடியாதது இயற்கை நியமம்; நம்மைப் பிறர் எப்படி நடத்த வேண்டுமென்று நாம் விரும்புகிறோமோ அப்படியே பிறரை நாம் நடத்துவது, நம்மைப் போலவே பிற மனிதருக்கு முரிய தற்சுதந்தரத்தால் ஏற்படும் நியாயம்; தன் சுகத்தையும் நலத்தையுமே பாராட்டாது, தன் இச்சைகளை அடக்கியும் விட்டுக்கொடுத்தும ஒழுகுவது, மனைவி மக்களோடும் இனத்தாரோடும் கூடி வாழ்வதால் ஏற்படும் தளைகள். இவற்றுக்குப் புறம்பாக, ஊராரும், அரசாங்கத்தாரும், பொது நலத்தைக்கருதி ஏற்படுத்தும் நிபந்தனைகள் உள்ளன: ஒவ்வொருவனும் வைசூரி குத்திக் கொள்ள வேண்டுமென்னும் நிபந்தனை இத்தன்மையதாகும்.

இவ்வாறு பலதிறப்பட்ட நிபந்தனைகளின் நடுவே நாம் வாழுகின்றோமெனினும், பழக்கமும் கூட்டுறவும், நாளடைவில் இவற்றை நமக்குச் சகசமாக்கி விடுகின்றன; இவற்றின் இக்கட்டை நாம் அதிகம் உணருகிறதில்லை; தவிரவும், இந்நியமங்களே நமது மேற்செலவுக்கும் நாகரிக விருத்திக்கும் உதவிகளாகி விடுகின்றன. இத்தகைய நியமங்கள் சிலவேனும் இன்றிச் சமூக வாழ்க்கையே கைகூடாததலின், இவற்றை விலக்கொணாதனவாக மதித்து, சுயேச்சையை இவ்வேலிகளுக்குள் உலாவும்படிச் செய்துகொள்கிறோம். நெடுநாளையக் கூட்டுறவினாலும், ஜன்ம பூமியின் மீது ஒவ்வொருவருக்கும் தானறியாமலே உதித்து வளர்ந்தோங்கும் வாஞ்சையினாலும், ஒரு நாட்டிலே ஒரு சமூகமாகச் சேர்ந்து வாழ்வார் எல்லோரும், நாளடைவில், ஒத்த உணர்ச்சியும் அனுதாபமும் உடையவர்களாகி, விரோதபாவம் குன்றி, ஒரேவழியான ஜனசமூக முன்னேற்ற நோக்கத்தை ஏற்கின்றனர். "என்னிஷ்டம்!" "என்னிஷ்டம்!" என்னும் உட்போராட்டம் ஒருவாறு தணிந்து, "நம்மிஷ்டம்!" "நம்மிஷ்டம்!" என்னும் பொதுக்குறி ஏற்படுகின்றது.

மொகலாய சாதியார் முதலில் படையெடுத்து வந்து இந்தியாவை வென்று ஆண்டபோது, பேபர் சக்கரவர்த்தி, "இந்தியாவில் ஒன்றுமே எனக்குப் பிடிக்கவில்லை; எல்லாம் கீழ்த்தரமே" என்று தன் விருத்தாந்தத்தில் எழுதியபோது, மொகலாயர் ஆட்சி சுயராஜ்யமன்று, அந்நியர் ஆட்சியே. ஆயின், காலக்கிரமத்தில், மொகலாயர் தம்பூர்வநாடு மீளுவதை விட்டு, இந்நாட்டி

லேயே தங்கி வாழ்ந்தபோது; ஹிந்துக்களில் பல்லாயிரவர் பலகாரணங்களால் மகமதிய மதத்தினராகி, இருமதத்தினர்க்கும் இடையில் நின்று, ஒருவரை ஒருவர் நன்கறிந்து மதிக்கும்படி உதவியபோது; ஆக்பர் சக்கரவர்த்தி இருபெரும் சாதியினரையும் ஒன்று சேர்த்து ஒரே ஜனசமூகமாக்கக் கருதி, அதற்கென்றே பலதுறைகளில் பலவகை உழைத்தபோது; கடைசியாக, அங்கிலேயர் வந்து நாட்டையும் அதிகாரத்தையும் பிடுங்கிக்கொள்ள, மகமதியரும் ஹிந்துக்களைப்போலவே வலியிழந்து, இருவரும் ஒரே விதமான கஷ்டங்களுக்கும் அவமானங்களுக்கும் உள்ளாகித் தவிக்கத் தொடங்கியபோது, பரஸ்பர அந்நியோந்நியமும் அனுதாபமும் நாளுக்கு நாள் வளர்ந்தேறி, விரோதம் மட்டுப்பட்டு, ஒற்றுமையுணர்ச்சி இந்நாட்டிலே முளைத்து முதிர்ந்து, மகமதியர்களெல்லாரும், 'மிலேச்சர்' அந்நியர், என்பதுபோய், இந்தியராகி விட்டனர். தத்தமக்குரிய பிறப்பு வளர்ப்பிலும் பழக்க வழக்கங்களிலும் மதக்கோட்பாடுகளிலும் எவ்வளவோ வேற்றுமைகளிருப்பினும், ஒரேயினத்தார் என்றாகாவிடினும், ஒரே நாட்டார் சமூகத்தார் என்னும் ஒற்றுமையுணர்ச்சி உண்டாகிவிட்டது. இந்நாட்டிலுள்ள பல வேறு சாதியினரும் கட்சியினரும் ஒரோமித்து, "இந்தியாவின் விருத்த மகான்" என்று புகழ்ந்து கொண்டாடினவரும், இந்தியன் நாஷனல் காங்கிரஸின் மூலகர்த்தர்களின் ஒருவரும், இந்திய தேசபக்த சிகாமணியுமான தாதாபாய் நௌரோஜியின் முன்னோர்கள், இந்நாட்டுக்கு அந்நியராய் வந்து அடைக்கலம் புகுந்தோர் அன்றோ? இன்றுவரை பாரசீகர்கள் ஹிந்துக்களுடன் அதிகம் உறவாடிப் பழகுவதில்லையன்றோ? அங்ஙனமிருந்தும், ஒரேநாட்டில் சில நூற்றாண்டுகளாகக் கூடிவாழ்ந்து, சுகதுக்கங்களை ஒத்து அநுபவித்தமையால், அவர்களும் இந்தியராகி விட்டனர்! இதுவரை இந்தியப் பிரதிநிதிகளாக இங்கிலாந்தின் பாராளுமன்றத்தில் இலங்கினவர் மூவருமே பாரசீகர்களேயாவர்.

இதனால், இந்திய இந்திய சுயராஜ்யம் என்பது, இந்தியாவிலே கூடிவாழும் ஹிந்துக்கள், மகமதியர், இந்திய கிறிஸ்தவர், சிக்கியர், பாரசீகர், பவுத்தர் முதலிய பல பிரிவினர்களும், இந்தியர் என்னும் ஒரே சமூகத்தினராக, தமக்குப் பொதுவான பயிற்சிக்கும், அரசியல் நோக்கங்களுக்கும் வாழ்க்கைக் குறிக்கோளுக்கும் இணங்க,

தம்முள் திரிகாண சுத்தியோடு அவாவுறும் சுயேச்சாதிகார சுதந்தரத்தைக் குறிக்கும். இவர் அனைவரும் இப்பரத கண்டத்தைத் தம் ஜன்மபூமியாக, மாதாவாகப் போற்றி வணங்குபவர்; தம்முள் எவர் ஆண்ட போதினும், அவ்வாட்சியானது, எந்த அந்நிய ராட்சியிலும் சிறந்ததாகவும் இந்தியாவின் நிலையான பொதுநன்மையை நாடுவதாகவும் விளங்குமென்று நம்புபவர். இப்பொழுது நடக்கும் ஆங்கிலேயர் ஆட்சியை இந்தியர் விரும்பாததற்கு ஆள்வோரே காரணம்: ஏனெனில், அவர்கள் ஊர் காவலும் வரி தண்டுதலும் நன்கு நடத்துகின்றனரே யன்றி, ஜனங்களின் மற்ற க்ஷேமலாபங்களைக் கவனிப்ப தில்லை; இந்தியரது நாகரிகமும் பயிற்சியும் தம்முடைய நாகரிகத்துக்கும் பயிற்சிக்கும் மிகத் தாழ்ந்தன வென்றும், இந்தியரோடு தாம் உறவாடிப் பழகினால் தம் மேன்மை இறங்கி விடுமென்றும் நம்பி, அவ்வண்ணமே ஒழுகுகின்றனர். உலகமோ பலவிதம்; அவரவர் யுத்தி புத்திகளுக் கிணங்கப் பலவேறு நாட்டினரும் அவரவர் நாகரிக வழியில் மேற்செல்வது தான், உலகத்திலே பெரு நன்மையை விளைப்பதாகும். அவ்வாறின்றி, எவரானும் ஒரு சாதியார், தம் நாகரிகமே மற்று யாவற்றினும் மேலான தென்று கருதி, மற்ற நாகரிகங்களை யெல்லாம் ஒடுக்கிச் சிதைத்துத் தம் மதத்தையே உலகெங்கும் பரவச் செய்ய முயலுவது, நாசகாரணமே யாகும். இது சாஸ்திர சித்தாந்தம்; எவராலும் மறுக்கக் கூடாதது. இந்தியர்களில் சுயராஜ்யக் கூக்குரல் இதுகாறும் பயன்படாது கழிவதன் காரணம் யாதெனின், இந்தியர்களாகும் பல பிரிவினர்க்குள்ளும் போதிய அளவு ஒற்றுமை யில்லாமை தான்; வேற்றுமையுணர்ச்சி குறைந்து, ஒற்றுமை யுணர்ச்சி முறுகிவிடின், இத்தனை கோடி ஜனங்களின் ஏகோபித்த விருப்பத்தை உலகத்திலே எவராலுமே மறுக்க வொண்ணாது. இந்த ஒற்றுமை உணர்ச்சி உண்டாவதற்கு, இந்தியராவார் அனைவரும் ஒரே சாதியினராய் மதத்தினராய் இல்லாதிருப்பது ஒரு பெருந்தடையே எனினும், இந்நாள் வரை அவ்வுணர்ச்சி போதிய அளவு பலப்படாததற்கு இதுவே முக்கிய காரண மெனினும், அது கடக்க முடியாத தடையன்று; இராசியத் துறையில் ஒற்றுமைக்குச் சாதி மத ஒற்றுமை இன்றி யமையாத தன்று.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா: உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்"

என்று நாயனார் கூறியது இதற்கு நன்கு பொருந்தும். இப்பொழுது பூர்ண சுயராஜ்யத்தை அநுபவித்து வரும் மேல் நாட்டுத் தேசங்கள் பலவற்றிலும், அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலுமே கூட, பேதங்க ளிருக்கின்றன. இவ்வித வேற்றுமைகளினால் ஒற்றுமை உணர்ச்சியைத் தடுக்கும் விருப்பு வெறுப்புக்கள் இல்லாம லிருப்பது தான் அவசியம்.

“நடக்க வேண்டியதை உத்தேசித்து, நமது நாட்டிலே, சுயராஜ்யம் என்பது, ஹிந்துக்கள் மகமதியர்களுக்குள் உண்மையான விசுவாசமும் நட்பும், ஏழை ஜனங்களுக்கு வயிறு நிறைய ஆகாரமும், தீண்டாமை தொலைவதுமே என்று சொல்லுவேன்” என்று, மகாத்மா காந்தி சமீபத்தில் எழுதினார். இது கேவலம் உண்மையே: ஹிந்துக்கள் மகமதியர்களுக்குள் உள்ள அவநம்பிக்கையும் துவேஷங்களும் தொலைந்து, பட்டினியும் பசியுமாக வருந்தும் பல கோடி ஏழைகள் வயிறார உண்டு திருப்தி யடைந்து, ஹிந்துக்களுக்குள் தீராத மனக் கசப்பையும் வயிற்றெரிச்சலையும் விளைத்துக் கொண்டிருக்கும் தீண்டாமை யென்னும் பெரிய அநியாயமும் ஒழிந்து விட்டால், “நாம் எல்லோரும் இந்தியரே” என்னும் ஒற்றுமை யுணர்ச்சி அன்றே நமக்குள் அரும்பி மலர்ந்து, சுயராஜ்யக் கனியும் நம் கைய தாகிவிடு மன்றோ? ஆயின் நமது தற்கால நிலைமையில் அஃது எளிய தன்று; நினைத்த மாத்திரத்தில் கிட்டிவிடு வதன்று; மந்திரத்தால் விழும் மாங்கனி யன்று. முதலில், ஹிந்துக்களும் மகமதியரும், இந்திய ரென்னும் சகோதர பாவத்தை, திரிகரண சுத்தியோடு பாராட்டியும்; மத துவேஷங்களை மறந்து, கூடிய வரை ஒருவர்க்கொருவர் விட்டுக்கொடுத்து, விட்டுக் கொடுக்க முடியாத விஷயங்களில் அபிப்பிராய பேதத்தால் சிநேகம் சிதைவுபடாது சமரசமாக ஒத்துப்பிழைக்க வேண்டும். இதனினுமே முக்கியமாகும், கோடிக்கணக்கான ஏழைகளைக் கரையேற்றுவது: அவர்கள் இப்பொழுது வறுமை என்னும் வனாந்தரத்திலே, அறியாமை என்னும் அந்தகாரத்திலே, மூட நம்பிக்கைகள் என்னும் பைசாசங்களின் அடிமைகளாகக் கிடந்து உழலுகின்றனர்; எனினும், அவர்கள் ஒய்வொழி வின்றி உழைப்பதினால் தான், ‘மேலோர்’ என விளங்கிப் பல தத்துவங்கள் பேசும் நாம், சுக ஜீவிகளாய் வாழுகின்றோம்:

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்: மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்"

என்பது பொய்யாமொழி யாயின், நாமெல்லோரும் அவர்க்கு அடிமைகளே. உண்மை இங்ஙன மிருந்தும், அந்தோ! அவர்கள் உழவும் நாம் உண்ணவும், அவர்கள் நரகினும் கொடிய துயரங்களை அநுபவிக்கவும் நாம் சுவர்க்க வாசிகள் போல இன்பம் நுகர்ந்து உலாவவும் என்று ஏற்பட்டிருக்கின்றது! அவர்கள் வறுமையை நீக்கி, அவர்கட்கு அறிவொளியைக் கொடுத்து, மௌட்டியத்தைப் போக்கி, இப்பொழுது அவர்கள் கிடந்துழலும் பாழ்ங்கிணற்றை விட்டு மேலெழும்பும்படிக் கைதூக்கி, தன்மானமும் சுதந்தர தாகமும் சுதந்தரத்தை நம்முடன் பகிர்ந்து அநுபவிக்கும் சக்தியு முள்ள ஆண்மக்களாக அவர்களையும் ஆக்கினாலன்றி, நமக்குச் சுயராஜ்யம் எளிதில் கிட்டாது; ஒரு வாறு கிடைப்பினும் உண்மையான பூர்ணமான சுயராஜ்ய மாகாது. 'தீண்டாமை' யென்னும் தீங்கைப்பற்றி வேறு கூற வேண்டாமே? அது தொலைந்தாலன்றி மேலே சொன்ன பொதுஜன முன்னேற்றம் ஒரு நாளும் கை கூடாதே? இது நிற்க.

இது காறும் துரைத்தனத் துறையில் சுயராஜ்யத்தைப்பற்றிக் கூறப்பட்டது; இனி, ஜனசமூகத்துக்குள் ஒவ்வோர் இனத்தார்க்குள்ளும், ஆணோ பெண்ணோ ஒவ்வொரு நபருக்கும் தனித்தனியே யுரிய சுதந்தரத்தைப் பற்றிச் சிறிது கூறுதல் அவசியம். இத் தனியுரிமை, சில அம்சங்களில், நாட்டின் சுயராஜ்யத்தினும் முக்கியமாகும். பல துளி சேர்ந்ததே பெரு வெள்ளமாகின்றது. ஆற்றிலோ குளத்திலோ உள்ள நீரில், ஒவ்வொரு துளியும் மாசு படிந்ததா யேனும், விஷக்குண முடையதாயேனும் இருப்பின், அவ் ஆறு குளங்கள் சுத்தமா யிருத்தல் முடியாது. அது போலவே, ஜன சமூகத்தின், நாட்டாரின், தனி இனங்களாகும் ஒவ்வொருவரும், சுயராஜ்ய சுதந்தரராயின்றி, அடிமைக் குணமுடையோராய், பல தளைகளால் பிணிப்புண் டுழல்பவரா யிருப்பின், அவர்கள் கூடிய சமூக மட்டும் உண்மையான சுயராஜ்யத்தை வகித்து அநுபவித்தல் முடியாதென்பது, வெள்ளிடை மலைபோல் விளங்கும். ஒரு சிறுவனை வீட்டுக்குள் சருவதா பயமுறுத்தியும், அடித்தும், பலவித நிர்ப்பந்தங்களால் இமிசை செய்தும், அவன் மனப்படி எவ்விஷயத்திலுமே நடக்க முடி-

யாமல் வளர்த்தும் வருவோமாயின், அவன் வீட்டை விட்டு வெளியே தன்னோடொத்த சிறுவர் குழுவுக்குள் சென்றபோது, தெளிவான சுயபுத்தியும் வீரமும் நிலைகலங்கா நெஞ்சும் எண்ணிய வண்ணம் வினைமுடிக்கும் திறனும் சூழ்ச்சியும் உடையவனாய் விளங்க மாட்டானென்பது திண்ணம். அதுபோலவே, ஒரு சாதி அல்லது இனம், தன் வளாகத்துக் குட்பட்டவரை, சாதிக்கட்டுக்கு இன்றியமையாத மிகச் சில விஷயங்களில் மட்டுமின்றி, அதற்கு அவசிய மில்லாத எல்லா விஷயங்களிலும் தளைகளால் பிணித்து இமிசித்து, அவரைத் தம்மனச்சாக்ஷிப்படி நடக்க முடியாத பொய்யர்க ளாக்கி, அடிமைகளைப்போல நடத்தினால், அவர்கள், உலக வியவகாரத்திலே மட்டும் உத்தமகுண வீரர்களாய் நடந்து புகழுறுவது அசாத்திய மன்றோ? எப்பொழுது ஒருவன் ஒருத்தியை மணம் புரிந்து, மக்களைப் பெற்று, ஒரு குடும்பத்தை உண்டாக்குகிறானோ, அப்பொழுதே அவன், தன் இச்சைப்படியே எல்லாவற்றிலும் ஒழுக முடியாமல், தன் உரிமைகளில் சிலவற்றை இழக்கிறான். குடும்பத்தைப் போலவே சாதிக்கட்டும், சனசமூகமும் வேறுசில விலங்கங்களை ஏற்படுத்தி, அவன் தன்னுரிமைகளைக் குறைக்கின்றன. எனினும், சாதிக்கட்டினாலும் துரைத்தனத்தாலும் ஏற்படும் தன்னுரிமைக் கட்டுப்பாடு எவ்வளவு குறைவா யிருக்கிறதோ; தன் சாதியையும் சமூகத்தையும் விடாது, அவற்றுள் இருந்து கொண்டே, தன்புத்திப்படி, தன் மனச்சான்றின்படி ஒழுகும் சுதந்தரத்தை அவன் எவ்வளவு கையாளுகிறானோ, அவ்வளவு அவனுக்குச் சுகமும், சாதி சமூகங்களுக்கு நன்மைகளும், மானிடவர்க்கத்தே பெருநலமும் ஏற்படும். ஏனெனின், உலகம் ஒரு பெரிய பரீக்ஷைக் களமே: காலம் செல்லச் செல்ல, அநுபவ ஞானத்தைக்கொண்டு நாம் முன் செல்கிறோம்; முற்று முணர்ந்தவர் எவருமில்லை; பல வழிகளில் பலதுறைகளில் பலர் புகுந்துழைப்பதனால், பலதரப்பட்ட அநுபவங்கள் சித்திக்கின்றன; இவற்றில் ஏற்றவற்றைக் கைப்பற்றி விருத்தி செய்து, தகாதனவற்றை விட்டு விடுகிறோம்; ஆயின், தக்கதெது தகாததெது என்பதைக் காலமே காட்டவேண்டும்; உயிர்நூலின் முதல் உண்மை யாதெனில், 'ஒரே நிலை மரணம்; ஓய்வொழி வின்றி மாறிக்கொண்டேயிருத்தல் தான் உயிர்வாழ்க்கை' என்பது. இவ்வுண்மையைக் கொண்டு பொருத்தியே, உலகம் பலவிதமா யிருத்

தலே நன்றென்றும்; பல திறப்பட்ட நாகரிகங்கள் தழைத்தோங்க வேண்டுமென்றும்; எவ்வளவோர் சிறந்ததாயினும், யாதானும் ஒரு நாகரிகம் மற்ற நாகரிகங்களைச் சிதைத் தழித்துவிட்டுத் தானே எங்கும் மேலிட்டு வியாபிக்க முயலக் கூடாதென்றும் கூறுகிறோம். இதே உண்மையை ஓர் இனத்தார்க்குள்ளும் பொருத்திப் பார்த்தால், ஒவ்வொரு மனிதனும் கூடிய மட்டும் தற் சுதந்தரத்தைக் கையாண்டு, சுயேச்சாதிகாரியாய் வாழ்வது தான் மிக்க நன்மையை விளைக்குமென்பது, எளிதிற் புலப்படும்.

இப்பொழுது நம்மை ஆண்டுவரும் அங்கிலேயர், நமது சாதி மத ஆசார அநுஷ்டானங்களில் அதிகம் தலையிடுவதில்லை; எனவே, இவற்றில் ஏற்படும் வில்லங்கங்களெல்லாம் நாமாக ஏற்படுத்திக் கொள்வனவே. மேற்கூறிய தத்துவத்தை நினைத்து, ஹிந்து சனசமூகம் (என் மட்டில் யான் கூறுவேன்), தன் இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும், போதுமான சுதந்தரத்தைக் கொடுத்திருக்கிறதா? அநாவசியமான கட்டுப்பாடுகளை ஒழித் திருக்கிறதா? ஹிந்து சகோதர சகோதரிகளே! நீங்களே நினைத்துப் பாருங்கள்: ஒரு சிறிதும் இல்லை என்பதும், நமது அடிமைப் புத்திக்கும் நோக்கங்களுக்கும் நடத்தைக்கும், நம்முடைய சாதிக்கட்டுக்கள் எவ்வளவு காரணமென்பதும் வெளிப்படும். அகத்திலே அடிமைகள் அம்பலத்திலே சுதந்தர வீரர்களாய் இலங்குவ தெப்படி? இக்கட்டுரை பெருகுவதால் மற்றொரு சமயத்தில் இதைப் பற்றி விரித்துக் கூறுவேன்.

மேலே கூறியவற்றால், நமது அடிமை நிலைமைக்கு நாமே பெரும்பாலும் பொறுப்பாளிகள் என்பது விளங்கும்: அன்ன வல்திரங்களுக்கு முட்டுப்பாடின்றி, அவரவர் புத்திக் கூர்மைக்குத் தக்கபடி கல்விப் பயிற்சியையும் அறிவையும் பெற்று, இந்திய உலகம் (உயர்ந்தோர்) என இலங்குவோருள் ஒவ்வொருவரும், தமது மனச்சாக்ஷிக்குத் தக்கப்படி, தமது அறிவொளி காட்டும் வழியில் நடக்கும் உரிமையைத் தம் சாதியாரிடம் பெற்று, அவ்வண்ணமே, கற்றதற்குத் தக, தன்னெஞ்சறிவது பொய்யாது ஒழுகவேண்டும்; அத்தகைய மெய்யொழுக்கமும் மெய்யறிவும் ஏற்பட்டதன் பலனாக, ஹிந்துக்கள் மகமதியர்களுக்குள் இப்பொழுது காணும் மனஸ்தாபங்கள் நீங்கி, ஒற்றுமை யுணர்ச்சியும், இருவரும் இந்தியரென்னும்

சகோதர வாஞ்சையும் உண்டாக வேண்டும்; பெண்பாலாரும் தீண்டாதாரும் மற்ற ஏழைகளும் இப்பொழுது படும் கஷ்ட நிஷ்டூரங்களை நீக்கி, அவர்களுக்கு அறிவூட்டி, அவர்களைச் சுயராஜ்ய சுதந்தரத்துக்கு அருகராக்குவது நமது கடமையே என்னும் உணர்ச்சி உண்டாகி, அதற்கு வேண்டியவாறு பாடுபட்டு, அவர்களை மேம்படுத்த வேண்டும். மேலே கூறிய காரியங்களை இனிது செய்து முடிக்க, முதலில், அவற்றுக்கு அநுசரணையான சட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையும் ராஜிய சுதந்தரமும் இன்றியமையாதன வாதலால், நாம் இப்பொழுது "சுயராஜ்யம்! சுயராஜ்யம்!" என்று பதை பதைத்து, அதைப் பெறுமாறு பாடுபட்டு வருவது, நன் முயற்சியேயாம்; எனினும், சம்பூரண சுயராஜ்யத்தை நாம் அநுபவிக்கும் நல்ல நாள், இப்பொழுது வறுமை அறியாமைகளில் மூழ்கி யுழலும் கோடிக் கணக்கான நமது இந்திய சகோதரரும் சகோதரிகளும் விடுதலை யடைந்து, வெளிச்சம் பெற்று, நம்முடன் அப்பேருரிமையைப் பகிர்ந் தனுபவிக்க வல்லவர்களாகும் திருநாளே யாம்.

## தாய் நாடு*

("பாளைவாய்க்கமுகுபாய" என்னும் சிந்து மெட்டு)

1. 'இந்தநாடென் சொந்தநாடே, என்தனையே தந்தநாடே',
என்றுமகிழ் நெஞ்சிலென்றும் எண்ணிலா—ஒரு
வன்றனையும் கண்டதுண்டோ கண்ணிலே?
2. அந்நியமாம் நாடுபல துன்னி, அலை பின்னர், நல்ல
அன்னை நாடு துன்ன அடி கொள்ளவும்—அதை
உன்னிமகிழ் துள்ளிடாதோ உள்ளமே?
3. அன்னஒரு வன்னுளனேல், சின்ன அவன் தன்மைதேரும்:
அன்புகொண்ட வன்புகழ்கள் ஆர்க்கவே—கவி
இன்பின்அவன் தன்னைவத்தப் பார்க்கிலீர்!
4. பட்டப்பேர்கள் பெற்றபோதும், முட்டச்சிர்கள் முற்றுபோதும்,
மட்டில்அதி காரமுற்ற போதுமே,—தன
திட்டமொன்றே சூழும்அந்தப் பாதகன்,
5. வாழ்விலே, நற் பேரிழந்து, பாழிலுயிர் தான்அழிந்து;
வீழ்கையில் உதித்தவண்ண மாகவே—அந்தக்
கீழ்மகன்தான் மண்ணொடு மண்ணாகுமே!
6. பேர்பெரிதும், சீர்பெரிதும், ஓர்சிறிதும், பாரிலின்றி,
சீர்பெருகும் ஓர்விழியும் இன்றியே,—கவி
சேர்புகழ், கண்யங்களின்றிப் பொன்றுமே!

* Adapted by Mr. A. Madhaviah from Scott's *Breathes there the man*.

448 LXXIII

இலங்கையும் இலங்கையரும்.



(ஒரு சிங்களவப்பெண்.)

# இலங்கையும் இலங்கையரும்*

(372-ம் பக்கத்தின் தொடர்ச்சி)



Rev. F. கிங்ஸ்பேரி, B.A., சென்னை


லங்கையிலே 1921-ம் வருஷத்தில் கண்ட ஜனக்கணிதத்தின்படி நாற்பத்து நாலு லட்சம் ஜனங்களுண்டு. இவர்கள் :— சிங்களவர், தமிழர், சோனகர், உலாந்தர் மரபினர், போர்த்துக்கேசியர் மரபினர், பிரித்தானியர் முதலியவர்களே. பேசப்படும் பாஷைகள் : சிங்களம், தமிழ், இங்கிலிஷ் என்பவைகளே. சிங்களவரிற் பெரும்பான்மையோர் பௌத்தர்; தமிழரிற் பெரும்பான்மையோர் ஹிந்துக்கள். சோனகர் எல்லாரும் முகம்மதியர்; ஐரோப்பியர் எல்லாரும் கிறிஸ்தவர்கள். சிங்களவருள்ளும் தமிழரிலும் கிறிஸ்தவர்களானவர் பலநூறுயிரவர்.

தற்காலத்துள்ள ஜனங்களைப்பற்றி எழுதுமுன், பூர்வ காலத்து இலங்கையரைப்பற்றி ஆராய்வது சரி.

## பண்டை இலங்கையர்.

முதல் முதல், இலங்கையைப்பற்றி நாம் வாசிப்பது வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணத்திலே யன்றோ? அப்பொழுது அங்கே யிருந்தவர்கள் எல்லாரும் இராக்கதர் என்று சொல்லியிருக்கிறது. இராட்சதர் என்றும் குரங்குகள் என்றும் கரடிகள் என்றும் கழுகுகள் என்றும் வால்மீகி முனிவர் வருணித்திருப்பது திராவிடர்களையே. இராவணன், கும்பகர்ணன் முதலிய இலங்கை இராட்சதருக்குக் கரன், தூஷணன் முதலிய தென்னிந்திய இராக்கதர் நெருங்கிய பந்துக்களாகையால், இலங்கையில் இருந்த குடிகள் எல்லாரும் தென்னிந்தியாவி லிருந்து

* The blocks illustrating this article were kindly lent by the Secretary, C. L. S. Madras. *Ed.*



போதி விருக்ஷம்.



ஒரு வேடன்.



உயர்குல மாதின் சாதாரண உடை.

போனவர்களே என ஊகிக்கலாம். இப்பொழுது இலங்கையிலேயுள்ள குடிகள் எல்லாரினும் பழையவர்கள் வேடரே. "ஆலகால விஷத்தையும் நம்பலாம்" என்ற பாட்டிலே, "கள்ளர், வேடர் மறவரை நம்பலாம்" என்று காண்கிறோம். இலங்கையி லுள்ள வேடர் தென்னிந்தியாவிலுள்ள கள்ளர், மறவர் என்னும் சாதியாரைவிட மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் வசிப்பது காட்டிலே. இவர்களே இலங்கையின் ஆதிக்குடிகள் போலும்.

இதன்பின், மகத தேசத்திலே இலால நாட்டதிபதி சிங்கவாகுவுக்கு வங்க நாட்டரசன் மகள் பெற்ற விசயன், படைவீரர் எழுநூற்றுவரோடு இலங்கைக்கரை சேர்ந்து, எதிர்த்தவர்களைப் போரில் வென்று, இலங்கையின் ஒரு பாகத்துக்கு அரசனானான். இது கிறிஸ்துவுக்கு முன் 543-ம் வருஷத்திலே என்பர். விசயனும் அவன் படைவீரரும் இலங்கையிலிருந்த பெண்களை விவாகஞ் செய்தார்கள். விசயன் மனைவி நாககன்னிகை யாகிய குவேணி

என்பவள். இவளைத் தள்ளிவிட்டு, விசயன், மதுரையையாண்ட பாண்டியன் மகளொருத்தியையும் விவாகஞ் செய்தான். அதனாற் பாண்டி மண்டலத்துத் தமிழர் பல்லாயிரவர் இலங்கையை யடைந்தனர்.

வடஇந்தியாவி லிருந்து வந்த விசயன் முதலாயினோர் ஹிந்துக்களே. பாண்டிமண்டலத்தி லிருந்து வந்து குடியேறின தமிழரும் ஹிந்துக்களே, ஆகவே, இலங்கையின் பூர்வ குடிகள் தங்கள் பழைய மதங்களையும், குடியேறினவர்கள் இந்து மதத்தையும் அநுஷ்டித்தனர் என்பது திண்ணம்.

பின், மகத தேசத்திலே அசோகன் அரசாண்ட காலத்தில், பௌத்தமதம் தன் உச்ச நிலையிலிருந்த பொழுது, அரசன் சகோதரிகளி லொருத்தியும், அவன் மகன் மகிந்தனும், பௌத்த சமயத்தை இலங்கையிலே பிரசங்கிக்கும்படி, பல பௌத்த சந்நியாசிகள் சந்நியாசினியரோடு வந்து சேர்ந்தனர். இது நிகழ்ந்தது கி. மு. 250-ம் வருஷத்திலே. சீக்கிரத்தில் இலங்கையிலே பௌத்த மதம் பெருகினது. அன்று முதல் இன்று வரையிலும் இலங்கை பௌத்த மதத்துக்கு உறைவிடமான நாடுகளி லொன்றாகவே யிருக்கிறது. வட பௌத்தம் மகாயான நூல்களைப் பின்பற்றும்; தென் பௌத்தம் ஹீனயான நூல்களைப் பின்பற்றும். இலங்கையி லுள்ள பௌத்தம் ஹீனயானத்தைச் சார்ந்தது. பௌத்தமத நூல்வல்லார் பலர், ஹீனயான நூல்களே ஆதி பௌத்தத்துக்கு நெருங்கினவை என்பர்.

விசயனாதியர் மகத தேசத்திலிருந்து வந்தவர்கள் என்பது மெய். அங்கிருந்தே பௌத்தமதமும் இலங்கைக்கு வந்த தென்பதும் மெய்; பௌத்தமத நூல்கள் எழுதியுள்ள பாலி பாஷை வட பாஷை யென்பதும் மெய்; ஆகவே, சிங்கள பாஷையும் ஆரிய பாஷை யென்பது சத்தியம். ஆயினும், சிங்கள பாஷையைப் பேசுவோரும், பௌத்த சமயாநுசாரிகளுமாகிய சிங்களவரை ஆரியர் என்று நினைப்பது தவறு. சிங்களவர் திராவிடர்களென்பதற்குச் சந்தேகமே யில்லை. அவர்கள் பாஷையோ ஆரிய பாஷையின் மரூஉ.


இலங்கையி லுள்ள தமிழர் எல்லாரும் சேர சோழ பாண்டிய நாடுகளி லிருந்து இலங்கைக்குச் சென்று குடியேறினவர்கள் என்பது நிசம். இக்குடியேற்றம் திடீரென்று ஒரு காலத்திலே நடந்த சம்பவ மல்ல. ஐந்து முறை படை யெடுத்துச் சென்று குடியேறினர். இவை



தன் புருஷனுக்குச் சோறுகொண்டு செல்லும்
ஒரு தமிழப்பெண்.



பௌத்த மதாசாரியர்.



புத்தருடைய பல்.

சிங்களவர் அணியும் தலைமயிர் செருகூசி.

களை யன்றிக் கொஞ்சங் கொஞ்சமாய் ஆண்டுகள் தோறும் குடியேறினவர் பல்லாயிரவரா யிருக்கவேண்டும்.

(இன்னும் வரும்)

## பல துறைப் பொறுக்கு மணிகள்

### பத்திரிகை ஆராய்ச்சி

(380-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

### I. கல்வி விஷயக் குறிப்புக்கள்.

#### (1) ஜெர்மனியில் தொழில் கல்விச்சாலைகள்*

செயற்கைப் பொருள்கள் பலவும், ஜெர்மனி தேசத்திலே, வெகு தந்திரமாயும் உறுதியாயும் சொற்பவிலைக்குச் செய்யப்படுவது பிரசித்தம்- இதன் காரணம், அந்நாட்டிலே கைப்பாடுபட்டுப் பிழைக்கும் வேலையாளிகளுக்கென்று சிறந்த தொழிற்கல்விச்சாலைகள் பல்லாயிரக் கணக்காய் ஏற்பட்டுத் தொழிலாளிகளை வேண்டியபடி பயிற்றிவருவதேயாம். ஜெர்மனியில் நடைபெறும் இவ்விதப் பள்ளிக்கூடங்கள் எழுவகைப்பட்டன. (1) வியாபாரக்கலாசாலைகள்- இவை கடைகளிலும் மற்றவியாபார ஸ்தலங்களிலும் வேலையாயிருக்கும் புருஷரும் ஸ்திரீகளும், தங்களுக்கு ஒழிந்த நேரங்களில் ஒவ்வொரு வாரமும் சொற்பகாலம் சென்று, தங்களுக்கு உபயோகமாகும் அறிவைச் சம்பாதித்துக் கொள்ளும்படி ஏற்பட்டன. 1920-ம் வருஷத்தில் ஜெர்மனியில் இத்தகைய பள்ளிகள் 850 இருந்தன; அவற்றில் $1\frac{1}{2}$ லக்ஷம் பேர் கற்றுவந்தனர். இப்படிப்பு வாரம் தோறும் 8 மணிநேரத்துக்கு மேற்போகாமல், 3 வருஷம் பிடிக்கும் - வியாபாரமுறைகள், அத்துறையில் கடிதங்கள் எழுதுதல், கணக்கு, செல்வவிருத்திநூல், வர்த்தக சம்பந்தமான பூமிசாஸ்திரம், ஜெர்மன் பாஷையை நன்கு எழுதுதல், கடைக்கணக்குக்கள் வைத்தல் முதலியன கற்பிக்கப்படும். (2) கைத்தொழிற் கலாசாலைகள் – 18 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள், யாதானும் ஒரு கைத்தொழில் செய்து பிழைப்பவர், சராசரி தினம் ஒரு மணி நேரம், இப்பள்ளிகளில் பயின்று வருவர். தங்கள் கைத்தொழிலுக்குரிய இயற்கைப் பொருள்களின் குணகுணங்களையும், தாங்கள் கையாளும் கருவிகளையும், தொழில்முறைகளையும், கடன், உண்டியல், பாங்கி, நாணயம், ஏற்றுமதி, இறக்குமதி, கூலிக் கணக்கு, விலைவாசி, தொழில்களைப்பற்றிய சட்டங்கள், செல்வநூல், சுகாதாரமுறைகள், பண்டமாற்று முதலியனவற்றையும்

---

* Abridged from Mr. Benoy Kumar Sarkar's article extracted in the *Educational Review.*

பற்றி அவர்களுக்குப் போதிக்கப்படும். 1910–ம் ஆண்டில் இத்தகைய பள்ளிகள் 3600–ம், அவற்றில் கற்பவர் 5½ லக்ஷம் பேரும், மேல்தர உபாத்தியாயர்கள் மட்டும் 1500 பேரும், ஜெர்மனியிலிருந்தனர் - (3) தொழிற்சாலை (factory) வேலைக்கூட (workshop) கலாசாலைகள். இவற்றில் வாரத்துக்கு 12 மணிநேரமாக, மூன்று அல்லது 4 வருஷங்களுக்குப் பயிற்சி நடக்கும். ஆங்காங்குள்ள தொழிற்சாலைகளும் வேலைக்கூடங்களும் அததற்கு ஏற்றபடி கலாசாலைகள் ஏற்படுத்தித் தொழிலாளிகளுக்குப் போதித்து வருகின்றன - 1922–ம் வருஷத்தில், ஜெர்மனியில், இவ்வண்ணம் 13738 தொழில் மாணவர் கல்விபயின்று வந்தனர் - (4) ரயில்வே கலாசாலைகள் : —ரெயில்வே தொழிலாளிகளுக்குத் தெரிய வேண்டியவற்றையெல்லாம் நன்கு கற்றுக் கொடுக்க ரயில்வே ஸ்தாபனங்களே கலாசாலைகள் வைத்து நடத்தி வருகின்றன - (5) சுரங்கக் கலாசாலைகள் – வாரம் 7 மணிநேரமாக இவை 3 வருஷங்களுக்குப் படிப்பிக்கின்றன. தொழிலாளி மாணவர் தமக்கேயுரிய விஷயங்களில் மட்டுமன்றி, தொழில்சம்பந்தமான கணித சாஸ்திரம், நில அளவை, செல்வநூல், பூகற்ப சாஸ்திரம், சுகாதாரம் முதலிய பலதுறைகளிலும் பயிற்றப் படுகின்றனர். (6) நாட்டுப்புறத்துப் பள்ளிக்கூடங்கள் – கிராமவாசங்களில் தமது தாய்தந்தையர் செய்யும் பயிர்த்தொழில் முதலியவற்றில் அவர்களுக்கு உதவிசெய்து, அவர்களுடன் வேலை செய்யும் சிறுவர் சிறுமிகளுக்கென்றே இப்பள்ளிகள் நடத்தப்படுகின்றன - பயிரிடும் பருவங்களின் அவசியத்துக்குத் தக்கபடி பள்ளிக்கூடத்தில் படிக்கும் நேரமும் மாறுபடும். இப்பள்ளிகளில் விவசாயம், பலவகை எருக்கள், விதைகள், கால்நடைகளின் போஷணை, கால்நடைகளின் ஜீவனம் முதலியவற்றைப் பற்றி அறிவூட்டப்படுவதன்றி, ஜெர்மன் பாஷையை நன்கு எழுதவும், செல்வநூல் விஷயங்களும் கற்பிக்கப்படுகின்றன. (7) பணிப்பெண்கள் கலாசாலைகள். இவை நால்வகைப்படும் - (க) குடும்பவேலை நிருவாகம் (உ) வியாபாரம் (ஙு) விவசாயம் (ச) கைத்தொழில். ஜெர்மனியிலுள்ள பணிப்பெண்களில் நூற்றில் 90 பேர்க்குக் குறையாமல், 18 வயது நிறையுமுன், இப்பள்ளிகளில் யாதாவது ஒன்றில் பயிற்றப்படுகிறார்கள். வீட்டு வேலை, சமையல், தையல் வேலை, சுகாதாரம், ஜெர்மன் பாஷை, செல்வநூல், நோயாளிகளைப் பேணுதல், பல விளையாட்டுக்கள், சிலம்பங்கள், சங்கீதம், கணக்கு வைத்தல், படம் வரைதல், சுருக்கெழுத்து (Shorthand), டைப்ரைட்டிங், முதலியன, அவரவர் அவசியப்படி கற்பிக்கப்படுகின்றன. வாரம் 8 மணி நேரத்துக்கு மேற்போகாமல், மூன்று வருஷகாலம் இப்பயிற்சி நடைபெறுகின்றது......இனி இவ்வெழுவகைக் கலாசாலைகளுக்கும் பொதுவான சில அம்சங்களைக் கவனிப்போம். இவற்றில் பயில்வோரெல்லாம், யாதானும் ஒரு வேலை செய்து பிழைப்பவரே; படிப்பின்றி வேறு வேலையில்லாதவ ரல்லர். இவர் பொதுவாய், 14க்குமேல் 18க்குட்பட்ட வயதினரே. இவர்கள் எல்லோரும் தமது தொழில் சம்பந்தமானவற்றைக் கற்பதுமட்டுமன்றி; சரீர சௌக்கியத்துக்கு வேண்டிய பயிற்சிகள், விளையாட்டுக்களிலும்;

செல்வதால், சுகாதார முறைகள், ராஜிய சம்பந்தமான விஷயங்கள், சட்டங்கள் முதலியவற்றிலும் பயின்று நாட்டின் அங்கத்தினராய் நடந்து கொள்ளும்படி தேறுகிறார்கள்; அன்றியும், அப்போதைக்கப்போது சிறு பிரயாணங்கள் செய்து, பொருட் காட்சிச் சாலைகள், நாடக சாலைகள், படக்கூடத்துக்கள், மிருகக் காட்சிச்சாலைகள் முதலிய பல இடங்களையும் சென்று பார்த்துத் தம் அறிவை விருத்தி செய்து வருகின்றனர். இவ்வேற்பாடுகளெல்லாம், முதலாளிகள் தொழிலாளிகளின் மனோபீஷ்டப்படி நடப்பனவல்ல; ஒன்று, துரைத்தனத்தாரால் நடத்தப்படுகின்றன; அல்லது, அவர்கள் மேற்பார்வையில், அவர் நியமித்துள்ள சட்ட திட்டங்களின்படி நடக்கின்றன. இவ்வாறு தொழிலாளிகள் படிப்பது கட்டாயமே; எல்லாக் கலாசாலைகளிலும் ஜெர்மன் பாஷையைச் சரியாய்ப் பேசவும் எழுதவும் கற்றுக் கொடுக்கப்படுகின்றது. இப்படிப் பெல்லாம் கட்டாயமா யிருப்பதுடன் இலவசமாகவே கொடுக்கப்படுகின்றது. இவ்வாறு தொழிலாளிகள் ஆணும் பெண்ணும் அறிவூட்டிப் பேணிப்பயிற்றப்படும் நாடானது, கைத்தொழில்களில் மிகச்சிறந்து விளங்குவது வியப்பன்றே.

(2) கல்விப் பயிற்சி முறை:—கூரிய மதியும், ஆழ்ந்து அகன்ற சித்த விருத்தியும், பேரறிவும், உண்மைப் பற்றும், சொல்வன்மையும், அஞ்சாமையும் ஒருங்கு பொருந்தி இந்நாளிலே விளங்கும் ஆங்கில நூலாசிரியர்களை, ஒரு கை விரல்களில் எண்ணிவிடலாம். இன்னர் கூறுவதை, இவருடன் இசைவாரும் இசையாருமே, உள்ளமூன்றி உகந்து கேட்டுச் சிந்திப்பர். பேர்ட்ராண்ட் ரஸ்ஸல் என்பவர் இத்தகைய நாலைந்து மேதையருள் சிறந்த ஒருவராவர். இவர் "ஜன சமூகப் புனர் நிருமாணம் தத்துவங்கள்" அதாவது, 'நமது பழக்க வழக்கங்களையும் நாகரிகப் பயிற்சி முறைகளையும் சீர்திருத்தி, மீண்டும் அமைத்தற்கு அடிப்படையாகும் உண்மைகள்' என்ற பெயருடன் ஒரு நூலியற்றி யிருக்கிறார். வெளி வந்து சில நாட்களுக்குள் இந்நூலின் பல பதிப்புக்கள் செலவாகி விட்டன. இந்த நூலிலே பள்ளிகளிலும் கலா சாலைகளிலும் சிறுவர்க்குக் கல்வி போதிக்கு முறைகளைப்பற்றி அவர் கூறுவதன் சாராம்சமே பின்வருவது:—"அரசியல் மத விஷயம் முதலிய எல்லா நாகரிகத் துறைகளிலும், புரட்சிகள் நேராமல் உள்ளதை உள்ளபடியே நிலை பெற்று நடைபெறச் செய்வதற்கு, கல்வி போதனை முறைகள் ஒரு பலமான உதவியாகின்றன. யாதானும் ஒரு பழைய ஏற்பாட்டுக்கு அபாயம் நேரிடும்போ திருந்தால், உடனே கல்விப் பயிற்சியைக் கைக்கொண்டு, அதன் மூலமாக அவ் அபாயத்தை விலக்க முயலுவது வழக்கம். [உதாரணமாக, நமக்குள் வர்ணாசிரம தர்மத்துக்குக் கேடு விளையும்போ

லிருந்தால், பிள்ளைகளுக்குச் சிறு வயது முதலே அந்த தர்மத்துக்கு அநுசரணையாகும் நியாயங்களையும் போதனைகளையும் புகட்டுதலைக் கவனிக்க] குழந்தைகளின் சுதந்தரத்தை நாம் கவனித்தால், கல்வி போதனை முறைகள் இப்பொழுது நிகழ்வது போலின்றி, அவர்களுக்கு உண்மையான அறிவை யூட்டும்; அவர்கள் தாமாகவே ஆலோசித்துப் பார்த்து நிதானிக்கும் வழக்கத்தைக் கைப்பற்றித், தம் உள்ளப் போக்குப்படி அபிப்பிராயங்களையும் சித்தாந்தங்களையும் கொள்ளும்படி அவர்களைப் பழக்கும். ஆனால் இப்பொழுது நடைபெறும் போதனை முறைகளோ, ஒரு சார்பான அறிவையே கொடுத்து, ஒரு சார்பான ராஜீயக் கொள்கைகளையே விளக்கின்றன. சரித்திரம், பூகோள சாஸ்திரம், அர்த்த சாஸ்திரம், ராஜீய தத்துவ சாஸ்திரம், ஜீவ சரிதைகள், இதர இலக்கிய நூல்கள், யாவுமே இப்பொழுது பாரபக்ஷமான ராஜீய நோக்கத்தோடேயே நமது பள்ளிகள் கலாசாலைகளில் கற்பிக்கப்படுகின்றன.

"ஒவ்வொரு நாட்டிலும், அந்நாடே எல்லா விதத்திலும் சிறந்தது, அந்நாட்டாரே யோக்கியர், ஜயசீலர், அந்நாட்டின் மேன்மையைக் காப்பாற்றுதற் பொருட்டுப் போர் புரிதலும், உயிரையே துறத்தலுமே உத்தம தேசபக்தியென்று மாணவர் நம்பி யொழுகும்படி, சரித்திரம் கற்பிக்கப்படுகின்றது. வாட்டர்லூவில் நடந்த சண்டையைப் பற்றி வாசித்தால், ஆங்கிலேய சரித்திரம் வெல்லிங்டனையே புகழ்ந்தும், பிரஞ்சு சரித்திரம் நெபோலியனையே மெய்ச்சியும், ப்ரஷ்ய சரித்திரம் ப்ளூச்சரையே விதந்தும் கூறும். எனவே, உலகத்திலே போதிக்கப்படும் சரித்திரங்களெல்லாம் வீணை தற்பெருமையையும், தற்புகழ்ச்சியையும், யுத்தப் பிரியத்தையும் மாணவர் மனங்களில் விளைக்கின்றன. உலகத்திலே உள்ள பல நாடுகளும் பரஸ்பர அந்நியோந்நியத்துடன் ஒத்துவாழ வேண்டுமாயின், இப்பொழுது வழங்கும் சரித்திர நூல்களை யெல்லாம் ஒழித்து விட்டு, உலகப் பொதுவான ஒரு சங்கத்தை ஏற்படுத்தி, சுதேச பக்தியையும் தற்பெருமையையும் உண்டு பண்ணக் கூடியவற்றை நீக்கிப், புதிதாகச் சரித்திர நூல்களை அச்சங்கத்தாரால் எழுதுவித்து, அவற்றையே கலாசாலைகளில் கற்பிக்க வேண்டும்.

"கல்வி புகட்டுவதின் நோக்கம், மாணவர் தாமாகவே சிந்தித்துச் சித்தாந்தம் செய்யும் சக்தியை அவரிடத்தில் உண்டாக்குவதன்றி, குறித்த சில நம்பிக்கைகளை அவர்

மனத்தில் புகுத்திப் பதியச் செய்வதே என்றிருக்கும் வரை, தாராளமான வரம்பற்ற சித்தவிருத்தி அவருக்குண்டாகாது. சந்தேகத்துக்கும் அபிப்பிராய பேதங்களுக்கும் அதிக இடம் தரும் விஷயங்களில், உண்மையை அறிந்து திருப்தி யடைவதோடு நில்லாமல், உறுதியான நம்பிக்கைகளைக் கொள்ளும் வழியில் கல்வி போதிப்பது, சத்தியத்துக்கே துரோகம் செய்வதாகும். யாதானும் ஒரு கோட்பாட்டை உறுதியாக நம்பினால்தான் அதன் பொருட்டுப் போராடும் விருப்பமும் ஆவேசமும் ஏற்படுமாதலாலும்; தமது கொள்கைகளில் தாமே சந்தேகம் கொண்டவர்கள் அவற்றுக்காக மன்றுடி உயிரையும் இழக்கத்துணியா ராதலாலும், குழந்தைகளின் மனங்களை இளம் பருவத்திலேயே வேண்டியபடி வளைத்து, புது எண்ணங்கள் முளைத்து வளர்ந்தோங்க வொட்டாமல் வேலிகோலிச் சிறைசெய்து, ‘இப்பொழுது நடைபெறுவன சிறந்தன வாதலால் அவற்றையே நிலை நிறுத்த வேண்டும்; அவற்றுக்காக உயிரையும் கொடுத்தலே கடமை’ என்றெண்ணும்படி, கல்வி புகட்டப்படுகின்றது. அவனவனுக்கு இயற்கையில் அமைந்துள்ள புத்தியை முழுத் தன்னுரிமையோடு உபயோகப் படுத்தி, புதிய புதிய உண்மைகளைக் கண்டுபிடித்துப், பழையனவற்றில் பொய்யான பழுதானவற்றைக் கைவிட்டொழுகும் தற் சுதந்தரம், இப்பொழுதில்லை. கல்விப்பயிற்சியானது மாணவர்களின் உள்ளத்தையும் புத்தியையும் விருத்தி செய்து வளர்ந்தோங்கச் செய்யும் பொருட்டே என்பதின்றி, கல்வி போதனை முறைகளால் மாணவரை யடக்கித் தம் வழிப் படுத்தி, அவருடைய மன மொழி மெய்களின் மீது தகாததோர் ஆதிக்கத்தைத் தாம் பெறும் உபாயமாகக் கருதி நடத்தப்படுகின்றது. * * *

“ நாம் வாழும் உலகம் பல திறப்பட்டது; ஆச்சரியகரமானது. மேற்பார்வைக்குத் தெளிவாய்த் தோன்றுவன பல, ஊன்றி யோசிக்கு மிடத்து அறிவதற் கரிதாய் முடிகின்றன; நம்மால் என்றுமே கண்டறிய முடியாதென்று எண்ணப்பட்ட பல விஷயங்கள், புத்தி கோசரத்தினாலும் உழைப்பினாலும் கண்டு பிடிக்கப்பட் டிருக்கின்றன. * * சித்தவிருத்தியால் உண்டாகும் ஆனந்தத்தை, அவரவர் புத்திக் கெட்டிய மட்டும், கொஞ்சமோ அதிகமோ, ஒவ்வொருவர்க்கும் அளிப்பது தான், கல்விப் பயிற்சியின் குறியாகக் கருதவேண்டும்.

"மற்றெதையும்விட, மரணத்தையுமே விட அதிகமாக, மனிதர், சித்தவிருத்தியையே அஞ்சுகின்றனர். ஏனெனில், சித்த விருத்தியானது, (இளமை மூப்பு வறுமை செல்வம் இன்பம் துன்பம் எனும் யாதையும் மதியாது தன் வேலையை நடத்தும் யமதர்மராஜனைப் போல) உலகத்திலே எதையும் மதியாது, புரட்சிகளையும் நாசத்தையும் உண்டாக்கி விடுகின்றது; அதிகாரத்தை அஞ்சுவதில்லை; பழைமையைப் பாராட்டுவ தில்லை; சுகத்தைக் கருதுவ தில்லை; தொன்றுதொட்டு வரும் அநுபவ ஞானத்தையுமே மதிப்ப தில்லை. சித்தவிருத்தி யானது, நரகக் குழியையும் மனம் நடுங்காது உற்று நோக்குகின்றது. 'எல்லை வரம்பற்ற மோனசாகரத்தின் நடுவே காணும் ஒரு துளியே மனிதன்' என்பதை அது நன்கு அறியும்; எனினும், சிறிதும் நிலைகலங்காது, தானே பிரபஞ்சங்களுக் கெல்லாம் நாதன் போல, கம்பீரமாக அது மேற்செல்லுகின்றது. சித்தவிருத்தி பெரிதினும் பெரிது; கடிதினும் கடிது; சுயேச்சையாய் நடப்பது; அதுவே உலக விளக்கு; மனிதனது மாபெருங் கீர்த்தி. பயத்தை அடிப்படையாகக் கொண்ட எந்த ஏற்பாடுமே நீண்டு உயிர் வாழாது. மனித வாழ்க்கைக்கு நம்பிக்கையே சிருஷ்டி மூலம், பயம் அன்று. இது காறும் மனிதர் அடைந்துள்ள பெருமையாவும்; நன்மை கடைப்பிடி என்னும் முயற்சிகளால் உண்டாயினவே யன்றி, தீமையை யஞ்சி விலக்க முயலுவதால் விளைந்தன வல்ல. தற் காலத்துக் கல்விப் பயிற்சி பெரும்பயனெதுவும் தராததன் காரணம், பெரியதோர் லக்ஷியத்தை நம்பி, அது நடை பெறுமையே. சிறுவரைக் கல்வி பயிற்றுவார் உள்ளத்தில், பழையவற்றைக் காப்பாற்ற வேண்டு மென்ற ஆத்திர மிருப்பதன்றி, எதிர் காலத்தை நன்றாக்கி விளங்கச் செய்ய வேண்டுமென்ற போவாவும் முன்னோக்கமும் இல்லை. கல்விப் பயிற்சியானது, இறந்த காலத்தில் கண்டு பிடித்த அறிவைப் பேணிக்காப்பதுடன் நின்று விடாது, புதிய புதிய சிருஷ்டிகளால் வருங்காலத்தை விளங்கச் செய்ய வேண்டுமென்ற ஊக்கத்தோடுகூடியதா யிருக்க வேண்டும். இந்த முன்னோக்கத்தோடு கல்வி பயிற்றப் படுவோர், புத்துயிரும், நம்பிக்கையும், ஆனந்தமும் நிறைந்த உள்ளத்தினராய், பழங்காலத்தினும் சோபை மிக வருங்காலத்தைச் செய்யும் ஆர்வமுடையோராய், மனிதப் பிரயத்தனத்தினல் ஆகாத தொன்றில்லை என்னும் திடபக்தி வாய்ந்தவராய், விளங்குவர்."

(3) கல்விப் பயிற்சியில் கூட்டுறவு முறை :—பலர் கூடி வேலையைப் பங்கிட்டுப் பண்டங்களை உண்டாக்குவதிலும் ஆக்கிய பொருள்களை வியாபாரஞ் செய்வதிலும் கூட்டுறவு சிறப்பது போல, மாணவர் கல்வி பயிலுவதிலும் கூட்டுறவைப் புகுத்தி, ஓர் ஆங்கிலப் பள்ளிக் கூடத்தில் பரீக்ஷை பார்க்கின்றனர். இந்தப் பள்ளியில், எல்லா மாணவரும் தமக் கேற்பட்ட எல்லாப் பாடங்களையும் ஆராய்ந்து படியாது, பாடப்பகுதிகளை யெல்லாம் மாணவர்க்குள் பகிர்ந்து கொண்டு, ஒவ்வொருவன் ஒவ்வொரு பகுதியை ஐயந்திரிபற நன்கு தருவிக் கற்றுப், பிறர்க்குத் தான் கற்றவற்றை எடுத்தோதி, அவ்வண்ணமே தான் கல்லாது அவரில் மற்றொவ்வொருவரும் கற்றவற்றை அவரவர் மூலமாய்த் தான் அறிந்து, இவ்விதம் கூட்டுறவு முறையில் கல்விப் பயிற்சி நடைபெறுகின்றது. இதனால், கல்விப் பயிற்சி, காலநஷ்டமின்றி விரைவில் வளர்ந்தேறு மெனினும், மாணவர்க்குள் எல்லோரும் சமமான புத்திகோசர முடையவர்களா யிருக்க முடியாததால், மந்தர்களின் பொருட்டுக் கூரியமதியினரும் பின்தங்க நேருமென்பது தெளிவு.—

## II. மத விஷயக் குறிப்புக்கள்

**மதவிஷயம்** — "மாடர்ன் ரிவ்யூ" என்னும் ஆங்கிலப் பத்திரிகையின் ஆகஸ்டு மாதச் சஞ்சிகையில் அசாதாரணமான இரண்டு கட்டுரைகளைக் காணலாம். முதலாவது கிறிஸ்து மதத்தைப் பற்றியது ; இரண்டாவது ஹிந்து மதத்தைப்பற்றியது.

I. **கிறிஸ்தவமதம்**—கிறிஸ்தவர்களின் வேதம் பைபிள் என்பதையும் ; சமீபகாலம்வரை எல்லாக்கிறிஸ்தவர்களும், இன்னுமே சாமானிய கிறிஸ்தவருள் மிகப்பலரும், அப்புஸ்தகத்தை ஆதியோடந்தம் முழுவதும் கடவுளின் மெய்யான வாக்கென்றே நம்பியிருந்ததையும், இருப்பதையும், யாவரும் அறிவர். இதனாலேயே கிறிஸ்தவர்கள் அந்நூலை ஸத்தியவேதம் என்றும், கிறிஸ்தவரல்லாதவரை அஞ்ஞானிகள் என்றும் பெயரிட்டு வழங்குகின்றனர். இப்பொழுது ஐம்பது அறுபது வருஷங்களாக, சரித்திர நிபுணரும் இலக்கிய பண்டிதர்களும் பைபிளை ஆராய்ச்சி செய்ததன் பலனாக, பின் வருவதே பைபிளைப்பற்றிய உண்மையாகத் துலங்கி யிருக்கிறதென்று, கிறிஸ்தவ மதாசாரியாரான ரெவ். ஜபஸ் டி. ஸண்டர்லண்ட் (Rev. Jabez T. Sunderland, M. A., D. D.,) என்பவர் எழுதியிருக்கிறார் - அவர் கூற்றின் சுருக்கத்தை மட்டும் எடுத்து வரைவோம்:— (1) மனிதசாதியார் பலர்க்குள் வழங்கும் சமயநூல்களைப் போலவே பைபிளும் ஒன்று ; கடவுள் வாக்கல்ல. (2) பைபிள் ஒரு புஸ்தகமல்ல; வெவ்வேறான 66 நூல்களின் தொகுதியே ; இந்நூல்கள், வெவ்வேறான மூன்று பாஷைகளில், வெவ்வேறு தேசங்களில், ஆயிரமாண்டுகள் வரை இடையிட்ட வெவ்வேறு காலங்களில், அரசர் உழவர் அமைச்சர் இடையர் பண்டிதர்

முதலிய பலர்களால் எழுதப்பட்டவை; இவற்றுள் சில சரித்திரங்கள், சில கட்டுக்கதைகள், சில காவியங்கள், சில உபந்நியாஸங்கள், சில பழமொழிகள், சில ஜீவசரிதைகள், சில ஸிகிதங்கள், சில கலப்புக்கள்; எனவே, பைபிள் ஒரு நூலல்ல, (எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு என்பனபோல) ஒரு பேரிலக்கியத்தொகுதியாகும். (3) இவற்றுள் ஒன்றேனும் கடவுள் அநுக்கிரகத்தால், கடவுள்வாக்காக, மனிதர்க்குள்வந்து குதித்ததன்று; இப்பொழுது பிரசுரமாகும் மற்றப் புஸ்தகங்களைப்போல, எல்லாம் மனிதரால் எழுதப்பட்டனவே. (4) இவற்றை எழுதினவர் பலர்களின் ஊர் பேர் தெரியவில்லை; சிலர் பேரேதெரியும்; இவையாவும் கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு வருஷங்களுக்கு முன்னிருந்து கிறிஸ்துவுக்குப் பின் இருநூறு ஆண்டுகள்வரை எழுதப்பட்டன. (5) இப்பொழுது பைபிளில் காணும் நூல்கள், எழுதிய கால ஒழுங்குப்படி தொகுக்கப்பட்டனவல்ல; முன்பின் என்னும் முறை தவறித் தாறுமாறாகச் சேர்க்கப்பட்டுள்ளன. (6) பைபிள் ஒரு சமய நூல் அன்று; மனிதர்வாழ்க்கையையும் மதக்கோட்பாடுகளையும் கூறும் ஒரு பேரிலக்கியமே; அதை ஒரு சமயசித்தாந்த நூலாகப் பாவிப்பது தவறு. பல்வேறு மக்களின் சுகதுக்கங்களையும், கஷ்ட நிஷ்டூரங்களையும், அநுபவங்களையும், ஆசாபாசங்களையும், அவர்களுக்கு நேர்ந்த சம்பவங்களையும் கூறிச்செல்வது அது. இதனாலேதான் இன்றும் அது படிக்கப்படிக்கத் திகட்டாமல் திகழ்கின்றது. (7) பைபிள் யூதர்கள் என்னும் சாதியாரின் ஆயிரம் வருஷத்து வரலாற்றை விரித்துக் கூறுவது: கடவுளைப்பற்றிய அவர்களது கொள்கைகள் நாளடைவில் வளர்ந்து முதிர்ந்து மேம்பட்டதை அதிற் காணலாகும். மொத்தத்தில் பைபிளினால் மாந்தர்க்குத் தீங்கினும் நன்மையே அதிகம் விளைந்திருக்கின்றதெனினும், அதில் கூறப்படுவனவற்றையெல்லாம் கடவுள் ஆக்ஞை, வேதவாக்கு என்று நம்பி ஜனங்கள் நடந்து வந்ததால், அளப்பரிய அநியாயங்களும் போர்களும் அக்கிரமச் செயல்களும் கொலைகளும் உலகத்திலே இதுவரை நடந்திருக்கின்றன. பைபிளின் அறியாமையாலும் ஜனங்களுக்கு அதிலுள்ள மூட பக்தியினாலும் சாஸ்திரஞ்ஞான அபிவிருத்தி எவ்வளவோ தடைப்பட்டிருக்கிறது; இவையாவும், பைபிளின் ஒவ்வொரு வாக்கியமும் சொற்றொடருமே கடவுளின் தன்னொண்ணு வாக்கென்று மௌட்டியமாய் நம்பினதால் விளைந்த தீங்குகளே; இதுவே பைபிளைப்பற்றிய தற்கால சித்தாந்தம். கடவுள் ஒரு சாதியார்க்கு மட்டும் உரியவரல்லர்; ஜகதீசன்; அவருடைய அருளை ஒவ்வொரு சாதியாரிடத்தும் காணலாம்; அதனால் தான் ஒவ்வொரு மதத்திலும் சில சில உண்மைகள் விளங்குகின்றன. இம்மட்டோ; பல்வேறு சமய நூல்களில் போலவே நக்ஷத்திர மண்டலத்தின் ஜோதியிலும், புஷ்பங்கள் நிறைந்த பூங்காவனங்களிலும், சரித்திரங்கள், கலைகள் சாஸ்திரங்கள் முதலியவற்றிலும், தாயின் அன்பிலும், மகவின் அன்பிலும், மனிதர் தம்முள்ளத்தில் ஆழ்ந்தூன்றி யுணரும் அநுபவங்களிலும், லோகாசாரியர்கள் எனத்தகும் கவீந்திரர்கள், தீர்க்க தரிசிகள், ஞானிகள், தவசிகள் முதலியோர் வாக்குக்கள் மூலமாயும்,

கடவுள் நமக்குப் பல தத்துவங்களை விளக்குகின்றார். கடவுளின் வாக்கு யாதானும் ஒரு புஸ்தகத்தில் அடங்குவதன்று; அது எல்லையற்றது, அழிவற்றது.

நமது வேத சாஸ்திரங்களில் நம்மவர்க்குள்ள மூடபக்தியும், பலர் பலவாறு கொண்டுள்ள தப்பெண்ணங்களும் பிரசித்தம்- அவற்றின் உண்மைகளை ஆராய்ந்தறிந்து, இராக துவேஷமின்றி, மூடபக்தியை அஞ்சாது, அவற்றின் யதார்த்த குணங்களை வெளியிடும் நற்காலத்தையும் பெரியோரையும், அறிவாளர் அனைவரும் ஆவலுடன் எதிர்நோக்குவரென்பது திண்ணம்,

II. ஹிந்து மதப்பற்று — வங்காளத்திலே வைதீகாநுஷ்டான முள்ள பிராமண குலத்தில் பிறந்தவர், ஸ்ரீ. சியாமசரன் கங்குளி (Mr. Syamacharan Ganguli, B. A.) என்பவர், உத்தரபார கலாசாலையின் தலைவராயிருந்தவர், தனது மதசம்பந்தமான நம்பிக்கைகளைப் பற்றிக் கூறுவதன் சாராம்சம் பின்வருவது:— (1) இந்த உலகத்திலே ஒருகாலத்தில் உயிர்ப்பொருள்களே யில்லை, பிறகே உயிர் ஏற்பட்டது என்பது பௌதீக சாஸ்திர சித்தாந்தம். (2) மனிதர்க்கு மட்டுமே ஆத்மாவுண்டு என்று கிறிஸ்தவரும், ஜீவஜந்துக்களுக் கெல்லாம் ஆத்மா உண்டென்று ஹிந்துக்களும் நம்புகின்றனர். மனிதர்க்கிருந்தால், மற்றப் பிராணிகளுக்குமட்டும் ஏன் ஆத்மா இருக்கலாகாது? நம்முடைய அநுபவத்தில், ஸ்தூலசரீரத்தோடு கூடியன்றி, தனிமையாக, ஆன்மா அல்லது புத்தி எதையும், நாம் அறியோம்; ஆயினும், மனிதன் செத்து அவன் ஊனுடல் அழிந்தபின், ஆன்மா மட்டும் அழியாது தனிக்கின்றதென்பது உலக நம்பிக்கை. இது உலகத்திலே மனிதர் யாவருக்கும் தற்பவமாய்த் தோன்றும் இயற்கையறிவன்று; ஏனெனில், அறிஞர் சிலர் இதை நம்பவில்லை. சொப்பன அவஸ்தையில் நேரும் சம்பவங்களிலிருந்து இந்த நம்பிக்கை கிளம்பியிருக்கலாம். மனிதருடைய அநுபவஞானப்படி, ஸ்தூலப் பொருளின்றி ஆன்மாவை மட்டும் எவரும் கண்டதில்லையாதலால், இவ்விஷயத்தில், நான், உண்டென்றேனும் இல்லையென்றேனும் உறுதியாய்க் கூற முடியாத, அஞ்ஞானி (agnostic) தான். (3) ஹிந்துக்களும் பவுத்தர்களும் மட்டும், இறந்து பிறத்தல் என்னும் புனர்ஜன்ம நம்பிக்கையுள்ளவர்களா யிருக்கின்றனர் - உலகவாழ்க்கையில் காணும் ஏற்றத்தாழ்வுகளை, இக்கொள்கையும் கர்மபலவாதமும் ஒருவாறு விளக்குகின்றன. ஆனல், இக் கொள்கை நாமாக வைத்துக்கொள்ளும் சம்பாவிதமே யன்றி, ஆராய்ந்து தெளிந்த உண்மை யன்று. (4) ‘அனாதியான ஆதிமூலம்’ என்பது நமது புத்திக் கெட்டியதன்று. எனினும், பல கோடி மாந்தர், நம்மால்ஆதியைஅறிய முடியாத அனாதியான பரம்பொருள் ஒருவர் பிரபஞ்சத்தை சிருஷ்டித்து ஆண்டு வருகிறாரென்று நம்புகின்றனர். உண்மையை அறிய முடியாதென்றிருப்பதினும் இப்படி யொன்றை நம்புவது மனிதர்க்கு சுலபமா யிருக்கிறது. பிரபஞ்ச உற்பத்தியை நம்மால் அறிய முடியாது என்னும் கொள்கையை எவராலும் அசைக்க முடியாது.

அநாதியான கடவுளைப்பற்றிய நம்பிக்கையும் ஒரு சம்பாவிதமே; ருசுப்படுத்தக் கூடியதன்று.

## III. சில்லறைக் கலம்பகம்

பல பாஷைகள் பேசுவோரின் தொகை :—(1) இத்தாலிய பாஷை-3 கோடி ஜனங்கள் (2) பிரஞ்சு-4 கோடி (3) இஸ்பானிய-4 கோடி (4) ருஷிய-7 கோடி (5) ஜெர்மன்-7 கோடி (6) இங்கிலீஷ்-16 கோடி (7) தமிழ்-1¾ கோடிக்குள் (17, 151, 344) (8) தெலுங்கு-1½ கோடிக்குமேல் (16, 101, 728).

லண்டன் நகரத்து நாடகசாலைகள் :—90; ஸங்கீத சாலைகள்-600; தினந்தோறும் 4 லக்ஷம் பேர்க்குக் குறையாமல் அவ்விடங்களுக்குச் செல்கின்றனர்.

ஐரோப்பிய சைநியங்களின் தொகை விவரம் :—

| | | | |
|---|---|---|---|
| ருஷியா தேசம் | 1,003,000 | ஹாலண்டு | 163,262 |
| பிரான்ஸ் | 732,248 | பிரிட்டன் | 156,935 |
| ஸ்விட்ஸர்லண்டு | 500,000 | ஜெர்மனி | 100,000 |
| இதாலியா-போலண்டு | 250,000 | பெல்ஜியம் | 86,531 |
| ஸ்பெயின் | 240,000 | துருக்கி | 80,000 |


பிரிட்டன் சைநியத் தொகையில், இந்தியாவிலுள்ள சைநியத் தொகை சேர்க்கப்பட வில்லை.

கல்கத்தாவில் முளைப்பயிர் :—கல்கத்தா நகரத்திலும் அதையடுத்த சுற்றுப் பிராந்தியங்களிலுமாக, 600 அச்சுக்கூடங்க ளிருக்கின்றன. தினசரி பத்திரிகைகள்-31; வாரம் இருமுறை-3; வாரப் பத்திரிகை-70; மாதம் இருமுறை-15; மாதப் பத்திரிகை 177-ம் பிரசுரமாகின்றனவாம்.

வால் வெள்ளிகள் :—இவற்றால் மனிதர்க்குப் பெருங் கேடுகள் விளையக் கூடுமென்பது பழைய காலத்து மூட நம்பிக்கைகளில் ஒன்று. "தூமகேது புகைனத்தை தோன்றிய, வாம மேகலை மங்கையர்" என்பது கம்பர் வாக்கு. சமீபத்தில் வரப்போகும் ஒரு பெரிய வால் வெள்ளியினால் பூமியே அழியப்போகிறதென்று சில பத்திரிகைகளில் ஒரு செய்தி பரவி, ஜனங்களுக்குப் பயத்தைக் கொடுத்துவருகின்றது. இது வீண் புரளியே. வால் வெள்ளிகளும், கிரகங்கள் நக்ஷத்திரங்களைப் போலவே, சில இயற்கைப் பிரமாணங்களின் படி சுழன்று வருகின்றன. அவைகளினால் பூமிக்கு நாசம் நேரிடாதென்பது சாஸ்திர சித்தாந்தம். சாஸ்திரம் ஒரு புறம் நிற்க, தெய்வ நம்பிக்கையுள்ளவர்களும், கடவுள் பூமியை யப்படி அழித்து விடுவாரென்று எண்ண நியாயமில்லை.

கம்பியில்லாத் தந்தி-டெலபோன்-(Wireless) :—ஒரு பெரிய குளத்தின் நடுவே ஒரு சிறு கல்லை யெறிந்தாலும், நீரலைகள் நாலாபக்கமும் குளமெங்கும் பரவுகின்றன; அது போலவே, எங்கும் வியாபித்திருக்கும் ஆகாச அலைகளின் மூலமாக ஒலி பரவுகின்றது. நாம் பேசும்பொழுது பேச்சாலுண்டாகும் ஒலியலைகள் பரவி, அவை காதில் தாக்கினால், கேட்கக் கூடிய தூரத்திலுள்ள எல்லோருக்கும் பேச்சுக் கேட்கின்றது. சாதாரணமாய்க் கம்பி மூலமாகச் செல்லும் தந்தியும் டெலபோனும், ஆகாச வழியின்றி, மின்சார சக்தி ஒழுக்கின் மூலமாகக் கம்பிகளிற் சென்று சேருகின்றன. முதலில் ஒலியசைவுகள் மின்சார சக்தி யொழுக்குக்களாகி, அவ்வண்ணமே கம்பிகளிற் சென்று, பிறகு போய்ச் சேர்ந்த இடத்தில் சில யந்திரங்களின் மூலமாக மீண்டும் ஒலியசைவுகளாக மாறி, சமாசாரத்தைத் தெரிவிக்கின்றன. கம்பியில்லாத் தந்தியில், ஆகாச மார்க்கமாக ஒலியலைகள் நாலா பக்கமும் பரவுகின்றன. அனுப்புமிடத்தில் ஒரு சிற்றொலியையும் பல்லாயிர மடங்கு பலப்படுத்தி யனுப்பவல்ல யந்திரங்களும்; சமாசாரத்தைப் பெற்றுக்கொள்ளுமிடத்தில், சிறிய ஆகாச அலைகளையும் மீண்டும் ஒலி யலைகளாக மாற்றி, அவ்வொலிகளைப் பிரதிபலிக்கக் கூடிய யந்திரங்களும் இருக்கின்றன. ஒரு குளத்திலே ஏககாலத்தில் பல கல்களை எறியின் அலைக்குழப்ப முண்டாவது போலவே, ஒரே நேரத்தில் பல ஆகாச அலைகள் குழம்பக்கூடும். இதைக் கூடிய மட்டும் தடுப்பதற்கு வேண்டிய யுக்திகள் செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது இந்த வித்தை, பதினாயிர மைல் தூரம் வரை கம்பியில் சமாசார மனுப்புமளவு தேர்ந்திருக்கிறது. இது சர்வ சாதாரணமாக நிகழும் மேல்நாட்டு நாகரிக ப்ரதேசங்களில்,பல்லாயிரம் வீடுகளில், இவ்வாறாகச் சங்கிதக் கச்சேரிகள், சமாசாரங்கள், சொற்பொழிவுகள், முதலியவற்றை வீட்டிலிருந்தே கேட்கும்படி, ஒலியலைகளைப் பெற்றுக் கொள்ளும் சிறிய யந்திரங்களை (இவற்றின் விலை 100 ரூ முதல் 200 ரூ வரையாகும்) அமைத்துக் கொண்டு, (பத்திரிகைகள் மூலமாக முன்னதாகவே பிரசுரப்படுத்தப்பட்டபடி) தங்கள் தங்களுடைய மனோபீஷ்டம் போல, வாய்ப்பாட்டுக்கள், வாத்தியங்கள், பிரசங்கங்கள், உலக சமாசாரங்கள் முதலியவற்றைக், குறித்த காலங்களில், கேட்டு அநுபவிக்கின்றனர். சென்னையிலே கோட்டைப்பக்கத்திலும், பறங்கிமலையிலும் 'ஒயர்லெஸ் ஸ்டேஷன்'கள் இருப்பதைப் பலர் அறிந்திருக்

கலாம். சென்னையிலும் தனவான்கள் தங்கள் வீட்டிலிருந்தே 'ஒயர்லெஸ்' சுக சௌகரியங்களை அநுபவிக்கும்படி ஏற்பாடு செய்ய ஒரு சங்கம் சேர்க்கப்பட்டது. அச்சங்கத்தார், வேண்டிய இடத்தில் 'ஒயர்லெஸ்' கேட்கும்படியான சிறிய யந்திர மொன்றைக்கொண்டு, சில விடங்களில் நிரூபித்துக் காட்டினர். அந்த யந்திரத்தின் படமே யிது.



கம்பியில்லாத்தந்தி—ஒலி யந்திரம்.

தாவரங்களின் கண்கள் :—மரம் செடி கொடிகளுக்கு உணர்ச்சி உண்டென்பதை, தொட்டால் சுருங்கி (Sensitive Plant) என்னும் செடியினல் தெரிந்து கொள்ளலாம். ருசி உண்டென்பதை, அவைகள் பூமியினின்றும் கல் மண்களை உட்கொள்ளாமல் உப்புக்களை மாத்திரம் உட்கொள்ளுவதனல் அறியலாம், அவற்றின் காது, மூக்குக்களைப்

பற்றி நமக்குத் தற்காலம் ஒன்றும் தெரியாது. பிராணிகளைப் போல் தாவரங்களுக்கும் ஆகாரக் குழாய், சுவாஸக் குழாய்கள், உணர்ச்சி இந்திரியம் உண்டென்பது நெடு நாளாய்த் தெரியும். இரண்டு வருஷங்களுக்கு முன், ஸர் ஜே. ஸி. போஸ் (Sir. J. C. Bose) என்பவர், செடிகளிலும் நம் தேகத்திற்போல், ரக்தக் குழாய்களும் ஹ்ருதயமும் இருக்கின்றன வென்று காண்பித்தார். செடிகளுக்குக் கண்களும் இருக்கின்றன வென்று, மற்றோர் உயிர் நூல் ஆசிரியர் இப்பொழுது காண்பித்திருக்கிறார். இலைகளின் மேல் புறத்தில் (Epidermis), கரப்பு, ஈ, கொசு முதலிய ஜந்துக்களின் கண்களைப் போல, சிறிய கண்கள் இருக்கின்றனவாம். அவைகளினால் தான், அவரைக்கொடி முதலியன, பந்தல் கால் நட்டிருக்கும் திசை தெரிந்து, அத்திசையில் படருகின்றனவாம். —ரகு.

# சந்தேகம்

(வெருலாம் பிரபு பிரான்ஸிஸ் பேகன் என்பவர் இங்கிலீஷில் எழுதியது)

(429-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. வே. நாராயணையர், M. A., M. L., மொழிபெயர்த்தது.

பக்ஷிகளுள் வௌவால்களைப் போல, எண்ணங்களுள் சந்தேகங்கள் மட்டொளியிலேயே சஞ்சரிப்பன. அவைகளை அடக்குதல் அவசியம். அவைகளை எழவொட்டாமல் ஜாக்கிரதையாய் மனத்தைப் பாதுகாத்தல் வேண்டும்; மேகங்கள் போன்று புத்தியை அவை மறைக்கின்றன; நண்பர்களை இழக்கச் செய்கின்றன; காரியங்கள் ஒழுங்காக இடையூறின்றி நடைபெற வொட்டாது தடைசெய்கின்றன. அரசரைக் கொடுங்கோன்மைக்கும், கணவரைப் பத்தினிமாரிடம் சந்தேகங் கொள்வதற்கும், புத்திமான்களைக் காரிய சந்தேகத்திற்கும் மனச் சஞ்சலத்துக்கும் ஆளாக்குவது, இந்தச் சமுசய சித்தமே. இஃது இருதயத்தின் கோளாறு அன்று; மூளையின் குற்றமே. அல்ப அறிவே அதிக சந்தேகத்திற்கு ஆஸ்பதம் ஆதலால், சந்தேகத்தை உள்ளடக்கி அவியச் செய்ய யத்தனிப்பதை விடுத்து, மேன் மேலும் அறிவைப் பெற வழிதேடி, சந்தேக நிவாரணம் செய்துகொள்ள வேண்டும். மனிதராகிய நாம் வேண்டுவது என்ன? நம்மோடு வேலை செய்து பழகும் ஜனங்கள் எல்லோரும் பெருந்தன்மை பொருந்தியவரா யிருப்பர் என்று நினைக்கலாமா? அவ்வவர்களுக்குச் சொந்தமான நோக்கங்களும் உண்டு, நம்மிடத்திற் காட்டிலும் அந்நோக்கங்களிலேயே அவர்

கருத்தா யிருப்பர் என்பதை அறியோமா? ஆகவே, சந்தேக புத்தியை மட்டுப்படுத்துவதற்கு, சந்தேகங்களை உண்மை யெனக் கருதியும், அவற்றைப் பொய்களைப்போல் அடக்கியும், இரு வழியாலும் முயல்வதை விட, வேறு வழியில்லை. ஏனெனில், தான் சந்தேகிப்பவை உண்மையாயினும், அவை தீங்கு விளைக்கா வண்ணம் ஜாக்கிரதையுடன் இருப்பதற்கு, அம்மட்டும் சந்தேகங்களை உண்மை யெனக் கருதி, அவற்றைப் பிரயோஜனப்படுத்த வேண்டும்; மனது தானுகவே சேகரிக்கும் சந்தேகங்கள் வெறுமென சப்திக்கும் வண்டுகள் போல்வன; பிறர் சிருஷ்டித்து, மெல்லிய வசனங்களாலும் சம்பாஷணையிலும் நமது மனத்தில் புகுத்தும் சந்தேகங்களோ, கொட்டும் வண்டுகள் போல்வன. வாஸ்தவத்தில், இவ்விதச் சந்தேகங்களாலான காட்டை வெட்டி வெளியாக்கும் வழி, யாரைச் சந்தேகிக்கிருேமே அவரிடமேயே அச் சந்தேகங்களைக் கபடமின்றி மனம் திறந்து பேசுவதன்றி, வேறில்லை. ஏனெனில், சந்தேகங்களின் உண்மையை, முன்னிலும் அதிகம், சுலபமாய் ஒருவன் இவ்வாறு அறிந்து கொள்ளக் கூடுமன்றே? தவிர, மேன் மேலும் சந்தேகங்களுக்கு இடங் கொடாதபடி, அதிக ஜாக்கிரதையுடன் எதிராளியும் நடந்து கொள்வான்; ஆனல், நீச சுபாவ முடையவரிடம் இவ்வாறு நடந்து கொள்ளக் கூடாது; ஏனெனில், ஒரு தடவை சந்தேகத்திற்கு இடமானுர் என்று அறிந்தால், பிறகு அவர்கள் சத்தியமாக நடக்கமாட்டார்கள்.

இதைப்பற்றி இத்தாலியர் வசனம் ஒன்று உண்டு: "சந்தேகம் பக்திக்கு ஆஸ்பதம்" என்பதது. பக்திக்குச் சந்தேகமே வழி காட்டுவது என்பது அதன் தாத்பரியம். உண்மைஅப்படி யன்று; சந்தேகம், தன்னை நிவர்த்தித்துக் கொள்வதற்குப் பக்தியைத் தூண்டிவிட வேண்டும் என்பதே பொருந்தும். —தமிழ் நேசன்.

## மதிப்புரை.

(388-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 21. | நாயக வாக்கியம் விலை | 0 | 6 | 0 | அமிர்த கலாநிதி | |
| 22. | சமான் ,, | 0 | 4 | 0 | புக் டெப்போ, | |
| 23. | முஸ்லிம்களின் முன்னேற்றம் (ஒரு ராஜீய நூல்), | 0 | 6 | 0 | தபாற்பெட்டி 248, சென்னை. | |

இந்திய சுயராஜ்யத்துக்கு, முஸ்லிம்களும் ஹிந்துக்களும் ஒத்துழைப்பது இன்றியமையாதது. இவ்விரு பெரும் வகுப்பினரும், வாழ்க்கைக் குறிக்கோள் மதக்கோட்பாடு பழக்க வழக்கங்கள் முதலிய பல விஷயங்களிலும் ஒருவரை யொருவர் நன்கறிந்து; சமரசப் படக்கூடிய அம்சங்களில் சமரசப்பட்டும், அபிப்பிராய பேதங்களை நீக்க முடியாத அம்சங்களில் பொறுமையைத் தாங்கியும், பரஸ்பர அந்நியோந்நியத்தை வளர்த்து; இருவரும் இந்தியரே என்னும் சகோதரபாவத்தையே மற்றெதனினும் மேலாகக் கைக்

கொண்டு ஒழுகினாலன்றி, அத்தகைய ஒத்துழைப்புக் கை கூடாது. "தாருல் இஸ்லாம்" பத்திராசிரியரான தாவுத்ஷா சாஹிப் பகதூர் அவர்கள் (B. A.) இயற்றியுள்ள இச்சிறு நூல்கள் மூன்றும், ஹிந்துக்களானவர் தமது மகம்மதிய சகோதரரை நன்கறிதற்கு ஏற்ற கருவிகளாகும். மற்றெல்லாத் துறைகளிலும் போல இவ் விஷயத்திலும், அறியாமையே பெருந் தீங்குகளின் மூல காரணமாயிருக்கின்றது. இத்தகைய நூல்கள், மகமதியரைப்பற்றிய ஹிந்துக்களின் அறியாமையையும், மகமதியர்க்குள்ளேயே சாமானியர் தம் மதத்தையும் மகமதுநபியையும் பற்றித் தவறாகக் கொண்டிருக்கும் எண்ணங்களையும், நீக்க வல்லன. இந்நூல்களின் நடை செவ்விதாய் எளியதாயிருக்கின்றது. அடுத்த பதிப்பில், இந்நூல்களில் வரும் அரபிச் சொற்களுக்கு ஓர் அரும்பதவுரையும் சேர்த்துப் பதித்தல் நலமாகுமெனத் தோன்றுகிறது.

24. ஆனந்த கதா கல்பம். 4-வது பாகம். "பிரஜாநுகூலன்" ஆபீசு, ஸ்ரீரங்கம். விலை ரூபா 3. ஸ்ரீமான், S. G. இராமாநுஜலு நாயுடு அவர்கள் பிரசுரித்துள்ள இந்நூல், முன் மூன்று பாகங்களையும் போலவே, இனியதோர் கலம்பகமாகத் திகழ்கின்றது. தமிழ் மக்களுக்குள், அவருள்ளும் முக்கியமாய்ப் பெண்பாலார்க்குள், பலர்க்கு இது நல்லதோர் பொழுது போக்குச் சாதனமாகும். பிறர் புஸ்தகங்களிலிருந்து விஷயங்களை உள்ளபடியே எடுத்துக் கையாளும் பொழுது, (உதாரணமாக 225-ம் பக்கம்) கடன்வாங்கிய மூலங்களைக் குறிப்பது இலக்கிய மரபு.

25. கம்பநாடர்.—காரைக்குடி ஸ்ரீமான், மோ. வே. கோவிந்தராஜையங்காரவர்கள், சென்ற ஆவணி முதல் பிரசுரித்து வரும் (வருஷ சந்தா ரூபா 5. சாச்வத சந்தா ரூபா 25.) இப்பத்திரிகையின் (இது காறும் வெளிவந்துள்ள) 9 மலர்களும் கிடைத்துள்ளன. ஒரு கவியின் நூல்களையும் அவனைப்பற்றிய மற்ற விஷயங்களையும் துருவி ஆராய்தற்கென்று, ஒன்றல்ல, பல பத்திரிகைகளும் சங்கங்களும் பல்லாண்டுகளாக, பலப்பல தலைமுறைகளாக உழைப்பது, கவிவாணரின் அருமையை அறிந்து பாராட்டும் மேலையர் வழக்கம். கம்பராமாயணம் போன்றதோர் ஈடெடுப்பில்லாத அரும் பெருங் காப்பியத்துக்கு இன்றுவரை சுத்தமான பதிப்பொன்றில்லாதிருத்தலே, நம்மவர் மனப்போக்கையும் சிரத்தைக் குறைவையும் நன்று விளக்கும். இதற்குப் பல காரணங்கள் உள; அவற்றை விரிக்கப்புகின், விஷயம் பெருகும். ஸ்ரீமான் ஐயங்காரவர்கள் இப்பெரும்பணியை ஒருத்தனியே ஏற்றுக்கொண்டு முன்வந்துழைத்து வருவது, நாடெல்லாம் சிலாகிப்பதோடு நின்றுவிடாது, அவரவரால் இயல்வதுகரவாது உதவி புரிதற்குரியது. இப்பத்திரிகை, (1) கம்பரும் வான்மீகரும் (2) கம்ப ராமாயண ஆராய்ச்சி (3) கம்பராமாயணக் கவி (4) கம்பராமாயண வசனம் என்ற நான்கு தலைப்புக்களின் கீழ், வெவ்வேறான நான்கு பகுதிகளாக, விஷயங்களைக் கூறிச் செல்கின்றது. பல பண்டிதர்கள் கூடிச் செய்தற்குரிய இப்பெரும் பணியை (இலக்கிய ஆராய்ச்சி விஷயங்களிலும் கூட ஒற்றுமையைவிடப் பொறாமையும், மனோ

விசாலத்தைவிடக் குறுகிய நோக்கமும், புத்தியும், பேராசையுமே மலிந்து காணும் நம் நாட்டிலே அத்தகைய ஒத்துழைப்புக் கூடாமற்போக) ஐயங்காரவர்கள் ஒரு தானே முன்வந்து மேல்நடத்தி வருவது, அவர்களுடைய இருமொழிப் புலமைக்கும், மனோ தைரியத்துக்கும், கம்பர் மாட்டுள்ள வாஞ்சைக்கும் போதிய சான்றாகும்; எனினும், பல பண்டிதர் கூடி இப்பணியைச் செய்ய முடியாமற்போனது விசனிக்கத்தக்கதே. இப்பத்திரிகை செல்லும் முறையில், எடுத்துக் கொண்ட விஷயங்களில் இரண்டாவது நீங்கிய மற்ற மூன்றும், பத்திராசிரியர் எதிர்பார்ப்பதுபோல, ஆறாண்டுகளில் முடியா என்பது திண்ணம்; பின்னும் ஓர் ஆறாண்டுகளில் முடிதலே சந்தேகம். இது நிற்க: கம்பரைப்பற்றிய ஆராய்ச்சிப் பகுதியில் சில பாகங்களை வாசித்துப் பார்த்ததில், கம்பர் காலம் கி. பி. ஒன்பதாவது நூற்றாண்டு—"இற்றைக்கு 1037 ஆண்டுகளுக்கு முற்பட்டது" என்பதும்; அவர், ஒட்டக்கூத்தர் புகழேந்திகட்கு முற்பட்டவர், சக கால வாசி யல்லர் என்பதும், இவ்வாசிரியரது துணிபுகளாக விளங்குவதுடன்; சங்க நூல்கள் கிறிஸ்துவுக்கு முந்திய காலத்தன வென்று இவர் கருதுவதாகவும் தெரியவருகின்றது. கடைச்சங்கம் கி. பி. மூன்றாவது நூற்றாண்டது என்பதே பலர் துணிபாயிருக்க, அதை வெட்டும் முகாந்தரங்கள் ஒன்றும் கூறாமலே, அக்காலம் கிறிஸ்து பிறப்புக்கு முன்னதென்று கூறி யிருப்பது வியப்பைத் தருவதுடன், பல பண்டிதர் கூடி இப்பெரும் பணியைச் செய்தற்கில்லையே என்னும் விசனத்தைப் பெருக்கி, மீண்டும் உள்ளத்தை உறுத்துகின்றது. தமிழ் நாடும் தமிழ் மொழியும் இருக்கும் நிலைமையிலே, முடவன் கொம்புத்தேனுக் காசைப்படுவது போல வீணாசை கொண்டு வருந்தாது, தமிழரனைவரும் இப்பத்திராசிரியருக்குத் தம் நன்றி யறிதலைக் காட்டி, அவர் கைக்கொண்ட பொது வேலை விரைவில் நிறைவேறுதற்குரிய உதவிகளைத் தம்மால் இயன்ற மட்டும் செய்யக் கடவர்.

25. சிந்தாமணி.—பத்திராதிபர், சகோதரி வி. பாலம்மாள் அவர்கள், மயிலாப்பூர், வருஷ சந்தா ரூபா 5.

26. தமிழ்மகள்.—பத்திராதிபர், ஸ்ரீ மா. மங்களம்மாள் அவர்கள், யாழ்ப்பாணம், வருஷ சந்தா ரூ. 5.

இவ்விரு மாதப்பத்திரிகைகளும், பெண்பாலார் முன்னேற்றத்தைக் கருதிப் பெண்பாலார் நடாத்துவனவாய், ஆகஸ்டு மாத முதல் வெளிவருவன; க்ரௌன் ஸைஸ் முறையே 32, 40 பக்கங்களும், இரண்டு மூன்று படங்களும் அடங்கியன. தனக்குத் தான் உதவுவதுபோலப் பிறர் உதவ வொண்ணாதாதலின், இவ்வாறு தம்மவர் மேம்பாட்டைக் கருதிப் பெண்பாலர் இருவர் உழைக்க வந்திருப்பது சிலாக்கியமே.

27. மஹரிஷிகள் சரித்திரம்.—முதலிரண்டு பாகங்கள் - ஒவ்வொரு பாகத்தின் விலை ரூ. 1–8–0. ஆசிரியர்: பெரியகுளம் ரிடையர்ட் வக்கில் ஸ்ரீ. எம். ஆர். ஸ்ரீநிவாஸையரவர்கள் - இந்நூலின் இரண்டுபாகங்கள் கிடைத்தன. ஆசிரியர், இராமாயண மகா

பாரதங்களிலும் பதினெண் புராணங்களிலும் கூறப்படும் மகரிஷிகளில் 214 பேர்களின் வரலாறுகள், ஆங்காங்கு சிதறிக்கிடப்பனவற்றை ஒருங்கு சேர்த்துக் கூறத்தொடங்கி, இவ்விரண்டு பாகங்களிலும் 84 சரித்திரங்களைக் கூறி முடித்திருக்கிறார். இவ்வரலாறுகள், இரண்டொருவரிச் சிற்றெல்லையும், 60 பக்கங்கள் வரைப் பேரெல்லையும் வாய்ந்தன. புராண இதிகாசங்களில் கூறியுள்ள கல்பக் கணக்குக்களையும், காலநிருணயத்தையும், ரிஷி சரித்திரங்களையும், ஆசிரியர் முழுதும் நம்புவது மட்டுமின்றி, இன்றும் அந்த ரிஷிகளில் பலர் மலைகள் குகைகளில் வாழ்கின்றனர் என்று நம்புகிறார். இது நிற்க: இத்தகைய வரலாறுகள், நமது பண்டை நூல்களைப் படிப்பார்க்கும், பிறர்க்கும் அதிகம் பயன்படுமென்பது திண்ணம். இந்நூல் சாதாரணமான பேச்சு நடையிலேயே பெரும்பாலும் எழுதப்பட்டிருப்பது, இதன் பிரயோசனத்தைப் பெருக்குமென்பதும் நிச்சயம்; எனினும், கிராமியமான பதங்களையும் அச்சுப் பிழைகளையும் கூடியவரை நீக்க முயன்றால், இந்நூல் இன்னும் மிக்க பயன்தருமென்று கூறவும் வேண்டுமோ? இதை ஆசிரியர் கவனித்தல் நன்றும்.

28. பாய் பரமானந்தன்.—[பராசக்தி பிரசுராலயம்-சேலம்-விலை ஒரு ரூபா] இது ஒரு நாவல்; தென்காசி, சொக்கலிங்கம் அவர்கள் வட இந்தியாவில் நடப்பனவற்றின் விருத்தாந்தமாக எழுதியது. தமிழ் நடை தெளிவாய் நளினமாயிருக்கிறது. இக்காலத்திலே வெளிவரும் பல தமிழ் நாவல்களை விட இது நன்றாயிருக்கிறது. இதுவே இவ்வாசிரியரது முதல் முயற்சியாகும். ஆசிரியர் தனக்கு நேரில் நன்கு தெரிந்த நடையுடை பாவனைகளையும் மக்களையும் பற்றி இன்னும் எழுதுதல் பொருந்தும்.

29. குரு உபதேசம்.—(இன்டியன் ஸ்டார் ஆபீசு, அடையாறு - விலை 4 அணு) இது "At the Feet of the Master" என்னும் ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு - பகுத்தறிவு, நிராசை, நல்லொழுக்கம், அன்பு இவற்றைப்பற்றிய நீதிபோதனைகள் அடங்கியது - புதிய கருத்துக்கள் ஒன்றுமே யில்லை யெனலாம். இதை ஆங்கிலத்தில் எழுதின ஆல்கியோன் என்ற ஜெ. கிருஷ்ணமூர்த்தி யென்பவரை, அடையாற்றாரும் அவரைச்சார்ந்த சிலரும் அவதார புருஷராய் மதிப்பதுண்டு. அவருக்கு இந்நீதிகளை உபதேசம் செய்தவர், மகாபாரத பீஷ்மாசாரியாரின் சிறியதகப்பனாக, 'தேவபி' என்று விளங்கினவராம்; இப்பொழுது அவர் Master K. H. என்ற மஹாரிஷியாக எங்கேயோ இருக்கின்றனராம். இச்சிறு நூலில் காணும் சாதாரண நீதிகளுக்கு இவ்வளவு தொலை செல்வது, மலை கெல்லி எலிபிடிப்பது போல வேறு சிலர்க்குத் தோன்றலாம்.

# படைப்பின்பப் பஞ்சகம்

அமுதகவி ஆக்கியது

கட்டளைக் கலித்துறை.

1. கல்லாத மூடன் ஒருமடையன், பிற கற்பனைகள்
வல்லாதவன், தன் மடைத் தொழில் வாய்ப்பில்,
[மணம், சுவை, கேழ்[1],
எல்லாம் சிறந்த புதுக்கறி ஒன்றை இயற்றிடுமேல்,
பொல்லாத தன்உளம் பூரித்துப் பூரித்துப் பொங்
[கிடுமே.

2. உயர் தொழிலாளி ஒருவன், தன்மூளை உடல் ஒழுக்கும்
வியர் நீர்பொழிய விளைபயன் உண்போன், வினைத்
[திறனால்
அயர்வற[2] த் தான் செயும் ஒன்(று) அழகாயின்,
[அகமகிழ்ந்து,
துயரம் எலாமறந்(து), அவ்வினை இன்பினில் தோய்கு
[வனே.

3. மண்ணில், மரத்தில், மலை[3] யில், படா[4] த்தில், மன
[உடலக்
கண்ணில்[5], கருத்தினில், கண்டதோர் காட்சி கவின்
[கதுவ[6],
உண்ணின்ற உண்மை பொய்யா(து), ஒருசிற்பி
[பொறித் திடுமேல்,
எண்ணும் தொறும், அதைக் காண்தொறும், இன்
[பத்தை எய்துவனே.

4. வானத்தில், மண்ணில், மனோரதவாரி[7]யில், வாங்குஸ—ர
கானத்தில், ஓர்கவி, ஐம்புலன் உள்ளம் கவர் கவினை[8],
மோனத்தில் உன்னி, மொழிகளில், பண்ணினில்,
[மூட்டிடுமேல்,
ஈனத்துயரம் எலாம் கடந்(து) இன்பத்தில்வய்குவனே.

5. சடமாம் அணுமுதல் தானவர்[9] ஈறுத் தரணி[10] எலாம்
உடனுகத் தம்மைப் பெருக்கு தொழிலை உகந்திடுவ;
திடமானஉண்மைஇதாகச், செகத்தைச்சிருட்டித்(து),
[அதில்
நடமாடும் ஒன்றினை ஆனந்தம் என்றேநவில்லொணுமே.

---

1. நிறம்; 2. தளர்வின்றி; 3. கல், சிலை; 4. சீலை; 5. அகக் கண்ணாலேனும் புறக்கண்ணாலேனும்; 6. அழகுபொருந்த; 7. Ocean of fancy; 8. அழகை; 9. தேவர்; 10. உலகம்.

# நமது கோயில்கள்

ஸ்ரீ. K. R. R., சாஸ்திரி, M. A., F. R. E. S. (London), விழுப்புரம்.



ட்டசபையிலே கோயில்கள் விஷயமான மசோதா நிறைவேறின தருவாயில், நம் கோயில்களைப்பற்றி எழுதுவது, அதன் ஸம்மந்தமா யிருக்குமோ என்று நினைக்கக் கூடும். கோயில் விஷயமாய்ச் சட்டசபை சிரத்தை எடுக்க வேண்டுமா என்றகேள்வி ஒருபுறமிருக்க, இவ்விஷயத்தைப்பற்றி, கன்னியாகுமரி முதல் ப்ருந்தாவனம் வரை, யான் யாத்திரை சென்றதின் பயனுக உணர்ந்த சிலவற்றை மட்டும் தெரிவிக்கிறேன்.

வட இந்தியாவி லுள்ள கோயிற்களுக்கும், நம் கோயிற்களுக்கும் என்ன வித்தியாஸம்? கோயிற் பிரவேச விஷயமாய் வட இந்தியாவில் புகார் கிளம்புகிறதா? இதைப் போன்ற சிலகேள்விகளுக்குப் பதிலளிக்கவும் துணிகிறேன்.

நம் கிராமங்களின் அமைப்பை உற்றுநோக்குமிடத்து, கீழ் திக்கில் பரமசிவனுரது கோயிலும், மேல்திசையில் மஹாவிஷ்ணுவின் ஆலயமும் காணப்படும். வட இந்தியா கிராமங்களில் இப்படி யிருப்ப தில்லை. நம் நாட்டில் எங்குப்பார்த்தாலும் கோயிற்களே; வடக்கே அப்படி யில்லை.

நம் புண்ய க்ஷேத்ரங்களுக்குச் சுமார் 2 மைலுக்கப் பாலிருந்தே, ஆகாயத்தை ஊடுருவிச் செல்லும் கோபுரங்களைத் தரிசிக்கிறோம். விசாலமான மதில்கள், பலிபீடம், த்வஜஸ்தம்பம், உட்பிராகாரங்கள் முதலியன, நம் கோயிற்களில் காணப்படுகின்றன. நெருக்கடியான வட இந்தியாவிலோ, சிறுகட்டடங்களே கோயில்களா யிருக்கின்றன. சுமார் 6 பக்தர்கள்கூட அக்கோயிற்களில் போய் வந்தனை வழிபாடுகள் செய்வதரிது. பஞ்சகால பூஜை, அபிஷேக நிவேதனங்கள், அழகிய தீபாராதனை முதலியவை, நம்பிர

தேசத்தில்தான் விசேஷம்; ப்ருந்தாவனத்திலுள்ள ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி கோயிலையும், குஜராத்தில் கிருஷ்ண பகவான் ஆலயத்தையும் ஒத்துப்பார்த்தால் இவ்வித்யாஸங்கள் வெளிப்படும்.

வடக்கில் பக்திவிசேஷம்:— பூரியிலுள்ள ஜகன்னாதராலயத்தையும், ஸ்ரீ காசிவிசுவநாதர் கோயிலையும் உற்றுநோக்குமிடத்து, தென்னிந்தியாவி லுள்ள கோயிற்களில் பக்தி அவ்வளவு பிரதானமா யிருக்கிறதா என்ற கேள்வி என் மனத்திலுதித்துக் கொண்டே யிருக்கிறது. "தூரத்துப்பச்சை" என்கிற நியாயம், உண்மையான தோற்றத்தை மறைக்கலாம்; எனினும், பூரி ஜகன்னாதரை நான் தழுவி தர்சனம் செய்தபொழுதும், என்மனமார விசுவநாதருக்குக் காசியில் நானே அர்ச்சனை பண்ணினபொழுதும் எனக்குண்டான ஆனந்தத்தை, வேறோரிடத்திலும் அனுபவித்ததில்லை. தென்னாட்டில் வெளி ஆரவாரங்களால் பக்தியுண்டாக வேண்டியிருப்பதுபோல் தோன்றுகிறது; வடக்கேயோ வெனில், ஜீவாத்மா பரமாத்மா விடத்தில் லயமடைய வேண்டிய தன்மையை நேரி லுணருகிறோம். ஸ்ரீரங்கத்தி லுள்ள ரங்கநாத ஸ்வாமி, பக்த கோடிகளிடத்தில் பயத்தை உண்டுபண்ணலாம்; அழகர் கோயில் (மதுரைக்கருகே) பெருமாள், அவர் கோர (?) ஸ்வரூபத்தால் நம்மைப் பயமுறுத்தலாம்; மதுரை மீனாக்ஷியம்மன், அவள் தாராள குணத்தால் நம்மைக் காக்கக்கூடும்; திருப்பதி வேங்கடாசலபதி, நம்மிடத்தில் தியாகபுத்தியை யுண்டுபண்ணலாம்; பழனியாண்டவன், எல்லோருக்கும் ஆவேசத்தை யுண்டுபண்ணலாம்; சிதம்பரம் நடராஜ மூர்த்தி, பரமரகசியத்தை புத்தியுள்ளோருக்குப் புகட்டலாம்; எனினும், பூரி, காசி, ஸ்ரீராம கிருஷ்ணபரமஹம்ஸாது தக்ஷிணேச்வரம், இந்த மூன்று புண்ய க்ஷேத்திரங்களிலும் எனக்குண்டான ஆனந்தம் வேறொரு ப்ரதேசத்திலும் உண்டாகவே யில்லை.

ஆண்டவன்முன் எல்லோரும் ஒன்றே:— இதற்கு என்னகாரணம் சொல்வது? பூரியிலும் காசியிலும் எந்த ஜாதியினராயினுஞ்சரி, பகவானைத் தழுவி தர்சனம் செய்யலாம். நம் பிராமணர்கள், இதரஜாதியாருக்குக் கதவை மூடி, என்ன பக்தி விசேஷம், என்ன மோக்ஷபதவியை யடைந்து விட்டனர்? நம் மூதாதைகளைப் பார்க்குமிடத்து, நாம் சிறு ஜந்துக்களே; அங்ஙன மிருக்கையில், பிறவிச் செருக்கினால் பயன் யாதாவ துண்டோ? ஆண்டவன் இப்

போலி வித்யாஸங்களில் ஏமாறுகிறவரல்லர். நந்தனாரைவிட மேலான சாந்தமூர்த்தியை நாம் காணமுடியுமா? தபஸினால் சக்தி ஸம்பாதித்தால், நாம் கோராமலே மரியாதையை இதரர்கள் காண்பிப்பார்கள். அக்காலத்து, இவ் வித்யாஸங்களை எதிர்பார்க்க வேண்டியதே யில்லை. இந்த யுகத்திற்கோ, பக்தியையே விசேஷமாகப் பெரியோர்கள் கூறியுள்ளார். நம் சகோதரர்களை நாம் ஹிம்சை செய்வதை அறவே ஒழிக்கவேண்டும். தடாகங்கள், புண்ய க்ஷேத்ரங்கள் இவைகளை, எதற்காக ஒரு ஜாதியார் மட்டும் உபயோகிக்கவேண்டும் என்ற தத்வம் எனக்குத் தென்படவே யில்லை. இவ்வெளித் தோற்றங்களி லல்ல, நம் பக்தி விசேஷத்திலேயே நமக்கு மார்க்க மிருக்கிறது.

பூரியில் தரிசனம் செய்தபிறகு, இந்த ஒற்றுமைத் தத்வம் தென்படா விட்டால், சாந்தமான ஹிந்துவும், பலசாலியான முகம்மதியனும் ஒற்றுமையா யிருக்க முயலா விட்டால், இதரஜாதியாரைத் தெற்கில் நாம் குரூரமாய் நடத்திவருவதை நிறுத்தாவிட்டால், ஜாதித்வேஷத்தை நாம் மறக்காவிட்டால்,—மானிட ஜன்ம மெடுத்துக் கோயில் குளங்களுக்குப்போய் வருவ தெல்லாம் பெரிய பித்தலாட்டமே!.

பௌத்தர் ஆட்சியில்

## அருங்கலை மாட்சி

ஸ்ரீ. மஹேசகுமார சர்மா, சிங்கப்பூர்.



கிறிஸ்து சகத்தின் ஆறும் நூற்றாண்டு கழிந்தது. அரிய விழாவும் நிறைந்த செல்வமும் திகழ, ஏழாம் நூற்றாண்டு பாரத நாட்டிற் பிரவேசித்தது. அக்காலத்தே பாரததேசம் வலியிழந்து ஒளிகுன்றிச் சோர் வுற்றிருக்க வில்லை; தாழ்மையாலும் வறுமையாலும்

துன்ப மடையவில்லை; துயருழந்து நெட்டுயிர்க்கவில்லை; ஆசையழிந்து அலறி ஓலமிட்டுழல வில்லை; நச்சு நோய்களுக் கிரையாகி நைந்தேங்கவில்லை. அப்பொழுது பாரத நாடு நிமிர்ச்சியோடும் மலர்ச்சியோடும், சுயாதீனத் தன்மைக்குரிய வன்மையால் உரங்கொண்டு, விழுமிய பொருட் செல்வத்தினால் பெருமை பெற்று விளங்கியது. அவ்வமயத்தில் ஆரிய மக்களின் புகழ் பூரணநிலை எய்தியிருந்தது. ஆரிய நாகரிகத்தின் விளைவாக, உலகத்தில் ஒப்பற்ற தத்துவஞானம் உதயமாயிற்று. இன்பம் அளிக்கும் கவிதைக் கொடியில் நறுமணங்கமழ்ந்து தேன் பிலிற்றும் பூக்கள் மலர்ந்தன. வான நூல், கணித நூல், மருத்துவ நூல் முதலிய அருங்கலைகள் ஓங்கிச் செழித்தன. அரசர்க்கரசன் ஹர்ஷவர்த்தன சீலாதித்தனது செங்கோலாட்சியின் சிறப்பால் பாரதபூமி பல்வகைச் செல்வத்தாலும் நிறைந்து பொலிந்தது. மராடர் கோன் மாவீரன் இரண்டாம் புலகேசியின் வீரத்தினால் பாரத நாட்டின் போற்றல் முன்னினும் அதிகமாகத் திகழ்ந்தது. நாலந்தா வித்தியா பீடத்தில் கலைமகளுக்கு ஆற்றப்பட்டுவந்த அரிய வழிபாட்டினால் பாரதவர்ஷத்தின் பெருமை நாற்றிசைகளிலும் பரந்தது.

ந + அலம் + த தாதி இதி நாலந்தா - என்று இம்மொழிக்கு வடநூலார் விற்பத்தி கூறுவர். ஆரா அருங்கல்வி யளிப்பது என்று அது பொருள்படும். அத்தகைய நலம் வாய்ந்த நாலந்தையில் வேதமாதாவாகிய வாணிக்கு ஆற்றப்பட்ட இவ்வழிபாடு பாரத தேசத்தின் ஒரு பிரதான கீர்த்தியாகும். நாலந்தை கயைக்கு அருகில் இருந்தது. இக்காலத்திய படகாம்வ் என்னும் கிராமமே முற்காலத்திய நாலந்தை என்பர் சிலர். அஃதெவ்வாறாயினும், நாலந்தை பௌத்தர்களின் பரம பவித்திர வித்தியா - ஸ்தானம் என்று பெயர் பெற்று விளங்கியது. அவ்விடத்தில் முன்னம் ஒரு மாந்தோப்பு இருந்ததாம். ஒரு தனிகனாகிய வணிகன் அதைப் புத்தபிரானுக்குக் கொடையாக அளித்தானாம். புத்தபகவான் அம் மாந்தோப்பில் பன்னாள் கழித்தாராம். நாளாவர்த்தியில் அவ்விடத்தில் ஒரு வித்தியாலயம் நிறுவப்பட்டது. வெவ்வேறு காலத்தில் வாழ்ந்த தருமசீலர்களாகிய பௌத்த ஸ்தபதிகளின் வள்ளன்மையாலும் வினைத்திறத்தாலும் அவ்வித்தியாலயம் வளர்ந்து உந்நதியடைந்தது. பிரஸ்தாவகாலத்தில் நாலந்தா வித்தியாபீடம் பாரத நாடெங்கணும் மிகச் சிறந்த கல்விக்கு உறைவிட மென்று பிரசித்தி பெற்றிருந்தது.

பௌத்த தருமத்தின் பதினெண் வெவ்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பதினாயிரம் சமணர்கள் இவ்விடத்தில் வதிந்து, அறநூல், அளவைநூல், விஞ்ஞானம், கணிதம், இலக்கியம், மருத்துவம் முதலியவற்றில் பாடங்கேட்டு ஆராய்ச்சி புரிந்து வந்தனர். மனதைக் கவரும் மரங்கள் செறிந்த தபோவனத்தில் இம் மகாவித்தியாலயம் மிளிர்ந்தது. நான்கு நிலைகள் கொண்ட ஆறு மாட மாளிகைகளில் வித்தியார்த்திகள் வாசம் செய்தனர். வெவ்வேறு நூல்களைப் போதிப்பதன் பொருட்டு நூறு வித்தியா மண்டபங்கள் இருந்தன. இவையன்றி சாஸ்திர விற்பன்னர் அந்யோந்யம் அளவளாவியிருக்க மத்தியஸ்தானத்தில் பல பெரிய மாளிகைகளும் அமைக்கப்பட்டிருந்தன. பேரரசன் சிலாதித்தன் ஆசிரியருக்கும் மாணவருக்கும் வேண்டிய ஊண் உடை மருந்துகளைத் தன் சொந்தச் செலவில் உதவி வந்தான். நகரத்தின் கோலாஹலம் இவ்வித்தியாலயத்தின் அமைதியைக் குலைக்கவில்லை. உலகத்தின் தூண்டுதல்களும் மனோ விகாரங்களும் அதன் தூய்மையைக் கெடுக்க ஆற்றலற்றன வாயின. மாணவர்கள் இந்தப் பவித்திரமான சாந்திநிகேதனத்தில் உபசாந்தியோடு சாஸ்திர சிந்தனையில் அமர்ந்திருந்தனர். நாலந்தா வித்தியாலயம் கேவலம் புறச்சௌந்தரியத்துக்கு மட்டும் பிரசித்தி யடைந்ததன்று. அகச் சௌந்தரியத்துக்காகவும் அது மிக்க கியாதி அடைந்திருந்தது. அதன் ஆசிரியர்கள் ஞானத்திலும் தீர்க்க திருஷ்டியிலும் பிரசித்தி யடைந்திருந்ததைப் போலவே அதன் மாணவர்கள் சாஸ்திர ஞானத்திலும் சாஸ்திர சிந்தனையிலும் விரிந்த பயிற்சி பெற்றிருந்தனர். இப் பெயர்பெற்ற வித்தியாபீடத்துப் பேராசிரியரின் திருநாமம் சிலபத்திரனார். இவர் வயதில் மட்டும் மூத்தவராயிராது, நூலறிவிலும் முதிர்ந்தவரென அனைவராலும் மதிக்கப்பட்டு வந்தார்; சகல சாஸ்திரங்களிலும் வல்லவராய் சர்வதந்திர ஸ்வதந்திரராய் விளங்கினார். தரும நிஷ்டையிலும் தூர திருஷ்டியிலும் ஆழ்ந்த நூலறிவிலும் ஈடும் எடுப்பும் அற்று விளங்கிய இந்த ஞான விருத்தர் நாலந்தா விசுவ வித்தியாபீடத்தின் திலகமாய்த் திகழ்ந்தார்.

சீனதேசத்துப் பிரசித்த யாத்திரிகனாகிய ஹியுன் த்ஸங் என்னும் பௌத்தபிக்ஷு அக்காலத்தில் பாரத நாட்டுக்கு வந்திருந்தான். அவன் கலைமகளின் இந்தக் களியாட்டிடத்திற்கு வரும்படி அழைக்கப்படுதலும், அவ்

வழைப்பை விநயத்துடன் ஏற்று நாலந்தைக்கு வந்து சேர்ந்தான். வித்தியாலயத்திற் பிரவேசிக்குங் காலையில் இருநூறு ஞான விருத்தராகிய சமணர்கள் அப் பிரசித்தி பெற்ற அதிதியை முறைப்படி உபசரித்தனர். இவர்களுக்குப் பின்னணியில் பெருந் தொகையினரான பௌத்தர்கள், சிலர் குடை பிடிப்பாரும், சிலர் சாமரம் வீசுவாரும், சிலர் கம்பீரமான ஸ்வரத்தில் தேசாந்தரியின் புகழ் பாடுவாருமாய் அவனைப் பலவகையிலும் பெருமைப் படுத்தினர். இவ்வாறு ஆதரத்தோடும் ஸம்மானத்தோடும் ஏற்கப்பெற்று ஹியுன் த்ஸங்க் வித்தியாலயத்தின் பூஜ்யபாதராகிய பேராசிரியரிடம் போந்தான். சீலபத்திரனார் குருபீடத்தில் வீற்றிருந்தார். ஹியுன்த்ஸங்க் ஆசார்ய பீடத்தின் திருமுன்னே நின்று அப் பேராசிரியருக்குப் பணிவுடன் அபிவாதனம் செய்தான். அது முதல் ஹியுன்த்ஸங்கைச் சீலபத்திரனார் தம் சிஷ்யர் குழாத்தில் ஒருவனாகச் சேர்த்துக் கொண்டார். சீன ஸாம்ராஜ்யத்தில் சிறந்த தத்துவஞ்ஞனென்று போற்றப் பட்டவனும், பற்பல நாடுகளில் யாத்திரை செய்து பல விஷயங்களைப் பிரத்தியக்ஷமாய்க் கண்டறிந்தவனும், அறிவு விழுப்பத்தின் பொருட்டு எல்லோராலும் சென்னி சாய்த்து வணங்கப்பட்டவனுமாகிய இந்தப் பௌத்த தேசாந்தரி, ஞான ஸம்பாதனத்தின் பொருட்டு வித்தியா தேவியின் இவ்விளையாட்டகத்தில், பாரத நாட்டின் இப் பேரறிஞருக்குச் சீடனாயினான். வித்தியாலயத்தின் சிறந்த மாளிகை ஒன்றில் ஹியுன்த்ஸங்க் இருப்பதற்கு இடம் அளிக்கப்பட்டது. அவனுக்கு அநுசரராகப் பதின்மர் அமர்ந்தனர்; இருவர் சமணர் நியதமாய் அவனுக்குப் பணிவிடை புரியப் பணிக்கப் பெற்றனர். சீலாதித்த மகீபதி அவனது தினசரிச் செலவை ஏற்றுக்கொண்டான். ஹியுன்த்ஸங்க் இவ்வாறு ஆசிரியரது ஆதரவையும் மாணவரது நட்புரிமையையும் பெற்று ஐந்தாண்டு வித்தியாலயத்திற் கழித்தான். அஞ்சு வருஷகாலம் அருங் கலைக்களஞ்சியமாகிய சீல பத்திரனாரின் பாதமூலத்தில் அமர்ந்து, பாணினீய வியாகரணமும், பகவத் புத்தாநுசாஸநமாகிய திரிபிடகமும், பிராமணரின் பற்பல சாஸ்திரங்களும் கற்றுப் பாரங்கதனானான். பிறகு பாரதநாடு முழுதும் யாத்திரைசெய்து ஆங்காங்கு புத்தபிரானது சைத்தியாலயங்களைத் தரிசித்து, பௌத்த நூல்களின் ஸ்ரீகோசங்களை ஏராளமாய்ச் சேகரித்துக்கொண்டு, இலங்கைத் தீவினின்று கப்பலேறிக் கடல் யாத்திரையில் பல இடக்

கண்களை அநுபவித்துக் கடைசியில் ஸ்வதேசமாகிய சீன
நாட்டுக்குத் திரும்பிச் சென்றான். அங்கே தன் மடத்தை
யடைந்து பௌத்த சமயத்தின் மும்மணிகளை அநவரத
மும் போற்றி, அநேக பவுத்த நூல்களைச் சீன மொழி
யில் பெயர்த்தெழுதி, பாரததேச முதலிய நாடுகளில்
தான் செய்த யாத்திரைகளின் விருத்தாந்தத்தையும்
இயற்றினன். பின் கூறப்பட்ட நூல் ஆங்கிலத்தில் மொழி
பெயர்க்கப்பட்டு, அதில் அகப்படுத்தி யிருக்கும் கால
சரித்திரத்துக்கு முக்கிய பிரமாணமாக இதிகாச நூலா
ரால் அங்கிகரிக்கப் பெற்றுள்ளது. அந் நூலினின்றே
இவ்வரலாறு தொகுத் தெழுதப்பட்டது.

இப்பொழுதோ நாலந்தா வித்தியாபீடத்தின் முன்
னைய எழிலும் ஏற்றமும் ஒழிந்துபட்டன. காலத்தின்
கொடுமையினாலும், பாரத நாட்டாரின் சிரத்தை யின்மை
யாலும், பாரதி (கலைமகள்) தேவியின் இந்த லீலாபூமி இப்
பொழுது இடிந்து விழுந்து மண்ணோடு மண்ணாய்க் கிடக்
கிறது. பாரதநாட்டுப் பண்டைப்பெருமையின் வீழ்ச்சி
யென்னே!

The "Hindu Nesan"

(THE LEADING TAMIL WEEKLY.)

Commands a decent circulation-stands as a best medium for advertising.

News of varied interest a special feature.

"இந்து நேசன்"

வாரப்பதிப்பு-சந்தா விவரம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1-வருஷத்திற்கு | ... | ரூ. | 6 | 0 | 0 |
| 6-மாதத்திற்கு | ... | ,, | 3 | 8 | 0 |
| 3-மாதத்திற்கு | ... | ,, | 1 | 12 | 0 |
| மலாய், மோரீஸ், நெட்டால், முதலிய வெளிநாடுகளுக்கு. | | | | | |
| 1-வருஷத்திற்கு | ... | ,, | 10 | 0 | 0 |
| தனிப்பிரதி | ... | ,, | 0 | 2 | 0 |

*For particulars apply to:*

THE MANAGER

THE "HINDU NESAN"

65, Armenian Street,

MADRAS.

480

## பஞ்சாமிர்தம்

இப்பெயர் பெற்ற பத்திரிகையில் நான்கு பகுதிகள் வரப் பெற்றேன். முதலாவது பகுதியைப் பார்த்ததும் இதன் கற்பனை உணர்ந்து தமிழ் உலகத்திற்கு உணர்த்தக் கருதினேன். அப்பால் பிறர் மதிப்பையும் அறிய விரும்பிச் சிறிது தாழ்த்தேன். 12-வயசுள்ள சிறுமியர் இருவர் இதனைப்படித்து என்னிடம் திரும்பத் தெளிவாக ஒப்புவித்ததுடன் தம் தாய்மாரிடமும் கொண்டு வாசித்து மகிழ்விப்பாராயினர். சீமைக் கடிதத்தை வாசித்த B.A., மாணவர் ஒருவர், அதன் தமிழ் நடையை நோக்கி, B.A., Hons. பட்டம் பெற்றவர் இவ்வளவு எளிதான நடையில் எழுதுகிற போக்கை வியந்து, தன் மனைவியை வாசிக்கும்படி செய்வாராயினர். ஓர் வைதீக முதியார் இப்பத்திரிகையை வாசித்து உருசித்த இனிமைபற்றி அடிக்கடி பத்திரிகை வருங்காலத்தை விசாரியா நிற்பர்.

தேவாரத்தில் "கூவல் ஆமை குரை கடல் ஆமையைக்கூவலோ டொக்குமோ குரைகடல் என்றல்போல்" என்று கூறியவாறு, தாம் வசிக்கும் பூமியே புண்ய பூமியென்றும், மற்றவை மிலேச்ச தேசமென்றும் எண்ணி மகிழ்கின்ற நம்மவருக்கு அறிவூட்டுமாறு, பிற தேசத்து நடை உடை பாவனைகளை உள்ளபடியே உணர்த்துவதை மேற்கொண்ட இப்பத்திரிகை, பெரும் பயன் அளிக்குமென்பதில் ஐயமில்லை. அறிவின் பக்குவத்திற்குத் தக்கவாறு உபகரிக்கும் தன்மை பூண்ட இப்பத்திரிகை தமிழ் மக்களுக்குப் பெரும் பேருகவே மதிக்கப்படும். இப்பத்திராசிரியரது கல்வித்திறனும் சாதுரியமும், இப்பத்திரிகைக்கு விஷயதானம் புரியும் அறிவாளர்களது கல்வித்திறனும், இப்பத்திரிகையை மேன்மேலும் சிறப்பிக்குமென்பது திண்ணம்.

இப்பத்திரிகை நீடித்து நிலைபெறுமாறு திருவருள் கூட்டுவித்தல் வேண்டுமென்பது எனது விருப்பம்

1—9—24
தச்சநல்லூர்

இலக்குமணப்போற்றி.




(427-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமதி M. லக்ஷ்மி அம்மாள்,
(B. A. Hons.) லண்டன்



காலேஜில் படிக்கும் பெண்களின் தினசரி வாழ்க்கை, இங்குள்ளதற்கும் சென்னையிலுள்ளதற்கும் அதிக வித்தியாசமில்லை. ஆக்ஸ்பர்ட், கேம்பிரிட்ஜிலுள்ள பெண்கள் கலாசாலைகளைப் பற்றிப் பார்த்துக் கேட்டவரை, நாடோடி வழக்கங்கள் எங்கும் ஒன்று போலிருக்கின்றனவென்றுதான் தோன்றுகிறது. இளமையும், உத்சாகமும், கல்வித்தேர்ச்சியடைய வேண்டுமென்ற நோக்கமும், பரீக்ஷையில் ஒப்பேறவேண்டுமென்ற கவலையுமாகிய மாணாக்கர்களுக்குரிய பொது லக்ஷணங்களையனுசரித்து ஏற்படும் கலாசாலை வாழ்க்கை, எங்கும் பலவிஷயங்களில் ஒத்திருப்பது அதிசயமில்லை.

மாணாக்கர்கள் ஒன்று சேர்ந்து படிப்பது மட்டுமன்று, அவரவர் பிரத்தியேகமாயில்லாமல், ஒரு காலேஜில் படிக்கும் மாணாக்கர்களனைவரும், ஒரு குடியாய் ஒன்று சேர்ந்து வாழ்வதுதான், 'காலேஜ்வாழ்க்கை' யென்று சொல்லத்தகும். எந்தவிஷயத்தைப்பற்றி யானாலும், பொதுப்படச் சொல்வது, ஏகதேசம் பொய்யும் மெய்யும் கலந்து தானிருக்கும்; எனினும், இங்குள்ள காலேஜ் வாழ்க்கைக்கு உதாரணமாக, ஒரு பெண்கள் காலேஜைப்பற்றி விவரித்துச் சொல்கிறேன்.

இந்தக் காலேஜ் நடுரோட்டிலிருந்து ஒரு பர்லாங் தூரம் தள்ளி, ஒரு பெரிய தோட்டத்தின் ஒரு மூலையில், சுமார் நூறு மாணாக்கர்கள் வசிப்பதற்கும், ஐந்நூறு பெயர்கள் கல்வி பயிலுவதற்கும் போதுமான விஸ்தீரணமுள்ள கட்டடங்கள் சேர்ந்துள்ளது. காலேஜ் கட்டடங்

களைச்சுற்றி, மரஞ்செடிகளும், பூப்பாத்திகளும், புற்றரைகளும், பந்தடி மேடைகளு மிருக்கின்றன. தோட்டத்தினூடே ஒரு கால்வாய் வெட்டி யிருக்கிறது.

காலேஜ் ஹாஸ்டல் குளிர்காலத்தில் அடக்கமாயிருக்கும்படி, நீண்ட கூடங்களும் நடைகளும் வைத்துக் கட்டியிருக்கிறது. அதில் வசிக்கும் பெண்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு தனியறையுண்டு. அது சுமார் பதினன்கடி சதுரமுள்ளது; தறையில் கயிற்றுப்பாய் விரித்து, கட்டில், நாற்காலி, மேஜை, பீரோ முதலிய அவசியமான தட்டுமுட்டு சாமான்கள் அடங்கியுள்ளது. ஒரு பக்கத்துச்சுவர் முழுதுமே ஜன்னலாய்த் திறந்திருக்கும்; எனினும், ஜன்னலுக்கெதிரில் தொங்கும் பளுவான திரைகளும், அறைமத்தியிலுள்ள கணப்பிடமும், அவ்விடத்தில் குளிர்காலத்துக்கு வேண்டிய வசதிகள் உண்டென்று காட்டும். அங்கு வசிக்கும் பெண்கள், தங்களால் என்ற மட்டும் செலவு செய்து அழகிய சாமான்களை வாங்கிப்போட்டு, தங்கள் அறைகளை ஆசையாய் அலங்கரித்து வைத்திருப்பார்கள்.

காலை, ஏழேமுக்கால் மணிக்கு, காதைத்துளைக்கும் மணிச்சத்தம் கேட்கும்; அதையும கவனியாமல் தூங்குபவர்களை, எட்டுமணிக்கு வேலைக்காரிவந்து கதவைத் தட்டி எழுப்புவாள். அத்தறுவாயில் எழுந்திருக்க வேண்டியதைப் பெண்கள் பெருங்கஷ்டமாகப் பாவிப்பதுண்டு. காலை தூங்குவதற்கும், பகல் விளையாடுவதற்கும், நடு நிசி படிப்பதற்கும் உசிதமான வேளைகள் என்பதுதான், அவர்கள் கொள்கை; இந்நாட்டுச் சீதோஷ்ண ஸ்திதிக்கு அது பொருந்தியதுதான்.

காலையில், எல்லோரும் காலேஜின் கூடத்துக்குப் போய், அங்கே பைபிலிலிருந்து சில வாக்கியங்களை வாசித்துப் பிரார்த்தனை செய்து, கீதங்கள் பாடுவார்கள். இதற்கு எல்லோரும் போகவேண்டு மென்ற கட்டாய மில்லை; ஆனல் வெகு சிலரே காலைப் பிரார்த்தனையிற் சேராதிருப்பர். அது முடிந்தவுடன், எல்லோரும் சாப்பாட்டறைக்கு வந்து, அங்கே தயாராக வைத்திருக்கும் பால் கஞ்சி, மாமிச பக்ஷணம், ரொட்டி, வெண்ணெய், காபி முதலியவற்றைத் தங்களுக்கு வேண்டியமட்டும் எடுத்துப் போய், மேஜைகளின்மேல் வைத்துக்கொண்டு சாப்பிடுவார்கள். மத்தியானம் பகற் போசனமும் நாலு மணிக்கு பக்ஷணங்களும் டீயும், எழு மணிக்கு இராப்போசனமுமாக, ஒரு நாளைக்கு நான்கு வேளை திண்டிக்குக் குறைவே

யில்லை. டீ ஒன்றைத் தவிர, மற்ற மூன்று வேளைகளிலும், கனத்த தின்டி என்றே சொல்லவேண்டும். இவ்வளவும் போதாமல், நடு நிசியில் தங்களுக்குப் பசிக்கிறதென்று சொல்லி, நாலைந்து பெண்களாக அடிக்கடி கூடி, பத்து மணிக்குமேல் கோகோ, டீ, பக்ஷணங்கள் முதலியவற்றைத் தங்கள் அறைகளில் தயார்செய்து கொண்டு, வேடிக்கையாய்ச் சாப்பிட்டுக் கும்மாளமடிப்பது முண்டு. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு" என்று இவர்கள் நினைப்பதேயில்லை. மொத்தத்தில், பெருந் தீனிக்காரர்களென்றே சொல்லவேண்டும்; அதற்கேற்ப, வளர்த்தியும் திடகாத்திரமு முள்ளவர்களாய், விளையாட்டிலும் தேகப் பயிற்சிகளிலும் ஆசை யுள்ளவர்களாய், எளிதில் இளைக்காதவர்களாய், நம் தேசத்துப் பெண்களை மட்டுமல்ல, புருஷர்களைக் கூட வெல்ல வல்ல சரீர திடன் உள்ளவர்களாய் இருக்கிறார்கள்.

காலைப் போஜன முடிந்தவுடன், பெண்கள் தங்கள் அறைகளுக்குப் போய்ச் சாமான்களைத் துடைத்து ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு, 'கறுப்பு கவுனை' யும் புஸ்தகங்களையு மெடுத்துக் கொண்டு, பிரசங்க மேடைக்குப் போவார்கள். காலை ஒன்பதரை மணிமுதல் மாலை ஐந்து மணி வரையும் காலேஜில் பிரசங்கங்கள் நடக்கும் வேளை. உபாத்தியாயர்கள் உள்ளே வரும் பொழுதாவது, வெளியே போகும் பொழுதாவது, அவர்களுக்கு மரியாதையாக மாணுக்கர்கள் எழுந்து நிற்கும் வழக்கம் இங்கே கிடையாது. பாடமொழிந்த நேரங்களில், அவசரப் படிப்புள்ளவர்கள் தங்கள் அறைகளிலேயோ புஸ்தகசாலையிலேயோ வாசித்துக் கொண்டிருப்பார்கள். மற்றவர்கள், இரவுமட்டும் புஸ்தகங்களைக் கட்டி வைத்துவிட்டு, தோணிகளைத் துழாவிப் பந்தயம் விட்டும், பந்தாடியும், ஏதேனும் ஒரு வேடிக்கை பார்க்கச்சென்றும், உல்லாசமாய்ப் பொழுதைப் போக்குவார்கள். இரவு எட்டுமணி வரையும், சாவகாசமான பொழுதை அவர்கள் எப்படிக் கழித்தாலும் ஏனென்று கேட்பார் கிடையாது. எட்டு மணிக்கு மேற்பட்டு, நாடகம் பார்க்கவோ, அல்லது வேறெக்காரணத்தை உத்தேசித்தோ வெளித்தங்குவதாயிருந்தால், முதலில் ஒரு உபாத்திச்சியிடம் அதைத் தெரிவிக்கவேண்டும். சாதாரணமாய்ப் பன்னிரண்டு மணிக்குள், எல்லாப் பெண்களும் காலேஜ் கட்டடத்துக்குள் இருக்கவேண்டும்.

கடைக்குப் போவதோ, பாத்திரங்கள் கழுவுவதோ, துணிதோய்ப்பதோ, தங்கள் சொந்தவேலை யெல்லாம், பெண்கள் தாங்களே செய்து கொள்ளவேண்டுமே யன்றி, கூலிக்கோ, தாக்ஷிணியத்துக்கோ, வேலைக்காரிகளை வேலையிடக்கூடாது. தினம் ஒவ்வொரு அறையையும் பெருக்கிக் கணப்பிடத்தைச் சுத்தம் செய்வதுதான், வேலைக்காரிகள் பெண்களுக்காகச் செய்யும்வேலை; அவர்களைப் பெண்கள் மேற்பார்ப்பது கிடையாது. உடையாளிகளும் வேலைக்காரர்களும், 'கள்ளன் பெரிதோ காப்பான் பெரிதோ' வென்று போட்டி போடும் சங்கடம், இவ்வூரிலியே கிடையாது.

எல்லாக் காலேஜ்களிலும் போலவே, இங்கும் பெண்கள் தங்களுக்குள்ளே கூடி, பல சபைகள் நிருமித்துக் கொண் டிருக்கிறார்கள். அவற்றில் பலவற்றை உபாத்தியாயர்களின் ஒத்தாசையின்றித் தாங்களே நடத்தி வருகிறார்கள். விளையாட்டுக்களில் "டான்ஸிங்" (நிர்த்தனம்) கிலும், "போடிங்" (தோணிவிடுதல்) கிலும்தான் அவர்களுக்கு அதிக ஆசை; நாடகசபையிலும் சங்கீத விஷயத்திலும் அநேகம் பெயருக்கு அதிக உத்சாகமுண்டு. கல்வி விஷயங்களையும் ஜனசமூக வாழ்வையும் பற்றித் தெரிந்து கொள்வதற்காக ஏற்பட்ட பலசபைகள் இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை பலதேச ஐக்கிய சங்கமும் (League of Nations), ஜனசமூகச் சீர்திருத்தச் சங்கமும். மகாயுத்தத்துக்குப் பிறகு, ஜர்மனி முதலிய தேசங்களில் மாணாக்கர்கள் படும் கஷ்டத்தைப்பற்றி அறிவும் அநுதாபமும்; இனி எல்லா நாட்டாரும் ஒற்றுமையாய் வாழக் கூடுமென்ற ஒரு நம்பிக்கையும்; ஏழைகள் படும் கஷ்டத்தை எப்படியாவது நிவர்த்திக்க வேண்டுமென்ற ஆவலும் ஆசையும், எல்லார் மனத்திலும் பரவவேண்டு மென்பதுதான், இவ்விரு சபைகளின் நோக்கங்கள்.

இங்குள்ள பெண்கள் எல்லோரும் அநேகமாய்ப் பதினெட்டு வயதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குட்பட்டவர்கள். சாதாரண அந்தஸ்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; அடக்கமும் அமரிக்கையுமான நடத்தை யுள்ளவர்கள். மெல்லிய சரீரமும் பூர்ண அழகும் வாய்ந்தவர்களல்லர்; ஆனால், வளர்த்தியும், தேகதிடனும், நிமிர்ந்த நடையு முள்ளவர்கள்; களைபொருந்திய முகத்தினர்; படிப்பிலும் விளையாட்டிலும் சலிக்காத ஊக்கமும் உத்சாகமு முடையவர்கள். நாகரிகமான உடைகளால் தம்மை

அலங்கரித்துக் கொள்வதிலும், நாடகம் பார்ப்பதிலும், நடன மாடுவதிலும், வெகு ஆசையுள்ளவர்கள். பயம், பொய், கபடம் முதலியன குடிகொள்ளாத களங்கமற்ற மனத்தினர். தம் பெற்றோரிடத்தில் அளவற்ற வாஞ்சையுள்ளவர்களெனினும், அவர்களை விட்டுப் பிரிந்து தாம் சுயேச்சையாய்த் தனிக்குடித்தனம் செய்துவாழப்போகும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கப் பட்டவர்கள். வர்ண பேதம், ஜாதிபேதம் இவற்றால் ஏற்படும் கர்வம் இன்னதென்று தெரியாதவர்கள்; படித்த பெண்களெனினும், இந்திய சரித்திரத்தைப் பற்றியாவது, இந்தியரின் வாழ்க்கையைப் பற்றியாவது ஒன்றுமே தெரியாதவர்கள். இரக்கமும் விசாலநோக்கமு முள்ளவர்கள்; கவலையை மேற்கொள்ளாத குதூகல மனத்தினர்கள்; வேரூன்றிய தேசாபிமானம் உள்ளவர்கள்; காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சாய்த் தோன்றுமென்று வழக்குக்கு மட்டும் ஒப்புக்கொள்வார்களே யன்றி, பிரத்தியக்ஷமாய் விளங்கும் தம் நாட்டின் சிறப்புக்கு எவ்விதத்திலும் எந்நாடும் ஈடெதிரில்லை யென்று நினைக்கப்பட்டவர்கள். பழகாதவர்களிடம் கலகலப்பாய்ப்பேசத் தெரியாதவர்கள்; ஆனால் தாங்கள் மனமொத்துப் பழகிய சிநேகிதர்களிடம், கண்டவர் மனம் களிக்கத்தக்க உரிமையும் நட்பும் பாராட்டப்பட்டவர்கள்.

பரீக்ஷைகள் முடிந்துவிட்டபின், கவலையை ஒழித்து, இந்தக்கடைசி வாரத்தில், எல்லாரும்கூடி வேடிக்கையாய்ப் பொழுதுபோக்க, பல ‘பார்டி’ கள்ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அடுத்தவாரம் தங்கள் பெற்றோரையும் உடன் பிறந்தாரையும் காணப்போகும் ஆவல் முகத்தில் களியாட, கோடை ரஜாவின் ஆரம்பத்தை நாளெண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

---


# முத்துமீனாக்ஷி

ஒரு பிராமணப் பெண்ணின் சுயசரிதை

2-ம் பதிப்பு வெளிவந்து விட்டது - விலை எட்டணா.

பஞ்சாமிர்தம் ஆபீசு - மயிலாப்பூர்.

486

# ஓர் அதிசயம்

காலையில் கடற்கரை உலாவியான் மீள்கையில்,
வேலை[1] யின் விரிநீர் விளிம்பினில், நீலப்
பாயல் துறந்து பயப்பய [உ] மேலெழும்
ஞாயிறு வேந்தன், ஆயிரம் கதிர்மணிக்
கரங்களால் வாரிக் கனகநன் மாரி[2]
பொழிதரு காட்சியின் அழகுகாண் பொழுது,
வழியினில் மற்றொரு மனிதனும், அங்ஙனே
தன்னையும் உலகையும் மறந்து, சவிதா [3]
பொன்னொளிர் [4] பிழம்பினுள் புகுந்தவன் போன்று
நிற்பது கண்டேன்; கண்ட அந் நிமிடமே,
கற்பனை இல்லை, என் கவின்[5] உணர் நெஞ்சுதான்,
எற்பொழி[6] கொள்ளை [7] எழிலையும் போகவிட்டு,
அற்பனுய்க் காணும்அவ் அறியா தவன்பால்
அன்பும் அநுதா பமும்அந் தரங்க
இன்ப உணர்ச்சியும் எய்தி, அவனையே
கோடி சூரியக் குழூ[8] வாய்க் கண்டேன,
நாடிநின் றதுகாண், நான் அறி யாவகை!
'இனம்இனத் தோடு' எனும் நீதியோ? இயற்கையின்
[9] நனிசிறு பண்பொன்று உலகெலாம் உறவுசெய்*
உண்மை துலக்கலோ? ஒருதாய் இருமகார்,
மண்மிசை உறவறி யாது வளர்ந்தவர்,
அண்மை[10] யில் தமதுமெய் ஒருமையை அறிந்து,
குறுகிக் குலவிடு குறியோ?
அறிகிலேன் யாதென அதிசய மதுவே.

—அமுதகவி

---

1. சமுத்திரம்; உ. பையப்பைய; 2 நல்ல பொன் மழை; 3. இளஞ்சூரியன்; 4. திரண்டதொன்று; 5. அழகு; 6. ஒளி நிறைந்த; 7. அழகு; 8. கூட்டம்; 9. மிகச்சிறு; 10. சமீபம்.

* "One touch of nature makes the whole world kin."—*Shakespeare*.

487
பஞ்சாமிர்தம் 1924-

# பாவலர் விருந்து

(412-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீமத் விபுலானந்த ஸ்வாமிகள், மயிலை

காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் :—கணவன் மீது மாறாத அன்பு வைத்த கற்புடை மகளிரை வானவரும் போற்றுவார். கண்ணகியார் நம்மாற் றுதிக்கப்படுந் தெய்வமாயினா ரன்றோ? சாவித்திரியார் தமது நாயகனாகிய சத்தியவா னுயிரை எமனுலகிலிருந்து மீட்டுவந்தனரென்னில், அன்பின் வயத்த தாகிய கற்பினால் ஆகாத தொன்றுண்டோ? சாவிற்சாதலே தலையாய அன்பின் றிறம். யவனபுரத்தில் அகிலேசன் எனப் பெயரிய சுத்தவீரன் ஒருவனிருந்தான். அவன் முன்னர் ஒரு தெய்வந் தோற்றி "நினது மாற்றானாகிய ஏகதன் நின்கையாற் படுவானெனின் நீயும் போர்க்களத்தில் இறந்தொழிவாய்; ஏகதன் பிறர் கையாற் படுவானெனில் நீ பல்லாண்டு வாழ்வாய்" எனக் கூறிற்று. அங்ஙன மமைந்து நின்ற ஊழின் திறத்தையறிவானாயினும், தனது நண்பன் பத்திரோகலன் ஏகதனுடைய பாணத்தினால் உயிர் துறந்தானெனக் கேள்வியுற்ற அகிலேசன், விரைந்து சென்று, ஏகதனை யெதிர்த்துத் தனியமர் புரிந்து, தன் கையம்பினால் ஏகதனுயிரை விண்ணுல கேற்றினான். தெய்வ முரைத்த கட்டுரையின் வண்ணம் சின்னாட்களுக்குள்ளே அகிலேசனும் போர்க்களத் தொழிந்தான். நண்பன் கழிந்த பின்னர்த் தானுயிர் வாழ்தல் தகுதியன்றென வெண்ணி, உயிர் துறப்பதற்கு இயைந்து நின்ற ஊழ்வினையை வலிந்து தேடியவனாகிய அகிலேசன், தேவலோகத்தாரால் சன்மானிக்கப்பட்டான். இது தலையாய அன்பின் திறமாகும். இத்தகைய தலையாய அன்பு இல்லாதார் தேவலோகத்தாரால் அவமதிக்கப்படுவார் என்பதற்குச் சான்றாகிய மற்றொரு சரிதம் உண்டு. இமயத்துக்கு வடபாலிலுள்ள உத்தர குருவில் அநங்கன் எனப்பெயரிய யாழ்வல்லோ னொருவனிருந்தான். இவன் மனையாட்டியாகிய சுசீலை ஆண்டு நிறைந்து இவ்வுலக வாழ்வினை நீத்தனள். மனைவியிறந்தமையினாற் சோகமுற்ற அநங்கன் புள்ளும் மாவும் இரங்க அழுது பிரலாபித்து, "என் இன்னுயிர்க்குயிராகிய மனைவியை உடன் கொண்டன்றி இந்நகருக்குத் திரும்பேன்" என்று நிச்சயித்துக்கொண்டு, யமனுலகை நாடித் தென்றிசை நோக்கி நடந்தான். யாறும் மலையுங் கடந்து பல காவதங்கள் செல்வுழி, வழியிற் கண்டோரனைவரும் இவன் துயர்க்கிரங்கி, "மாண்டார் வருவரோ, மாநிலத்தில்" என்றித்தகைய உண்மைகளை எடுத்தியம்பி மனைவியை மறந்து விடும்படி வேண்டினர். அவன் பிடிவாதமாகத் தென்றிசை நோக்கி நடந்தான். ஈற்றில் யமனுலகத்து வாயிற் கதவினையடைந்தான். ஆங்கிருந்த வாயில் காப்பாளர் உட்புகுதல் கூடாதெனத் தடுத்தனர். அநங்கன் தன்

யாழிசையினால் வாயில் காப்பாளரை மயக்கி யமனுலகினுட் புகுந்தான். அவ்விருளுலகம் சூரியாஸ்தமன காலத்தின் பின் வந்தெய்துகிற அரையிருளைப்போன்ற இருளினால் மூடப்பட்டிருந்தது. சற்றுத்தூரத்தில் வெண்சுதைக் கற்களால் கட்டப்பட்ட யமதர்ம ராஜனது அரமனையானது மூன்றாம் பிறைச் சந்திரனது நிலவைப்போன்ற மெல்லென்ற ஒளியோடு விளங்கியது. எவ்விடத்தும் நிச்சப்தமாயிருந்தது. புறவாயிலுக்கும் அரமனைக்கு மிடையில் காரிருட் படலம் போன்ற ஒரு அகழியிருந்தது. இவ்வகழி நீர் அலையாது அசைவின்றி நிற்கும் நீர்மையது. இதனைக் கடந்து செல்வதற்கு ஒரு ஓடம் உண்டு. அங்கன் ஓடக்காரனைக் குறையிரந்து வேண்டி ஒருவாறாக அகழியைக் கடந்து சென்று யமதர்ம ராஜனுடைய சமுகத்தையடைந்தான். தர்ம ராஜன் அங்கனை விளித்து, "ஏ மானிட! இங்கு மக்களுடலோடு வருவார் ஒருவருமிலராக நீ யெவ்வண்ணம் வந்தாய்? மனைவி மேற்கொண்ட காதல் உன்னை இத்தனை தூரம் வரப்பண்ணிற்று. நீ யுன் மனைவி மீது உண்மையன்பு உடையவனாகில் மீட்டும் பூவுலகத்துக்குப்போ. உன்வாணாள் கழிந்த பின்பு நீயும் நின் மனைவியும் சுவர்க்க வாழ்வெய்துவீர்" என்றனன். அங்கன் உயிர் துறப்பதற்கு அஞ்சினான்; அஃதன்றியும் அவன் தனது மனைவிமேல் வைத்த அன்பு அவளது உடல் மேல் வைத்த இச்சையாகிய பொய்யன்பு. ஆதலால் அவன் தர்ம ராஜனைப் பன்முறை பணிந்து தன்னையும் தனது மனைவியையும் பூவுலகத்துக்கு அனுப்புதல் வேண்டுமென மன்றாடினான். தர்மன் இரக்கமுற்று, "ஏ மானிட! எனது தூதுவர் நின்னையும் நினது மனைவியையும் இவ்வுலகிலிருந்து பூவுலகுக்கு அழைத்துச் செல்வர்; நினது மனைவி பின்னாக வருவாள்; பூவுலகை யடையும் வரையும் நீயவளது முகத்தைப் பார்த்தல் கூடாது, இது எனது கட்டளை; கட்டளை தவறி அவள் முகத்தைப் பார்த்தாயாயின் நினது மனைவி எனது உலகத்திலே நின்றுவிடுவாள்; நீ, அவளைப் பின்பு ஒரு போதும் காணமாட்டாய்" என்றான். அங்கனும் நல்லதென்று தூதுவர்கள் பின் சென்றான். அவன் மனைவியும் தர்ம ராஜன் கட்டளைப்படி பின்னாக நடந்தாள். மனைவியினது உடலின் மேல் வைத்த காதலினால் அங்கனானவன் யமபுரத்தெல்லை கழிவதன் முன் மனைவி முகத்தை நோக்கினான். யம தூதுவர் தர்ம ராஜனுடைய கட்டளைப்படி அங்கன் மனைவியை யமலோகத்திலே நிறுத்திவிட்டு, அங்கனை இழுத்துச் சென்று பூவுலகிற் சேர்த்தனர். உடன் சாதலுக்கு ஒருப்படாத காரணத்தினாலும், உடலின் மேல் வைத்த இச்சையினாலும், அங்கன் கைக்கெட்டிய பொருள் வாய்க்கெட்டா நிலைமையைப் பெற்றான். உண்மையன்பினால் வெற்றியும் உவகையும் உண்டு, இவ்வுலகிற் கீர்த்தி யுண்டு; மறுமையிற் சுவர்க்க முண்டு.

[இவ்வாறு காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் கூறி முடித்த பின்னர்ப் பரணர் எழுந்து சில குறிப்புக் கூறுவார்.]

பரணர் :-- உத்தமப் புலவீர்! அன்புக்குரிய தெய்வம் இரண்டு ஆயினமைபற்றி அன்பும் இருவகைப்பட்டதெனக் கொள்ள வேண்டியிருக்கிறது. ஒருவனுக்கும் ஒருத்திக்கும் இடையில் நிக

ழும் அன்பு கேவலம் உடலைப்பற்றி நிற்குமளவில், அங்ஙனம், அன்பு செய்வாரிருவரும் தமது அன்பு நிறைவுறுதல் கருதி வேனில் வேளாகிய காமனை வழிபடுவர். இன்னோர் காமன் கோட்டத்திற் சென்று வழிபடுங் காலத்தில், தாம் பேரழகு பெற வேண்டுமென்றும், தங்காதலர் தம்மையன்றிப் பிறரை நினைத்தல் கூடாதென்றும், தந்நலங் கருதியே அனைத்து வழிபாட்டினையும் புரிவர். இந்நிலையிற்றோற்றுமன்பு மிகவுங் கடையாயது. தங் கணவரைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் கற்புடைப் பெண்டிரும், நாயகியினது முகமன்றிப் பிறரது முகம் பார்த்தறியாக் கற்புடையாடவரும், ஒருவரொருவரை யின்றியமையாது நிற்கும் நிலையில் இவரது உள்ளத்தே தோற்றுமன்பு தெய்வத்தன்மை சான்றது. அனைத்து உயிரினும் இறைவன் வியாபித்து நிற்பதை யுணர்ந்து, "இவன் என் மகன், இவன் பிறன் மகன்" என வேற்றுமை காட்டாது, மன்னுயிரனைத்தையும் தன்னுயிரெனக் கருதி வழிபடும் மேலான அன்பு, சிவத்தைச் சார்ந்து நிற்பது. இவ்வன்பே சிவம் என அறிஞர் கூறுவர். காமனைத் தெய்வமாகக் கொண்ட அன்பு இழிவுடையது, கீழ்மக்களாற் கையாளப்படுவது, சிவத்தைத் தெய்வமாகக் கொண்ட அன்பு தலையாயது; மேன்மக்களாற் கையாளப்படுவது. கேவலம் ஒரு பெண்ணின் மேல் வைத்த இச்சையினால் மடலூர்தல் வரையுருளுதல் என்றித்தகைய வன்றொழில்களால் தம்முடலத்தை யூறுபடுத்தும் ஆடவர், இறைவன் பாலதாகிய உண்மை யன்புக்காகத் தம்முடல், பொருள், ஆவி மூன்றினையும் பரித்தியாகஞ் செய்வதற்கு முன் வராததேனோ? விலைமகளுக்குத் தம்பொருளையும் உடலையும் கொடுத்து மறுமையில் நரகத் துன்பத்தை விலைக்கு வாங்கிக் கொள்ளும் வீண்மதியோர், எம்மிறைவனுக்கு அவற்றை அர்ப்பணஞ் செய்து நித்தியானந்த வாழ்வினை யடையலாகாதா? என்னே இம்மானிடர் மதியிருந்தவாறு! காமனை முற்றிலுங் கடிதல் வேண்டும்; காமனைக் கடிந்த கண்ணுதல் பாதத்தைச் சார்ந்து நிற்றல் வேண்டும் இதுவே அன்பின்றிறம் (எனப் பாணர் ஒருவாறு கூறி முடித்தார்.)

**நன்மாறன்** :—இனி, நக்கீரனார் தமது கருத்தை வெளியிடுவாராக.

**நக்கீரனார்** :—அரசே! நா உலர்ந்தமையினாலோ பிறிதொரு காரணத்தினாலோ தொண்டையில் விக்கலுண்டாகி, அதனால் வருந்துகிறேன். மருத்துவன் தாமோதரனார் எனது விக்கலை மாற்றுதல் வேண்டும். அங்ஙனம் செய்யத் தாமதிப்பாராயின் நான் செய்ய வேண்டிய தொழிலை அவர் செய்தல் வேண்டும்.

**மருத்துவன் தாமோதரனார்** :—விக்கலை மாற்றுதல், நீர் செய்ய வேண்டிய கடமையைச் செய்து முடித்தல் ஆகிய இரண்டு வேலையையும் நான் ஏற்றுக் கொள்ளுகிறேன். கொஞ்சம் குளிர்ந்த நீரை யெடுத்து வாயினுள்ளிட்டுத் தொண்டையை யலசிப் பின்பு உமிழ்ந்து விடுவீராக. இதற்கு விக்கல் மட்டுப்படாதிருக்குமாயின், ஒரு சிறு துரும்பை யெடுத்து நாசித்துவாரத்தினுள் விட்டால் தும்மலுண்டாகும்; இரண்டு மூன்று முறை தும்மிய பின்பு விக்கல் நின்று விடும். இஃது ஒருபாலாக, பாணர் அன்பினைப்

பற்றிக் கூறிய அரிய வாசகத்தினுள் அன்பு இருவகைப்படும் என நன்றாக விளக்கிக் காட்டினார். இவ்வுண்மையைப் பலவாறாக ஆராய்ந்து உணரலாகும். உதாரணமாக, உணவின் மேலுள்ள விருப்பத்தை யெடுத்துக் கொள்வோம். தேகம் ஆரோக்கிய நிலையில் இருக்கும்பொழுது நாடுகிற உணவு மேன்மேலும் ஆரோக்கியத்தை வளர்ப்பதற்குத் தக்க உணவாகும்; நோய் வாய்ப்பட்டிருக்கும்போது விரும்புகிற உணவு நோயை அதிகரிக்கச் செய்கிற தகாத உணவாகும். ஒருவாறாக நோக்கு மிடத்து இருவகை விருப்பமும் அன்பின் பாலவேயாம். அங்ஙனமாயினும் முந்தியது நன்மையை உண்டாக்குகிறது; பிந்தியது தீமையைத் தருகின்றது. மனமானது காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூன்று நோயினுள்ளும்படாது சாந்தநிலையி லிருக்கும்போது எழுகின்ற அன்பு நன்மையை விளைவிக்கும். காமம் முதலியவற்றால் அலைவுண்ட உள்ளத்தி லெழுகிற அன்பு தன்னலச் சார்பு உடையதாதலின் தீமையை விளைவிக்கும். கைதேர்ந்த 'வைத்தியன் தக்க விழைவு இது; தகாத விழைவு இது' என்று ஆராய்ந்தறிந்து உடலுக்கும் உணவுக்கும் பொருத்த முண்டாக்கி வைப்பான். இயற்கையிலே பொருந்தாத பொருட்களையும் முறையறிந்து பொருந்த வைப்பது வைத்தியனது சாமர்த்தியமாகும். எங்களது முன்னோராகிய அகத்தியனார் இந்த விஷயத்தை விரிவாக ஆராய்ச்சி செய்திருக்கின்றார். வெம்மை தண்மை, கசப்புத் தித்திப்பு, நீர்ப்பொலிவு வாட்சி என்னும் வேறுபட்ட குணங்களைப் பொருந்த வைப்பதுவே வைத்திய சாஸ்திரத்தின் முடிபு. இவ்வண்ணமே இசைத்தொழில், கமத்தொழில், சிலம்பத் தொழில்களிலும் பொருந்தாப் பொருட்களுக்குப் பொருத்தங் காணுபவரே வல்லவரென எண்ணப்படுவார். இசைவகையில் இரண்டு ஸ்வரங்கள் பொருந்தி நின்றன வென்னுமிடத்து, அவற்றிடையே வேறுபாடும் உண்டு என்பது தெளியப்படும். ஒரே தன்மையவெனின் பொருந்தி நின்றன வென்பது பயனில் சொல்லாகும்; பொதுத் தன்மையின்றெனில் அவை யொருபோதும் பொருந்தமாட்டா. ஆதலால் வேறுபட்ட இரண்டு ஸ்வரங்களுள்ளே ஒரு பொதுத் தன்மை யமைந்து கிடந்தது என்பது தெளிவாகிறது. இப் பொதுத்தன்மையை இன்னதென்றுணர்ந்து பொருத்திவைப்பவனே இசைவல்ல வித்துவானாவான். கூதிர்க்காலமும் வேனிற்காலமும் வேறுபட்ட நீர்மைய; அங்ஙனமாயினும் காலவியல்பையும் உடலியல்பையும் ஆராய்ந்தறிந்து பொருந்த நடப்பவன் இரண்டு காலங்களிலும் உண்டாதற்குரிய சுகத்தை யனுபவித்துத் துன்பத்தினின்று நீங்கிக் கொள்வான். உடலின் அவயவங்கள், ஒன்றினோடொன்று பொருத்தமாக அமைவுற்றிருக்கும் நிலையே ஆரோக்கிய நிலையாகும்; பொருந்தா நிலையே நோய் எனப்படும். அன்பின் மர்மத்தை யறிவதனால், மக்களனைவரோடும் ஒருமித்து வாழ்ந்து இம்மை மறுமைச் சுகத்தையடையலாகும். உள்ளத்தில் அன்பில்லாதான் தனக்குத் தானே பெருந்தீமையை விளைத்துக் கொள்ளுகிறான். இனி நக்கீரனாருடைய விக்கலும் நின்று விட்டது, நான் சொல்லக் கூடிய குறிப்புக்களும் ஒழிந்து விட்டன.

(தொடரும்)

# இன் கவித் திரட்டு

ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணிய முதலியார், G.B.V.C., வெள்ளக்கால்

(422-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

## பரதர் குகருக்குக் கைகேயியைத் தம்தாய் எனல்.

"படர்எலாம் படைத்தாளைப், பழிவளர்க்கும் செவிலியைத், தன் பாழ்த்த பாவிக்
குடரிலே நெடுங்காலம் கிடந்தேற்கும் உயிர்ப் பாரம் குறைந்து தேய,
உடர்எலாம் உயிர்இலா எனத்தோன்றும் உலகத்தே ஒருத்தி யன்றே
இடர்இலா முகத்தாளை அறிந்திலையேல், இந்நின்றாள் என்னை ஈன்றாள்"

பொழிப்புரை :—" துன்பங்களெல்லாவற்றையும் உண்டாக்கியவள், பழிச்சொல் (ஆன குழந்தைக்கு) வளர்க்கும் தாயானவள், தன் பாழான பாதகக் குடலிலே நீடித்த காலம் கிடந்த எனக்குங்கூட உடம்பு மெலிந்து தேய்ந்து போம்படியாக, (மேற் கூறிய துன்பங்கள் காரண்மாக) எல்லாருடைய உடல்களும் உயிரில்லாதவை போலக் காணப்படுகின்ற உலகத்திலே துக்கமில்லாத முகத்தாள் (ஒருத்தியே, அந்த) ஒருத்தியை (இன்னளென எளிதாக ஊகித்தறியலாம்,) அறிந்திலீ ராயின், (சொல்கின்றேன்,) இங்கு நிற்கின்றவள் என்னைப் பெற்றவள்."

விசேடவுரை :—இராமரைக் காட்டுக்கு அனுப்பித் தசாதரை இறக்கச் செய்ததனால், உலகத்தா ரெல்லாருக்கும் உண்டான துன்பங்க ளனைத்துக்கும் காரணமா யுள்ளா ளென்பார் 'படரெலாம் படைத்தாள்' என்றார். (படர்-துன்பம்).

'தான் செய்தது கொடுமை' யென்று தெளிந்து, 'இக் கொடுமையைச் செய்தேனே!' என்று இரங்கிப் பச்சாத்தாபப் படாதிருக்கின்றாள்; ஆதலால் அக்கொடுமையால் உண்டான பழியைத் தன்நடக்கையால் தணியாமல் வளர்ப்பாளா யிருக்கின்றாள்' என்பார் 'பழி வளர்க்கும் செவிலி' என்றார். (செவிலி-வளர்க்கும் தாய்) பழிக்கு வளர்த்த

தாய் என்றதனால், துன்பத்துக்குப் பெற்றதாய் என்பதை உய்த்துணர வைத்தார்.

உலகத்தாருக்குத் துன்பம், கைகேயி வாயில் (இராமரைக் காட்டுக்குப் போகச் சொல்லியபோது) பிறந்தது; கைகேயிக்குப் பழிச்சொல், உலகத்தார் வாயில் (பாவி இப்படிச் சொல்வாளா! என்றபோது) பிறந்தது; மேலே கூறியவாறு கைகேயியின் பின் நடக்கை, அப் பழிச் சொல்லை வளர்ப்பதாயிற்று: ஆதலால், உலகத்தார் துன்பத்துக்குப் பெற்ற தாயாகவும் பழிச்சொல்லுக்கு வளர்த்த தாயாகவும் கைகேயியைக் கூறியது பொருத்தமா யிருத்தல் காண்க.

'இக் கொடியாளுடைய கொடிய வயிற்றில் நெடுங் காலம் கொடுமை நன்கு ஊறித் தோயும்படி அழுந்திக் கிடந்த யானே இவள் கொடுமையைப் பொறுக்க முடியாமல் உடம்பு மெலிந்து தேய்ந்தே னென்றால், ஏனையோர் எவ்வாறு சகிப்பார், எவ்வளவு இளைப்பார் என்று ஊகித்தறிதிர்' என்பார், 'பாழ்த்த பாவிக் - குடரிலே நெடுங் காலம் கிடந்தேற்கும் உயிர்ப்பாரம் குறைந்து தேய' என்றார். (குடர், குடல் என்பதன் விகாரம்)

"ஒரு நாலு பேர் சுமக்கும் மூட்டை - நான் - ஒருவனே சுமப்பன் இந்த உடல் மாயக் கூட்டை" என்றவாறு எல்லா உயிர்களுக்குமே சுமையான உடல், துன்பம் உற்ற உயிர்களுக்கு விசேடமாகச் சுமையா யிருக்குமென்பது விளங்கத், துக்கம் மிக்க பரதர், உடலை 'உயிர்ப்பாரம்' என்றது இயல்பானது.

எல்லாருக்கும் உயிர்போன்ற இராமர் பிரிந்து போனதனால், எல்லாரும் உயிர் பிரிந்து இறந்தார் போன்றாரென்பார், 'உடரெலாம் உயிரிலா எனத் தோன்றும்' என்றார். (உடர், உடல் என்பதன் விகாரம்)

உலகத்திலே மற்றெல்லாரும், இராமர் பிரிவாலும் தசரதர் சாவாலும் துக்கமுற்றவர்கள்; கைகேயி ஒருத்தி மட்டும் துக்கமுறாதவள் என்பார், 'உலகத்தே ஒருத்தி யன்றே இடர் இலா முகத்தாள்' என்றார். (இடர்-துன்பம்)

இவ்வாறாகப், பரதர் கைகேயியைக் குகருக்குத் தெரிவித்த முறையிற் காணப்படும் கம்பர் கவித்துவ கௌசலம் நுணுகி நோக்கி நுகரத்தக்கது. (கௌசலம் - சாமர்த்தியம்)

தோணி கரையை அடைதல்.

என்னக் கேட்டவ் விரக்கம் இலாளையும்
தன்நற் கையில் தொழுதனன் தாயென
அன்னப் பேடை சிறைஇல தாய்க்கரை
தன்னிற் றென்னவும் வந்தது தோணியே.

பொழிப்புரை:--என்று சொல்லக் கேட்டு, அந்த இரக்க மில்லாத கைகேயியையும் (குகர்) தாய் என்று கருதிக் கும்பிட்டார். ஒரு பெட்டை அன்னம் சிறகுக ளில்லாததாய்க் கரை சேர்ந்தது போலத், தோணி (கரைக்கு) வந்தது.

விசேடவுரை:—'இரக்க மிலாளையும் - தன் நற் கையிற் றொழுதனன் தாயென' என்றதனல், குகர் கோசலா தேவி யைத் தொழுததைக் கூறியது போலச் சுமித்திரா தேவி யைத் தொழுததைச் சொல்லாமலே உணர்த்தியதும்,— "அன்னையும் பிதாவும் முன் அறி தெய்வம்", "தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" ஆதலால், எத்துணைக் குற்றங் குறைக ளுடையா ளெனினும் தாயைப் போற்று தல் விலக்கொணுக் கடமை என்பதை விளக்கியதும் கவ னிக்கத் தக்கவை. உருவம் கதி இரண்டினும் தோணி அன்னத்தை ஒத்தல் நோக்கற்பாலது.

இங்கே கைகேயியை இரக்க மிலாள் என்றது,— அத்தேவியின் இரக்க மின்மையைப்பற்றி மந்தரை சூழ்ச் சிப் படலத்தில் அதிசாதுரியமாகவும் உண்மையாகவும் கூறப்பட்ட, 'இராக்கதர்கள் செய்த தீவினையும் அவரல் லார்கள் எல்லாரும் செய்த நல்வினையும் தூண்டக், கைகேயி தேவி (தமக்கு இயல்பாக உள்ள) இரக்கத்தைக் கைவிட் டார்: அவர் இரங்காமையன்றே, இன்றளவும் இனியும் எல்லா உலகத்தினரும் இராம கதாமிர்தத்தை (செவி வாயால் மன வயிறு நிரம்ப) உண்டு கொண்டிருப்பதற்குக் காரணம்' என்ற கருத்துள்ள நனி யினிய கவியை ஞாபக முறுத்துகின்றது. அக்கவி வருமாறு:—

அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க, நல்அருள் துறந்தனள் தூமொழி மடமான்:
இரக்க மின்மையன் றே,இன் றிவ் உலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப் பருகுகின் றதுவே.

(இன்னும் வரும்)

## சர்வ சமய சமரச தர்சநி

(358-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

28. "இஸ்லாம்" என்பது, வார்த்தை சுத்தமும் தரும சிந்தனையும் தான்"—மகமது நபி.

29. "அன்னை உமை, அப்பன் அரன், சுற்றம் அவன் [அடியார்,
என்னூர் உலகொரு மூன்றே"—ஆதிசங்கரர்.

30. "அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்;
அன்பே சிவமாவ தாரும் அறிகிலர்;
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே"—திருமூலர்.

31. "எல்லா உயிர்கட்கும் இதஞ்செய்வதினும் மேலான காரியம் ஒன்றுமே யில்லை, பிறர்க்கு நன்மை புரிவதிலேயே உனக்குச் சுகமும் நன்மையும் ஏற்படும்"—தயானந்த ஸரஸ்வதி.

32. "நல்லறிவானது சினத்தில் (எந்த மூலையில், எவ்வளவு தூரத்தில்) இருந்தபோதிலும் அதைத் தேடிச் செல்லுங்கள்"—மகமது நபி.

33. "ஒன்றாகக் காண்பதே காட்சி, புலன் ஐந்தும்
வென்றான்தன் வீரமே வீரமாம்,—என்றானும்
சாவாமல் கற்பதே கல்வி, தனைப்பிறர்
ஏவாமல் உண்பதே ஊண்."—ஔவையார்.

34. "வலியார் முன் தன்னை நினைக்க, தான் தன்னின்
மெலியார் மேல் செல்லு மிடத்து"—திருக்குறள்.

35. "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி [இரங்கிடநின்
தெய்வ அருள் கருணை செய்யாய் பராபரமே"—[தாயுமானவர்.

# கந்தையாவின் கதி

## ஒரு சிறு கதை

ஸ்ரீமதி வே. தாயாரம்மாள், குலையனூர்

இனம் தெரிந்து விடாதபடி ஊர் பெயர்களைமட்டும் மாற்றி, நான் அறிய நடந்த கதையையே இதன் கீழ் எழுதுகிறேன். கதையை எழுதும் நான் அதிகப்படிப்பில்லாத பெண்பால் என்பதையும், தமிழ் எழுதிப் பழகினவள் இல்லையென்பதையும், இதை வாசிப்பவர் மறந்து விடாது, குற்றம் குறைகளை மன்னிக்க வேண்டுகிறேன்.

கண்ணபுரம் கந்தையா முதலியார் பழைய பணக்காரர். ஒருகாலத்தில் இருநூறு வேலிக் குடித்தனமாயிருந்த குடும்பம், அவர் தகப்பனார் நாளில் நாற்பது வேலிக்கு வந்திருந்தது. அந்தக் குடும்பத்தில் கந்தையா முதலியார்தான் முதலாக இங்கிலீஷ் படித்து ஸர்க்கார் உத்தியோகம் செய்தார். அவர் ஐயா, பாட்டனார் முதலிய முன்னோரெல்லாம், ஊருக்குப் பெரிய மிராசுதார்களுக்குரிய செல்வம் செல்வாக்குடன் காலங்கழித்தவர். கந்தையா முதலியாரோ, அதுமட்டுமின்றி, தாசில்தார் வேலையும் பார்த்தவர். அவர் பென்ஷன் பெற்று ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்த பொழுது, பழைய சொத்தும் அவர் சம்பாத்தியமுமாக இரண்டு லக்ஷத்துக்குக் குறைவில்லை. ஆனால், கந்தையா தன் தகப்பனாருக்கு ஒரே மகன்; அவருக்கோ, பிள்ளைகளும் பெண்களுமாக மக்கள் பத்துப்பேரிருந்தனர். அவர் பெண்சாதி வடிவழகியம்மை, தன் பெயருக்குப் பொருந்த, நல்ல அழகுள்ளவள். அவள் தேகக்கட்டின் வாசி, பத்து மக்களைப் பெற்ற பின்னும் கூட, அவளுடைய மூத்தமகளையும் அவளையும் சேர்ந்து பார்த்தால், அறியாதவர்கள் உடன் பிறந்த அக்காள் தங்கைகள் என்றே மதிப்பர். கந்தையா முதலியாருக்கு அவள்மேல் அதிகப் பிரியமுண்டு; நல்ல குலத்திலே பிறந்து வளர்ந்த கற்பரசியான வடிவம்மையும் தன் கணவர்

மேல் மிக்க காதலுள்ளவளா யிருந்தாள். ஆனால், அடி நாள் முதல் கடைநாள் வரை, அவளுக்கு ஒரு மனக்குறை மட்டும் இருந்து கொண்டே யிருந்தது: கண்ணபுரம் முதலியார் குடும்பம், செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் பேர்போனது போலவே, குடும்பத் தலைவர்களின் வேசி மாருக்கும் பேர்போனது. சதுர், பாட்டு, அழகு இவைகளில் பேர்போன தேவடியாள் எந்த ஊரிலாவது இருந்தால், கண்ணபுரத்தார், என்ன பணச்செலவானாலும், அவளைத் தம் வைப்பாட்டியாகத் தம் ஊரில் கொண்டு வைத்துக் கொள்வது பரம்பரை வழக்கம். ஊரின் தெற்கு மூலைத் தோட்டத்தி லிருந்த பங்களா இதற்காகவே கட்டப்பட்டு, உபயோகமாகி வந்தது. கந்தையா முதலியார் வெளியூர் சென்று இங்கிலீஷ் படித்ததனாலும், அவர் ஐயா இறந்த பிறகும் உத்தியோகமாக வெளியூர்களிலே அவர் தங்கி விட்டதாலும், அவர் நாளையில் தான் பங்களா சில காலமேனும் காலியாயிருந்தது. ஆனால், அவர் மட்டும் முன்னோர் வழக்கத்தை முற்றிலும் கைவிட்டுவிடவில்லை; யாராவது சிநேகிதர்கள் கேட்டால், இரத்தத்தில் ஊறிப்போய் விட்டது என்பார்.

தன் கணவரிடத்திலிருந்த இந்தப் பெருங்குற்றம் வடிவம்மைக்குப் பொறுக்க முடியாத துயரத்தைக்கொடுத்தது. அவர் அவளைச் சிறிதும் அசட்டை செய்யவில்லை: பட்டாடைகளும் நகைகளும் எவ்வளவோ வாங்கிக் கொடுத்திருந்தார்; அவள் மேல் உண்மையான காதல் அதிகம் உடையவராகவே இருந்தார்; இதனால், அவள் மனம் நோகாதபடி, தன் சேட்டைகளைக் கூடியமட்டும் அவளுக்குத் தெரியாமல் மறைத்தே வந்தார். ஆனால் அவர் குணம் அவளுக்குத் தெரிந்த பிறகு, அவள் அவருடைய பெருங் காதலையும் மற்றெதையுமே மதியாமல், இந்த ஒரு குற்றத்தையே பாராட்டி, மனம் நொந்து வந்தாள். இதை எழுதும் நானும் ஒரு பெண்பாலானதால், அவள் செய்தது தவறு என்று சொல்ல எனக்கு நாவெழவில்லை. நமக்குள் பெண்கள் மட்டும் கற்பரசிகளா யிருப்பதும், ஆண் பிள்ளைகள் தங்கள் இஷ்டப்படி ஒளிவு மறைவின்றிக் கூசாமல் நடப்பதும், அதை எவரும் பழியா திருப்பதும், உலக தருமமாக நடந்து வருகிறது. தமது பெண்சாதிகளும் தம்மைப் போலவே நடந்தால், தம் மனம் எப்படி நோகும் என்று ஆண்பிள்ளைகள் மட்டும் எண்ணிப்பார்த்தால், இப்படி நடக்கக் கூசுவார்கள். ஆனால்

பெண்ணுக்கு இது நீதி, ஆணுக்கு அது நீதி என்று எற்பட்டுவிடவே, அவர்கள் அப்படி எண்ணிப்பார்ப்பதுமில்லை, பெண்களில் பெரும்பாலார் தமது கணவர்களின் ஒழுங்கீனமான நடத்தையைப்பற்றி அதிகம் வருந்துவதுமில்லை ; ஆண்களுக்கு அது பிறவிக்குணமென்று, தம் பாட்டைப் பார்த்துக்கொண்டு சும்மா இருந்து விடுகிறார்கள். இதற்குப் பொருந்த, நமது நீதி நூல்களும், ஆண்கள் எப்படிப்பட்டவரா யிருந்தாலும், பெண்கள், அவர்களையே தெய்வங்களாகப் பாவித்துத் தொழுது, அவர்கள் மனம்போல நடக்க வேண்டுமென்று போதிக்கின்றன.

வடிவம்மை இப்படி நினைப்பவளல்ல. நாளுக்கு நாள் தன் கணவரது குற்றம் மனத்தில் பதிந்து உறுத்தவே, காமாலைக் கண்ணுக்குக் கண்டதெல்லாம் மஞ்சளென்பதுபோல, அவள், தன் கணவர்மீது காரணமின்றியே பல தடவைகளில் சந்தேகங் கொள்ளவும், அதனால் தானும் மனம் நொந்து அவரையும் இமிசிக்கவும் தலைப்பட்டாள். கந்தையா முதலியார் பென்ஷன் பெற்று ஊர் வந்து சேர்ந்தபொழுது அவருக்கு ஐம்பத்தைந்து வயது. அதனால், அவர் திமிர் எல்லாம் அடங்கி, அவர் சாதுவாகவே இருந்தார் ; என்றாலும், பழைய வாசனையினால், தன் சேட்டையை முற்றும் விட்டுவிடவில்லை. தன் கணவரின் போக்கு வரவுகளிலேயே கண்ணாயிருந்த வடிவம்மை, ஒன்றை நூறும், நூற்றை ஆயிரமுமாக அவர் மேல் சந்தேகம் கொண்டும், இவ்வளவு வயதாகியும் இன்னும் அவர் திருந்தவில்லையே என்று வருந்தியும், அவரை வெறுத்துப் பழித்தும், அடிக்கடி இமிசிக்கலானாள். இதனால் புருஷனுக்கும் பெண்சாதிக்கும் அடிக்கடி சண்டையுண்டாகிப் பேச்சுவார்த்தை நின்று போயிற்று. தான் இப்பொழுது ஒழுங்காகவே நடப்பதாகவும், தன் பெண்சாதி தன்மேல் வீண்பழிகள் சுமத்துவதாகவுமே கந்தையாவின் நினைப்பு. தன் முன்னோரைவிடத் தான் எவ்வளவோ நல்லவரன்றோ ? தான் ஒழுங்கீனமாக நடந்து வந்த பாலிய திசையி லெல்லாம் பொறுத்திருந்து, இப்பொழுது தான் சரியா யிருக்கும்பொழுது தன்னை இப்படி வீண் பழிகூறி வருத்துகிறாளே என்று, அவருக்குண்டான வெறுப்பும் வருத்தமும் கொஞ்சமல்ல ; அவள் மட்டும் சரியாயிருந்தால், வேலை நீங்கிய தனது கடைசிநாள்களில், எவ்வளவோ சந்தோஷமா யிருக்கலாமே, அதற்கிடமில்

லேயே என்ற கிலேசமும் கொஞ்சமல்ல. இப்பொழுது உத்தியோகம் நீங்கி வேறு வேலையின்றி யிருக்கும் அவருக்கு, இதுவே எப்பொழுதும் மனக்கவலையாகி, வீட்டிலும் உலக வாழ்க்கையிலுமே வெறுப்புண்டாகி, மனம் திகைக்கலானர். தனக்குத் தோன்றிய தந்திரங்களை யெல்லாம் செய்து, வடிவம்மையின் வீணை சந்தேகங்களை நீக்கி அவள் மனத்தைத் திருப்ப, முயன்று பார்த்தார் ; ஒன்றும் பலிக்க வில்லை.

ஒரு நாள் மாலையில், வழக்கம்போல் புலங்களைச் சுற்றிப் பார்க்கப்போன கந்தையா முதலியார், இரவு மணி ஒன்பது, பத்து ஆகியும் வரவில்லை. வடிவம்மைக்கு உடனே சந்தேக முண்டாயிற்று. ஊரெல்லாம் தேடிப் பார்த்தும் அவர் அகப்படவில்லை. மறுநாள் கடிதங்களும் தந்திகளும் நாலாபக்கமும் பறந்தன ; பலர் பல திசைகளில் தேடத் தலைப்பட்டார்கள், அப்பொழுது தான் வடிவம்மையின் மனத்தில் கொஞ்சம் பயம் பிறந்தது. உடனே, உண்மையில் தன் கணவர் மீது அவளுக்குள்ள காதலெல்லாம் பொங்கி யெழுந்து, அவள் தன்னையே நொந்துகொண்டு புலம்பலானள்; ஆனல் ஒன்றும் வாய்விட்டுச் சொல்லவும் கூடவில்லை. அவள் அவரை இமிசித்த சில வேளைகளில், அவர் தற்கொலை செய்து கொள்வதாகவும், அல்லது எங்கேயாவது ஓடிப்போய் விடுவதாகவும், தன்னல் இனிப் பொறுக்க முடியாதென்றும் சொல்வதுண்டு. அப்படியே அவர் செய்துவிட்டாரென்று பயந்து, அவள் நடுங்கினள். ஆனல், இனி யென்ன செய்யலாம்? அவர் மட்டும் சேமமாய்த் திரும்பி வந்துவிட்டால், அவர் எப்படி நடந்தாலுமே, அவரைத் தெய்வமாக வைத்துக் கொண்டாடுவதாகத் தனக்குள் சபதம் செய்துகொண்டாள். அவர் திரும்பி வருவதற்காகத் தெய்வங்களுக் கெல்லாம் வேண்டிக்கொண்டாள். தீயினலே சுட்ட புண் ஆறினலும் நாவினலே சுட்ட புண் ஆறாதென்று, அவர் அடிக்கடி சொன்னதும்; சுடச்சுடத் தான் அவரைப் பல தடவைகளில் ஏசினதும் பேசினதும், அவள் ஞாபகத்துக்கு வந்தன. "அத்தை அருமை செத்தால் தெரியும்" என்பதுபோல, கணவன் அருமை இப்பொழுது தான் அவளுக்குத் தெரியவந்தது. அவரை வெறுத்துப் பழித்துத் தள்ளிவிட்டுத் தான் இது வரை செய்து கொண்டிருந்த வேறு வேலைகள் ஒன்றிலும், இப்

பொழுது அவள் புத்தி செல்லவில்லை; மக்களும் பேரப் பிள்ளைகளும் அவள் மனத்தைக் கொள்ளைகொள்ள வில்லை; அவரை நினைந்து நினைந்து மனமுருகித் தவிக்கலானள்.

நாள் பதினைந்தாகியும், பேப்பர்களில்கூட விளம்பரம் செய்தும், கந்தையா முதலியாரைப் பற்றிய விவரம் ஒன் றும் தெரியவில்லை. பிறகு ஒரு நாள் அவர் வீட்டுப் பேருக்கு இந்தக் கடிதம் வந்தது:—

போத்தனூர்

ஆடி மீ டௌ

கோலனூர் கோதண்டரும பிள்ளை எழுதுவது என்ன வென்றால் நானும் கந்தையா முதலியாரும் ரயிலை விட்டி றங்கி நடந்து போம் பொழுது, வெள்ளத்தில் ஆப்பிட்டுக் கொண்டோம் - தேவகிருபையினால் நான் தப்பி பிழைத் தேன், அவர் காலகதியாய் விட்டார். அவர் சட்டைப் பையிலிருந்து அகப்பட்ட கடிதத்தை யித்துடன் அடக் கம் செய்திருக்கிறேன். அதிலிருந்துதான் அவர் இன மும் விலாசமும் தெரியவந்தது. அவர் பணப்பையிலே ரூ ஏளரை சொச்சம் யிருந்தது. அதைக்கொண்டு அவர் தகன சடங்குகளை நடத்தினேம். அன்று யிரவு முதலே நான் காச்சலாய்க் கிடந்ததால், இதுவரை யெழுதக் கூடயில்லை. வளியிலே வீட்டுத் தொல்லைகளைப் பத்தி யென்ன யென்னமோ பேசிக்கொண்டிருந்தார். அவர் கதி பாவம் யிப்புடியாச்சுது. யிப்படிக்கு கோதண்ட ரும பிள்ளை.

உள்ளடக்கக் கடிதம்.

*K. KANDIAH MUDALIAR* | KANNAPURAM

*Retired Tasildar and Mirasdar* | **Dated 11-7-24.**

என் பிரியமுள்ள வடிவுக்கு,

நீ என்னை எப்படி வெறுத்தாலும் அவமானப் படுத் தினலும் நீ எனக்குப் பிரியமானவளே. நீ செய்யும் இம்சைகளை, உன் விஷயத்தில் நான் இதுவரை செய் துள்ள பிசகுகளுக்காக, என்னால் கூடிய மட்டும் பொறுத் துப் பார்த்தேன். ஆனல் நாளுக்குநாள் என்னால் சகிக் கக் கூடவில்லை. அதனல் நான் புறப்பட்டுப் போகிறேன். இனி எப்பொழுது திரும்புவேனே, திரும்பவே மாட் டேனே, கடவுளே அறிவார். நம் குழந்தைகளைப் பத்

திரமாய்ப் பார்த்துக்கொள். நான் போனதால் உனக்கு வருத்த மிராது. இனியேனும் சுகமாயிரு. நம்ம சுப்பையா நல்ல புத்திசாலி, அவனைப் பத்திரமாய் கவனித்துவா. இப்படிக்கு,

ஒரு காலத்தில் உனக்கும் பிரியமாயிருந்த உன் புருஷன்
கந்தையா.

இந்தக் கடிதங்கள் வந்தவுடன், வடிவம்மை, முட்டியும் மோதியும், தன்னையே நொந்து கொண்டும் பட்ட துயரத்தை எழுதி முடியாது. "ஐயோ பாவி! நானே கொலைபாதகி! நானே கொன்றேனே! நானே எமன் வாயில் தூக்கி விட்டேனே" என்று கதறியழுதாள். இரண்டு மூன்று தடவை அவளும் தற்கொலை செய்து கொள்ளப் பார்த்தாள்; அவள் மக்கள் தடுத்தார்கள். பெண்கள் சாகசக்காரிகளாயும் புருஷர் முறடராயு மிருப்பதால் விளையும் பொல்லாங்குகளை நினைந்து தான், நமது நீதி நூல்கள், அவருக்கொரு நீதியும் இவருக்கொரு நீதியும் கூறினபோலும். அது எப்படியானாலும், தாசில் கந்தையா முதலியாரின் கதி இப்படியாயிற்று; அவர் பெண்சாதி வடிவம்மையின் கதி அதைவிடத் துயரமாகவே இருக்கிறது. ஆனால் இனி யாரென்ன செய்யலாகும்? "இருந்தநாள் மட்டும் அவள் பாவத்தைக் கொட்டிக்கொண்டு சகித்து, இந்தநிலையில் விட்டுப்போனான் பாவி" என்று, சிலர் அவரையே தூற்றுகின்றனர். "ஆனாலும் பெண்களுக்கு இந்தச் சாகசம் ஆகாது; தான் மட்டும் உலகத்திலே தனித்துப் பிறந்தவள் போல, அவரை உள்ள நாள் மட்டும் இமிசைசெய்தாளே; இப்பொழுது அதற்குமே புருஷனில்லையே! இவளுக்கு நன்று வேணும்" என்று, அவளைச் சிலர் தூற்றுகின்றனர். உலகம் பலவித மன்றோ?

## மதுவிலக்கு

இத்தலைப் பின்கீழ், பலவகை மதுபானங்களை மட்டுமன்றி, உண்டவர் மதியைமயக்கி லாகிரியைத் தரக்கூடிய கஞ்சா, அபினி முதலிய பிற மயக்கப்பொருள்களையும், அவற்றால் செய்யும் லேகியங்கள், பானங்கள், குளிகைகள், புகைவஸ்துக்கள் முதலியவற்றையும் அடக்கியே பேசுவோம். இந்த லாகிரிவஸ்துக்கள் எல்லாம் துரைத்தனத்தார் ஆதிக்கத்துக்குள், அவர்க்கே தனியுரிமை என்று சொல்லும் நிலைமையிலே இருக்கின்றன - இவற்றைக் குடி

கள் லைசென்சு பெற்றுப் பயிர்செய்தும் உண்டாக்கியும் வரினும், தாம் ஆக்கிய விளைவுகளையும் செயற்கைப் பொருள்களையும் துரைத்தனத்தார்க்கே, அல்லது அவரிடமிருந்து வியாபாரம் செய்யும் உரிமை பெற்றவர்க்கே, விற்கவேண்டும். இதனால்தான், இவை யாவும் துரைத்தனத்தாரின் சொந்த மானியம் என்றோம். இவ்வியாபாரத்தினாலும், இவற்றைச் சார்ந்த இறை வரிகளினாலும், துரைத்தனத்தார் ஆண்டுதோறும் கனத்த வரும்படியை அடைகின்றனர். உதாரணமாக, சென்னைமாகாணத்தின் (1922-23) மொத்தவரும்படி ரூ 16,42,74,000; இதில், எக்ஸைஸ் என்னும் இந்த லாகிரிப்பகுதியிலிருந்துமட்டும் வந்தது ரூ 4,82,70,000; அதாவது, கால்வாசிக்கு மேலாகும். இதனால்தான், லாகிரிவஸ்துக்களால் ஜனங்களுக்கு நேரும் தீங்குகளை நன்கு அறிந்திருந்தும், துரைத்தனத்தார், மதுவிலக்கைக் கையாளமுடியாமல் சங்கடப்படுகின்றனர். நூறு ரூபா செலவுக்குக் காணாமல் தத்தளிப்பவன், 25 ரூபாயை இழந்து, மிகுந்த ரூ 75-க்கொண்டு காலம் தள்ளுவதெப்படி? இதனால்தான், மதுவிலக்குப் பிரசாரம் செய்வோரும், எப்படியாவது இத்தீங்கை வேறுத்து முற்றிலும் நீக்கிவிடவேண்டுமென்று முயலுவோரும் கூட, படிப்படியாகக் காலக்கிரமத்தில் அதை ஒழிக்கவேண்டுமென்றும், திடீரென நினைத்த பொழுதே தொலைத்துவிட முடியாதென்றும், கொஞ்சம் கொஞ்சமாகக் குறைக்கும் பொழுதுகூட, துரைத்தனத்துக்கு நேரும் வருமானக்குறையை வேறு வரிகளால் வேறுதக்க உபாயங்களால் நிரப்பவேண்டுமென்றும் கூறுகின்றனர். மதுபானத்தைப் பஞ்சமகா பாதகங்களில் ஒன்றாக வைத்தெண்ணும் ஹிந்துக்களும், தமது மகமது நபியால் மதிவிலக்கு விதிக்கப்பெற்ற முஸ்லிம்களும், எப்படியாவது மதுபானத்தை அறவே தொலைத்துவிட வேண்டுமென்று கருதுகின்றனரெனினும்; அமிதபானமே தீங்கென்றும், மிதமான மதுபானமானது இன்பத்தோடு சௌக்கியத்தையும் தருவதென்றும், அதனால் மதுவிலக்குத் தவறென்றும் கருதும் ஐரோப்பியர்களே ஆள்வோராயிருப்பதனால், பின்னும் அதிகமாக இவ்விஷயம் சிக்கலுறுகின்றது. மேல் நாட்டாரும்கூட, மதுபானத்தால் விளையும் தீங்குகளை வரவர உணர்ந்து, அமெரிக்க ஐக்கிய மாகாணங்களிலே மதுவிலக்குச் சட்டம் ஏற்பட்டு விட்டது. அவர்பாடு எவ்வாறாயினும், இந்தியாவிலே, இந்தியர்க்குள்ளே, மதுவிலக்கு அவசியமென்பது பெரும்பாலார் அபிப்பிராயம் - சட்டமூலமாய் இம்மது விலக்கை நிலைநாட்டக்கருதி, 'இந்திய மதுவிலக்குச்சங்கம்' ஒன்று, சமீபகாலத்தில் பம்பாய் நகரில் ஸ்தாபிக்கப்பட்டது - தமிழ்நாட்டவரும், இந்தியன் ஸோஷியல் ரிபார்மர் என்னும் பத்திரிகைஆசிரியருமான ஸ்ரீமான் K. நடராஜன்தான் இதன் அக்கிராஸனர் - இச்சங்கத்துக்கு மகாத்மா காந்தியும், இந்திய ஊழியச் சங்கத்தின் உதவித்தலைவரான ஸ்ரீமாந் தேவதாரும், இன்னும் பல மேதையரும், மதுவிலக்கு அவசியமென்னும் தமது அபிப்பிராயத்தைத் தெரிவித்துத், தமது அநுதாபத்தை வெளியிட்டிருக்கின்றனர். துரைத்தனத்தார்க்குப் பணமுட்டு நேருமென்பது மெய்யெனினும், மதுவிலக்கை உடனே ஏற்படுத்தி

விடக்கூடும், ஏற்படுத்திவிடவேண்டு மென்பதே மகாத்மாவின் அபிப்பிராயமாகும். ஸ்ரீமான் நடராஜன், தமது பத்திரிகையுடன், மாதம் ஒருமுறை 'மதுவிலக்கு அநுபந்தம்' ஒன்று பிரசுரம் செய்து, அச்சங்கத்தின் செயல்களையும் மதுவிலக்கைத் தழுவிய மற்ற சமாசாரங்களையும் வெளியிட்டு வருகிறார். அவர் அநுபந்தத்தில் காண்பவற்றில் ஏற்றதை ஏற்றவாறு எடுத்துக் கையாண்டு தமிழ் நாட்டுக்குதவ, "பஞ்சாமிர்தம்" அவருடைய அநுமதி பெற்றிருக்கின்றது—சென்னையிலே மதுவிலக்குக்காக ஒருகிளைச்சங்கம் ஏற்படுத்தவும் வேண்டிய முயற்சி நிகழ்கின்றது - ஸ்திரீகளுக்குப் பிரஸவ காலங்களிலும், பல வீனர்க்கும், சாராயம் முதலிய மதுக்கள் நல்லபயன் தரும் என்பது, நம்மவருள் சிலர் கொண்டிருக்கும் தப்பெண்ணமாகும். பல வைத்திய சிகாமணிகளே இதை மறுத்திருக்கின்றனர்— அபினி (Opium) என்பது சிறந்த மருந்து, சில நோய்களுக்குக் கைகண்ட பலன் தருவது என்பது மெய்யே; எனினும், உலகம் முழுதுக்கும் மருந்துக்காக மட்டும் எவ்வளவு அபின் ஆண்டுதோறும் வேண்டுமோ, அதைவிட ஐம்பது அல்லது அறுபது மடங்கு அபின் ஆண்டுதோறும் உண்டாக்கப்படுகிறதெனின், மற்றென் சொல்வது? 'ஆல்கஹால்' என்னும் மதுஸத்து, பல கைத்தொழில்களில் அதிகம் உபயோகப்படுகின்றது; ஆனால், மனிதர் அதை உட்கொள்வதால், முதலில் நோய்வாய்ப்பட்டுழன்று, வினாவில் யமன்வாய் வீழ்ந்துவிடுகின்றன ரென்பது உறுதி— 'அபின்' என்னும் லாகிரிவஸ்து, வழக்கத்தில் பேய்ப்பிடியாய்ப் பிடித்துக்கொண்டு, மக்களின் மதியைமயக்கி, ஜீவசக்தியைக் கறந்து, வாழ்நாளைக் குறுக்கிவிடுகின்றது என்பது பிரத்தியக்ஷம், வைத்தியர்களால் மிகக்கொஞ்சம் இது கையாளப் படுகிறதெனினும், லாகிரிக்காக உட்கொள்வார் பொருட்டே அபின் முக்கியமாய் விளைக்கப்படுகிறது. ஆண்டுதோறும் உலகத்திலே இவ்வாறு விளைக்கப்படும் மொத்தத்தில் பாதி அபினி வரை, நமது இந்தியா தேசத்தில் விளைகின்றது - பூசாரத்தில் மிகச்சிறந்த புலங்களில் இரண்டு லக்ஷம் ஏகராவரை (அபின் எடுக்கப்படும்) கசகசாவைப் பயிர்செய்ய உபயோகப்படுகிறதென்றால், மேல் பேசுவதேன்? இந்த 2 லக்ஷம் ஏகரா பூமியிலும் கோதுமை முதலிய தானியங்களைப் பயிரிட்டால், சருவதா க்ஷாமம் பிடுங்கித்தின்னும் இந்த நாட்டிலே, எத்தனை லக்ஷம் ஜனங்கள் உண்டு பிழையார்கள்! உலகத்திலே உள்ள பல நாட்டார்களும் ஒன்று சேர்ந்து அபின் விளைவை ஒடுக்கி, அபின் வழக்கத்தைத் தொலைக்க முயலும் பெரு முயற்சியில், நமது இந்தியா கவர்ன்மெண்டார் மட்டும், தமக்கு அபின் வியாபாரத்தாலுண்டாகும் லாபத்தைக் கருதி, எற்ற வண்ணம் தாமும் ஒத்துழையா திருப்பது தருமமல்ல. "தீவினை விட்டு ஈட்டியதே" பொருளாகு மன்றி, மற்றதெல்லாம் பொருளாகாது. அன்றியும், இந்தியாவில் விளையும் அபினில்பாதி இந்தியாவிலேயே செலவாகிவிடுவதால், இந்தியர்களும் இவ்வழக்கத்தால் நாசமடைகின்றனர். மிஸ்மாட் என்னும் அமெரிக்கப் பெண்மணி இவ்விஷயத்தில் பாடுபட்டுவருவது யாவராலும் பாராட்டுவதற்குரியது.

நாரா :—போடா, கேலி பண்ணுதே. நான் உயிரோடிருந்தால் சிது பெரியவளாகுமட்டும் கலியாணம் செய்வதில்லை யென்று தான் தீர்மானித்திருக்கிறேன்.

கோபா :—பெரியவளாய்விட்டால் மாப்பிள்ளை யாரு? அப்புறம் ஐயாயிரம் கொடுத்தாலும் யார் பண்ணிக்கொள்வார்கள்?

பத்மா :—ஏன், அண்ணுபிள்ளை சாமிக்கே பண்ணிக்கொள்ளட்டுமேன்.

கோபா :—“ நாங்கள் சோழதேசம், நீங்கள் வடதேசம், குடிகெட்டுப் போகாதா ?” என்று சொல்லிச் சிரித்தார்.

நாரா :—அது கிடக்கிறது; தரம் போதாதே? இரண்டு வயசு தானே வித்தியாசம்? இருபது வருஷம் கழித்து நடக்கிறதா யிருந்தால் செய்யலாம்; அது இப்போதைக்கில்லை.

## ஆறுவது அதிகாரம்.

செங்காட்டுப் பண்ணை முத்தையர், பண்ணை சேஷையரினும் பணக்காரர். கல்யாணி யம்மாள் அவர் செல்வக் கடைக் குட்டிப் பெண். அவருக்குச் சம்சாரம் தவறிப் போய் விட்டாள்; ஆனால், தன் சம்பந்தியின் கதியைக் கண்டு, அவர் புனர் விவாகம் செய்து கொள்ள வில்லை. அவர் வீட்டில், பெண்களும் நாட்டுப் பெண்களும் பேரர் பேர்த்திகளும் அநேகர் இருந்தார்கள்; அவர் சகோதரி பாகீரதியம்மாள் என்ற விதந்துவும் இருந்தாள். அவர் வீட்டில் அசௌகரியமா யிருக்கு மென்று நினைத்து, தன் மனைவியையும் தமக்கையையும், அவருக்கே சொந்தமான பக்கத்து வீட்டில் தனியா யிருக்கும்படி, கோபாலையர் ஏற்பாடு செய்திருந்தார். அவர் ஏற்பாட்டின்படி, திருநெல்

வேலி டாக்டர் அடிக்கடி வந்து பார்த்து, அவருக்கு எழுதிக் கொண்டிருந்தாரே யன்றி, அவர் மருந்துகள் சரியாய்க் கொடுக்கப் படவில்லை. வீரவநல்லூர் சாஸ்திரிகள் வந்து ஒரு மாதம் மந்திரவாதம் செய்தார்; ஒன்றும் பலிக்க வில்லை. பின்பு செங்கோட்டைத் தாணுவையர் தருவிக்கப் பட்டார்; அவர் பேர்போன மந்திரவாதி; அவர் பிரம்பு, கட்டை விரற் பருமனிருக்கும்; ஏழு வெள்ளிப் பிடிகள் பிடித்திருக்கும்; அவருக்குத் துர்க்கை பிரத்தியக்ஷம் என்று சொல்லிக் கொள்வார். அவர் மாந்திரீகத்தில், குங்குமமும் புளியின் மலார்களும் அதிகம் செலவழியும்; அவர் ஜபித்த குங்குமத்துக்கு அடங்காத பேயும் புளியின் மலாருக்கு அடங்கி விடும் என்பது அவர் கொள்கை. அவர் வந்து ஒரு வாரத்திற்குள், கல்யாணியம்மாள் தேகமெல்லாம் பிரம்புக் கூடைபோல் தடித்து, இரத்தவெள்ள மாகிவிட்டது; பேயாட்டமும் அதிக மும்முரமாய் விட்டது; அவள் அழகிய கூந்தலெல்லாம் சிக்குண்டு சடைப் பிடித்துக் கத்தரிக்கப் பட்டது.

ஒரு நாள் தாணுவையர், தங்கத்தகட்டில் மகாசக்தியுள்ள சக்கரமொன்று வரைந்து, மூன்று நாள்களாக நெஞ்சளவு ஜலத்தில் நின்றுகொண்டு ஜபித்து, விசேஷ பூஜைகள் செய்து துர்க்காதேவியின் அநுக்கிரகத்தை அடைந்து, ரக்ஷாபந்தனம் செய்தார். கல்யாணியம்மாளைப் பிடித்திருந்த மூன்று பேய்களுள், தரிசடி மாடனுக்கு அன்று வெகு கோபம்; நான்கு புளியின் மலாருகள் தும்பு தும்பாய்ச் சிதறிப்போயும் அடங்கவில்லை; கடைசியில், தாணுவையர் அவன் வாயைக் கட்டிவிடுவதாக ஏதோ ஒரு கொடூரமான பிரயோகம் செய்யத் தொடங்கவே, தரிசடிமாடன் (அதாவது கல்யாணியம்மாள்) திடீரென்று அந்த யந்திரத் தகட்டைப் பிடுங்கிப் பற்களாற் கிழித்து, முற்றத்தில் எறிந்து விட்டான். உடனே தாணுவையருக்கு (அல்லது, துர்க்காதேவிக்கோ?) கோபம் வந்து விட்டது. பக்கத்தில் மலா

ரொன்றும் காணமல், வேகமாய் எழுந்து தன் கால்களால் கல்யாணியம்மாளை உதைத்தார். கூடவிருந்த சாவித்திரியம்மாளும், பாகிரதியம்மாளும், "ஓ! ஓ!! சூலியே!" என்று கதறினர்கள். "இந்தத் தரிசடிமாடனை ஊரைவிட்டோட்டி, அவன் கோயிலிருந்த இடம் தெரியாமல் எருக்கும் குருக்கும் கலந்து விதைக்கா விட்டால், என் பேர் தானுவுமில்லை, எனக்கு தேவி பிரத்தியக்ஷமுமில்லை." என்று வீரம்பேசினர் மந்திரவாதி. அன்றிரவே, கல்யாணியம்மாள் கருவுற்றிருந்த சிசுச்சிதைந்து விழுந்துவிட்டது. அவள் பட்ட கஷ்டம் சொல்லி முடியாது. மறுநாள் திருநெல்வேலி டாக்டரை அழைத்துப் பார்க்கச் சொன்னர்கள். அவர் புருஷரானதால், சரீரத்திலுள்ள கோளாற்றை மருத்துவச்சி மூலமாகவே தெரிந்துகொள்ள வேண்டுமென்றூர்கள். மருத்துவச்சியிடத்திலோ அவருக்கு நம்பிக்கையில்லை; நாளுக்கு நாள் வியாதி அதிகரித்துப் பிராணபாயத்துக்கு வந்து விட்டது; டாக்டர் சொன்னபடி, கோபாலையருக்குத் தந்தி கொடுத்தார்கள்.

அவரும் மறுநாளிரவு வந்து சேர்ந்தார். எலும்பையும் தோலையும் தவிர வேறு சதைப்பற்றேயின்றி மெலிந்து, மேலெல்லாம் இரத்தக் குழப்பமாகப் புண்ணுகி, ஆட்டங்களெல்லாம் ஓய்ந்து, நாவெடுத்துப் பதிற்பேசவும் சக்தியின்றி, ஜுரம் நெருப்பாய் வறுக்க, தலையும் மொட்டையாகி, கிழித்த நார்போலக் குற்றுயிருடன் கட்டிலின் மேற் கிடந்த தன் அருமை மனையாளைப் பார்த்தவுடன், கோபாலையர் தேம்பித் தேம்பி அழுதார். அவர் மனைவி கண்களி விருந்தும் தாரை தாரையாய்க் கண்ணீர் பெருகிற்று. மறுநாள் காலையில், கோபாலையர் திருநெல்வேலிக்குச் சென்று, சகல செலவும் போகத் தினம் ஐந்நூறு ரூ. வேண்டுமானலும் தருவதாகவும், உடனே புறப்பட்டு வந்து தன் மனைவியைப் பார்க்கவேண்டு மென்றும், டாக்டர் கான்புட்டுக்குத் தந்தி கொடுத்தார்; தன் வேலை

களையும் மற்ற வியாதிஸ்தரையும் விட்டுவிட்டு அவ்வளவு தூரம் வரமுடியாதென்று உடனே பதில் தந்தி வந்து விட்டது. பின்பு, கோபாலையர், திருநெல்வேலி ஜில்லா ஸர்ஜனாகிய பெரிய டாக்டரைச் செங்காட்டுக்கு அழைத்துப் போய்த், தன் மனைவியைக் காட்டினார். அவர் வந்து நாலு நாள் வைத்தியஞ் செய்ததில், அபாயம் நீங்கிக் கொஞ்சம் குணப்பட்டது. அதற்குள் கோபாலையர் எடுத்திருந்த ரஜா முடிந்துவிட்டது; அதிக ரஜா எடுக்கவும் கூடவில்லை. பாளையங்கோட்டையில் ஒரு வீட்டைத் திட்டம் செய்து, தன் மனைவியைப் பெரிய டாக்டர் பார்வையில் அங்கே கொண்டுவைத்து, தன் மூத்த மைத்துனரையும், தமக்கையையும், பாகிரதியம்மாளையும் சகாயத்துக்கு வைத்துவிட்டு, அவர் சென்னைக்குத் திரும்பிச் சென்றார்; அவர் குழந்தைகளிருவரும் செங்காட்டில் தம் பாட்டனார் வீட்டிலேயே இருந்தார்கள். இவ்வாறு தானொரு பக்கமும், மனைவியொரு பக்கமும், மக்கள் ஒரு பக்கமுமாயிருப்பதில் அவருக்குள்ள விசனம் கொஞ்சமல்ல. தன் மனைவி ரயில் பிரயாணம் செய்யக்கூடிய அளவு சுகப்பட்டவுடன், சென்னைக்கு அழைத்துப் போக எண்ணியிருந்தார். ஆனால், அவள் கஷ்டகாலம், பாயும் படுக்கையுமாகவே ஆறு மாதம் கிடந்தாள்: இராப்பகல் நித்திரையின்றி அவளுக்காகச் சாவித்திரியம்மாள் பட்ட சிரமம் கொஞ்சமல்ல; அவள் தந்தை முத்தையரும், அடிக்கடி வந்து பார்த்துப்போவார். அக்காலங்களில் அவர் சில சமயம் குழந்தைகளையும் கூட்டிக்கொண்டு வருவார். மறுபடியும் பிழைத்து உயிர் வாழலாம் என்ற நம்பிக்கை குறையக் குறைய, கல்யாணிக்குத் தன் கணவர், குழந்தைகள் மேலுள்ள வாஞ்சை அதிகரித்தது. 'எப்படிக் குழந்தைகளை விட்டுப்போவேன்!' என்று ஏங்கினாள். விடுமுறையில் வந்திருந்தது தவிர, அவள் கணவர், மூன்று தரம் ரஜா எடுத்து வந்து அவளைப் பார்த்துப் போனார். நாளா

வர்த்தியில், அவள் படும் கஷ்டத்தைப் பார்ப்போர் யாருமே, அவள் சீக்கிரம் போய்விட்டால் நலமென்று நினைக்கும்படி ஆய்விட்டது.

கடைசியில் ஒரு நாள், பெரிய டாக்டரும் கை விட்ட பின், கோபாலையருக்கு மறுபடியும் தந்தி கொடுத்துவிட்டு, மேனுப் பல்லக்கில் வைத்து அவளைச் செங்காட்டுக்குத் தூக்கிக் கொண்டுபோய் விட்டார்கள். அங்கே போன பின், கொஞ்சம் குணப்படுவது போலிருந்தது; வர வேண்டாமென்று பட்டணத்துக்குத் தந்தி கொடுக்க எண்ணினார்கள். "தேமேன சங்கரலிங்கத்திட்டே நாட்டு மருந்து சாப்பிட்டுண்டு. இங்கே யிருந்தாக்கா, இம்பிட்டு வந்திருக்கவே வந்திராது; திராபகம் தீயின்னு! திராபகம் குடிச்சுக் குடிச்சுத்தான் இப்படி யாச்சு; நான் சொன்னேனேபார்; இன்னமே தெளிஞ்சுடும்; அம்மாப் பெண்ணுத்துக் கோமதிக்கும் இப்படித் தானிருந்தது, நான் சொன்னேன், அப்படியே என்வாக்குப் பலிச்சுது பாத்துக்கோ!'' என்றாள் முத்துப் பாட்டி. மறு நாளும் குணப்படுவது போலவே யிருந்தது. ஊரில் ஒரு அம்பட்டன், கைம்பெண்டாட்டி பாக்கி யில்லாமல், ஒவ்வொருவர் சொன்ன மருந்தையும் கொடுத்தார்கள். ஆனல் மாலை ஏழு மணி முதல் நோய் அதிகரித்தது; அன்று ராத்திரி தப்பாது என்றார் சிலர்; சங்கரலிங்கப் பண்டிதன் மட்டும் தைரியம் சொல்லிக்கொண்டே யிருந்தான்.

தான் பிறந்த வீட்டு நடுக்கூடத்தில், தரையில் ஒரு பாயின்மேல் கிடந்தாள், கல்யாணி. முத்தையரும், பாகீரதியம்மாளும், சாவித்திரியும் சூழ்ந்து வீற்றிருந்தார்கள். அது பழைய காலைய வீடு; நன்றாய் வளர்ந்த மனிதனுக்குப் பாக்கட்டை தலையில் தட்டும்; புன்னைக்கா யெண்ணெய் விட்டுத் துணித்திரி போடப்பட்ட ஒரு குத்து விளக்கு மட்டும் எரிந்துகொண்டிருந்தது; சங்கரலிங்கப் பண்டிதன் அதின் வெளிச்சத்தில் ஏதோ மருந்து சேர்த்

தூக்கொண்டிருந்தான். எப்பொழுது என்ன நேருமோ என்று பயந்து மற்றவர்களெல்லாம் அவசரமாய்ப் பட்டா சாலைப் பக்கம் சாப்பிட்டுக்கொண் டிருந்தார்கள். ஓய்வொழி வில்லாமல், கல்யாணி தலையணைமேல் தன் தலையை இருபுற மும் மாற்றி மாற்றிப் புரட்டி முனகிக் கொண்டும், அடிக் கடி நாவை வெளியே நீட்டிச் சுழற்றித் தண்ணீர் கேட்டுக் கொண்டு மிருந்தாள். வைத்தியன், ஒரு துளி நீர் கூடக் கொடுக்கப்படா தென்று சொல்லி விட்டதால், ஒருவரும் தண்ணீர் கொடுக்கவில்லை. சாவித்திரி, கல்யாணியின் காலைத் தொட்டுப் பார்த்துவிட்டு, "பா தமிரண்டும் வாழைத் தண்டாய்க் குளிர்ந்து போச்சுதேடா, சங்காலிங்கம்! நீ வந்து கையைப் பாரு" என்றாள்.

"சும்மா இருக்கட்டும் என்கிறேனே. நீங்கள் ஒன் றுக்கும் பயப்பட வேண்டாம்" என்றான் அவன். சற்று நேரம் பொறுத்து, சாவித்திரி, "மரணதாக மெடுத்து நாக்கு வறளுகிறதேடா; ஒரு சொட்டு ஜலமோ பாலோ குத்தக் கூடாதா? இப்படித் தவிக்கிறாளே!" என்றாள்.

"அத்திக் கொதிப்பில்லா இந்தப்பாடு படுத்துது; திராபகத் தண்ணி தேகத்திலுள்ள ஈரத்தை யெல்லாம் உறிஞ்சிவிட்டுது. இதோ, இந்த மருந்து கொடுத்தப்புறம் சாமப்பொளுது போனால், தண்ணியோ, வெந்நியோ, பாலோ, கஞ்சியோ, உங்க இட்டம்போ லெல்லாம் கொடுக் கலாம்." என்றான் பண்டிதன்.

"அடி பாவிகளா! அடி பாவிகளா!" என்று தன் உதடுகளையே நக்கிக்கொண்டு, மிகவும் ஈனஸ்வரத்தில் முனங்கினாள் கல்யாணி. அவள் பேச்சு, காதைக் கிட்டக் கொண்டுபோய் உற்றுக் கேட்டால்தான் தெரியும்படி இருந்தது. சற்று நேரத்துக்கெல்லாம், பண்டிதன் கொடுத்த மருந்தைக் குடிப்பதே வெகு சிரமமாய்விட்டது. பின்பு கல்யாணி சிறிது பொழுது கண்ணை மூடிக்கொண்டு மயங்கிக் கிடந்தாள்; தலைமட்டும் ஓயாமல் ஆடிக்கொண்டே

யிருந்தது. பாகீரதியம்மாள் முத்தையரையும் சாப்பிடப் போகச் சொன்னாள்; ஆனால் அவர் அதற்கு இணங்கவில்லை.

சாவித்திரி :—(மறுபடியும் தொட்டுப் பார்த்துவிட்டு) முட்டு வரைக்கும் குளிர்ந்து போச்சுதேடா பாவி! அம்மா, கல்யாணி! உனக்கு என்ன செய்கிறதம்மா? கண்ணைத் திற.

பண்டிதன் :—இந்த அரியூர் அம்மா எப்பமும் இப் படித்தான்! நீங்க சும்மா இரிங்க எங்கிறேனே.

கல்யாணி :—(திடீரென்று கனவுகண்டதுபோல் கண் ணைத்திறந்து நாலாபக்கமும் பார்த்துப், பின்பு சாவித் திரியை நோக்கி,) "இன்னும் வரலையா? இன்னும் வர லையா?" என்று கேட்டாள்.

சாவித் :—யார் வரலையா என்று கேட்கிறாய்? உனக்கு என்ன செய்கிற தம்மா?

கல்யாணி :—உங்க தம்பி?......உங்கதம்பி?

முத்தையர் :—இன்னும் வரக்காணோமே? நேற்றுக் காலையிலேயே தந்தி கொடுத்தது; சாயங்காலம் புறப்பட் டிருந்தால் அஸ்தமிக்க வந்திருக்க வேணுமே. புறப்பட வில்லையோ என்னவோ?

கல்யாணி :—அடபாவி!......அடபாவி!

பாகீரதியம்மாள் :—உனக்கு என்ன செய்கிறது, கல் யாணி? அதிக தாகமாயிருக்கா? ஜலம் தரட்டுமா?

சற்றுநேரம் ஒன்றுஞ் சொல்லாமலிருந்து, பின்பு, கல்யாணி, "என் குழந்தைகள் எங்கே? மன்னி,......என் குழந்தைகளைக் கூப்பிடுங்கள்" என்றாள்.

சாவித்திரி :—சாப்பிட்டுக்கொண் டிருக்கிறார்கள்; இது வரையும் இங்கேதா னிருந்தார்கள். எதுக்கு அவர்கள்?

கல்யாணி :—கூப்பிடுங்கள்........சீக்கிரம் கூப்பிடுங் கள்...என் பிராணன் போகப்போகிறது...கூப்பிடுங்கள்.

சாவித்திரி :—ஏதடியம்மா, உனக்கு என்ன செய்கிறது ? அடே சாமீ! ஓடிவாடா ; குட்டியையும் கூட்டிக் கொண்டுவா, ஓடிவா, அம்மா கூப்பிடுகிறுள்.

சற்று நேரத்தில் கோபாலையரின் இரண்டு குழந்தைகளும், அவர் மைத்துனர் இருவரும், சில பெண்களும் வந்து சேர்ந்தார்கள். சாவித்திரியம்மாள், குழந்தைகளைத் தன் பக்கத்தில் இருத்தி, கல்யாணியம்மாள் கையை எடுத்து அவர்கள் மேல் வைத்து, "கல்யாணி! சாமியும் குட்டியும் இதோ இருக்கிறுர்கள், பார்" என்றுள்.

கல்யாணி :—இன்னும் வரலையா......இன்னும் வரலையா ?

சாவித்திரி :—இதோ இருக்கிறுர்களே. இது தான் சாமி, இது தான் குட்டி ; கண் நேராகத் தெரியவில்லையா? மயக்கமா யிருக்கா ?

கல்யாணி :—உங்கதம்பி ?......உங்கதம்பி ?...

முத்தையர் :—இப்போ வந்து விடுவன் ; திருநெல்வேலிக்கு வந்தாச்சாம் ; இதோ வந்துவிடுவன்.

கல்யாணி :—ஆ!......வந்தாச்சா ?......எங்கே ?......எங்கே ?......

சாவித்திரி :—இதோ வரலாச்சு. உனக்கு என்ன செய்கிறது ?

கல்யாணி :—அடபாவி !......அடபாவி !

இதற்குள் சாவித்திரியும் மற்றும் சிலரும் கண்ணீர் வடித்து, மெதுவாய் அழத்தொடங்கினர் ; குட்டி, தன் அத்தை மடியிற் சாய்ந்தபடியே தூங்கிவிட்டாள் ; சாமி, பரக்கவிழித்துக்கொண்டு, பதறிப்போய் உட்கார்ந்திருந்தான் ; கல்யாணியம்மாளுடைய கை, குழந்தைகள் மேலேயே கிடந்தது ; கண்கள் மூடி யிருந்தன. தலை, முன் போல அவ்வளவு ஆடவில்லை ; அவள் தகப்பனர், முகமும் கையுமாய்ப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தார்.

“இப்பந்தான் உள்ளே போனவர் கொஞ்சம் விசையாய்ப் பிடிக்கிறுரு!” என்றுன் பண்டிதன். சற்று நேரத்தில், கல்யாணி மறுபடியும் கண்ணைத்திறந்து, “இன்னும் வரலையா?......என்னெஞ்சு வேகாது.........வேகாது.” என்றுள். இதைக்கேட்டு, இதுவரையும் மௌனமாய்க் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தவர்கள், தேம்பி விசித்து அழத்தொடங்கினர்கள். “ஐயோ! பாவம்! பிராணன் எல்லாம் அவன் மேலே” என்றுள், பாகிரதியம்மாள்.



கல்யாணி :—நீங்க சொல்லுங்கோ..........

சாவித்திரி :—(கண்ணீரைத் துடைத்துக் கொண்டு) என்ன சொல்லவேணும், அம்மா? கல்யாணி! கல்யாணி! யாருக்கு என்ன சொல்லவேணும்.

கல்யாணி :—இன்னெரு ஜன்மத்திலாவது......இன்னெரு ஜன்மத்திலாவது......உங்கதம்பிக்கு வாழ்க்கைப் பட்டு...

சாவித்திரியம்மாளால் துக்கம் பொறுக்க முடியவில்லை; ஒன்று பேசவும் நாவெழவில்லை.

பாகீரதியம்மாள் :— பலமான மருந்து கொடுத்திருக்கு: பிழைத்து விடுவாய்; பயப்படாதே, கல்யாணி. அதோ! கவுளியடிக்கிறது; தீபமும் புஷ்பிக்கிறது, நல்ல சகுனம்.

கல்யாணி கண்கள் மூடியே இருந்தன. சற்று நேரத்துக்குப்பின், அவள், "அவா மடியிலே.....பிராணனை விட வேணும்......அவா மடியிலே......" என்றாள்.

தெருவாசலில் ஒரு குதிரைவண்டிச் சத்தம் கேட்டது; அடுத்த நிமிஷத்தில் கோபாலையர் உள்ளே வந்துவிட்டார். அவரைக்கண்டதும், சாவித்திரி, "அம்பி!" என்றாள்; மேற்சொல்ல முடியவில்லை. பாகீரதியம்மாள், "மாப்பிள்ளை! உமக்காகத்தான் தவிக்கிறாள். அவள் தலையை எடுத்து உம்முடைய மடிமேல் வைத்துக்கொள்ளும்" என்றாள். கோபாலையர், மெதுவாய் அப்படியே செய்து, கண்ணீர் தேக்கிய குரலில், "கல்யாணம்!" என்று அழைத்தார். அவர் மனைவி திடீரெனக் கண்களைத்திறந்து, சிறிதுநேரம் அவர் முகத்தை வெறித்து விழித்துப் பார்த்து, இதுவரையும் பேசின ஹீனஸ்வரமின்றி, ஸந்தோஷமான குரலில், "அத்தான்!" என்றாள்; அஃதோடு சுவாசம் அடங்கி விட்டது.

இனியென்ன சொல்வது? மேல்விழுந்து அழுதார்கள்; அடித்துக்கொண்டார்கள்; முட்டினார்கள்; மோதினார்கள்; குழந்தைக ளிருவரும், "அம்மா! அம்மா!" என்று அலறியழுதனர். "இதற்குத்தானா நான் வந்தேன்! இங்கே கொண்டுபோவதாகத் தந்தியி லடித்திருந்தால், பாளையங்கோட்டைக்குப்போய் அலையாமல், இரண்டு மணி நேரத்துக்கு முன்னவது வந்திருப்பேனே! கல்யாணம்! இன்னும் ஒரு வார்த்தையாவது சொல்லமாட்டாயா? 'அத்தான்' என்று கூப்பிட்டவள், வேறொன்றும் சொல்லவில்லையே! சாமியும் குட்டியும் "அம்மா! அம்மா! என்று அலறுவது உனக்குக் கேட்கவில்லையா?" என்று, கோபாலையர், முகத்திற் புடைத்துக்கொண்டு, பன்னிப் பன்னி அழுதார்.

## ஏழாவது அதிகாரம்.

கல்யாணியம்மாள் இறந்துபோய்ச் சில வருஷங்களாய்விட்டன. வைத்தியப் பரிக்ஷைதேறி, சென்னை ஆசுபத்திரியிலேயே கோபாலையர் வேலையாயிருந்தார். நாராயணையர் வீட்டுக்கு அடுத்த வீட்டிலேயே அவரும், அவர் குழந்தைகளும், சாவித்திரியம்மாளும் வசித்து வந்தார்கள். நாராயணையர் குழந்தைகளுடன் அவர் குழந்தைகளும் பள்ளிக்கூடத்தில் படித்து வந்தார்கள். வீட்டிலும் படிப்புச் சொல்லிவைக்கப்பட்டது; பெண் குழந்தைகள், சங்கீதமும் தையலும் கூடக் கற்று வந்தார்கள். தாயில்லாத குறையைச் சிறிதுமே உணராதபடி, சாவித்திரியம்மாளும் பத்மாவதியம்மாளும், கோபாலையர் குழந்தைகளைப்பேணிச் சீராட்டி வந்தனர்.

யார் என்ன சொல்லியும், சாவித்திரியம்மாள் பலவிதமாய்ப் போதித்தும், கெஞ்சியும், இடைவிடாது தூண்டியும், கோபாலையர் மறுபடியும் விவாகம் செய்துகொள்ளவில்லை. அவர் மாமனார் முத்தையர், தன் தம்பியின் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளச் சொன்னார். "வயது பத்தாகிவிட்டது, அடுத்த வருஷம் ருதுவாய் விடுவாள்; ஒன்றுக்குள் ஒன்று, சௌகரியமா யிருக்கும்; தாயில்லாக் குழந்தைகளுக்கும் ஒரு தாரகமா யிருக்கும்" என்று, எவ்வளவோ அழுத்திச் சொன்னார். வேறு சில தனவான்கள், பெண்களைப் பெற்றுவிட்டுப் பரிதவிப்பவர், கோபாலையரின் செல்வத்தையும் உத்தியோகத்தையும் பார்த்து, இரண்டாயிரம் மூவாயிரம் கொடுத்துத் தங்கள் பெண்களைக் 'கன்னிகாதானம்' செய்து கொடுப்பதாக வருந்தி வேண்டினார்கள். ஒன்றுக்கும் அவர் இணங்கவில்லை. சாவித்திரியம்மாளின் தூண்டுதலின் பேரில் நாராயணையர் ஒரு நாள் கேட்டதற்கு, "நாணு! நீயுமா அவளைப் போல் பேசுகிறாய்? நமக்குள் பன்னிரண்டு வயதுப் பெண்கள் கிடைப்பதும் துர்லபம்; ஒரு சிறு பெண்ணை மணந்து கொலைசெய்தது போதாதென்று, இன்னும் ஒரு சிறு

பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்கிறாய்? அப்படிக் கின்றி, பத்துப் பதினொரு வயதில் ஒரு பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டு, ஐந்தாறு வருஷம் ருது சாந்தி செய்யாமல் வைத்திருந்தால்,—அவளைப் பெற்றவர்கள் அப்படிவைத்துவைக்க ஒருபொழுதும் சம்மதியார்கள்; ஒரு வேளை அவர்களே சம்மதித்தாலும்,—நான் சிரஞ்சீவி யில்லையே? திடீரென்று எனக்கேதாவது நேர்ந்தால், அந்தப்பெண்ணின் கதி என்னவாகும், யோசித்துப்பார். அல்லது, எனக்கு வயதிற் பொருந்திய ஒரு விதவையை விவாகம் செய்து கொள்ளலாமென்றால், அக்கா சம்மதிப்பளா? குட்டிக்கு அப்புறம் வரன் கிடைக்குமா!" என்று பதிற் சொன்னார்.

நாராயணையர்:—அது நிஜம்தான்; சாவித்திரியே சம்மதித்தாலும், உன் பெண்ணுக்கு வரன் கிடையாது; இப்பொழுது இரண்டாயிர மானால், அப்புறம் ஐயாயிரம் கொடுத்தாலும் நல்ல வரனைக் கிடையாது.

கோபா:—நானும் அதுதான் யோசித்துக்கொண்டிருக்கிறேன். குட்டியை மட்டும் கட்டிக்கொடுத்து விட்டால், பின்பு என் இஷ்டம்போற் செய்யலாம். சாமியைப் பற்றி விசாரமில்லை: அறுபது எழுபது வயசுக் கிழவர்களுக்கும், குஷ்டரோகம் பிடித்த பிள்ளைகளுக்கும் எளிதாய்ப் பெண்கள் கிடைக்கும் இந்த நாளிலே, ஒருத்தியில்லை, மூன்று விதவைகளை நான் கலியாணம் செய்துகொண்டாலும், அல்லது ஒருகிறிஸ்துவச்சியையோ துரைசானியையோ மணந்து கொண்டாலும் கூட, பணமுள்ளவரையும், அவனுக்கு மட்டும் 'நான், நீ,' என்று பெண் கொடுக்க வருவார்களென்பது நிச்சயம்.

நாரா:—ஆனால் குட்டியை மட்டும் குழந்தைப் பருவத்திலேயே விவாகம் செய்து கொடுக்கலாமா?

கோபா:—அதுவும் யோசனைதான்: ஆனால், குட்டி விஷயத்தில் என் அக்காளும் ஒட்டாள், என் மாமனாரும்

# விகடப்பா

(414-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ஸ்ரீ. ஸி. எம். இராஜா செட்டியார், சென்னை

கீமாயணம்-திறள்

(1) நாடிய பொருள் கை கூடும் நாமுமே பாடுபட்டால் ;
வீடது வெளியாய்ப் போகும் மேற்கூரை பிரித்து விட்டால்;
ஆடிக்கு முந்தி ஆனி; அப்பனைப் பெற்றாள் பாட்டி;
காடிதான் புளித் திருக்கும்; கருப்பட்டி இனிக்கும் தானே.

(2) சிறப்பொடு பூனை இறப்பில் இருந்தால்
புறப்பட மாட்டா தெலி.

ஒரு லோபி பாடியவை.

(3) அட்டிபடா நாணயப் புள்ளிகள் வந்தாலும்
அவசரத்துக் கில்லை யென்பாய்; அழுத்திக்கேட்டால்
முட்டிருக்கு தென்பாய்; பின் முறுக்கிக் கேட்டால்,
மூன்றும் பேரிடம் வாங்கித் தருவேன், அங்கே
வட்டி கட்டா தெனச் சொல்வாய்; வேண்டினால், போய்
வாருமென்றே அனுப்பிவிட்டு, வைத்தரொக்கம்
பட்டிமையாய் வேளியேற்றி, மீண்டும் வாங்கிப்,
பணத்தையே எந்நாளும் பணிவாய் நெஞ்சே.

(4) நாட்டு வர்த்த கத்தினுக்கே ஏழையாக
நாலஞ்சு பேர்களை நீ கூட்டுச் சேர்த்து,
வீட்டுவேலையை அவரால் தீர்த்துக் கொள்வாய்;
வேருட்டுச் சம்பளத்தை வீணாக் காதே;
கோர்ட்டு முன்னால் அவர்களையே சாக்ஷிபோடு;
கோரிய காரியங்களும் கை கூடும்; இவ்வேற்
பாட்டுவழி காட்டி, இசை சூட்டி வைக்கும்
பணத்தையே எந்நாளும் பணிவாய் நெஞ்சே.

(5) மாதர் ஒயில் கண்டு மனம் வைக்க வேண்டாம்;
வன்ன வன்ன வஸ்திரத்தில் ஆசை வேண்டாம்;
கீதமினி தெனக்காது சாய்க்க வேண்டாம்;
கெட்ட குடித் தனத்தார்தம் இஷ்டம் வேண்டாம்;
வேதமொழி தனை நம்பிக் கோயில் வாசல்
மிதியாதே, துதியாதே; மேலும் மேலும்
பாதகங்கள் பலசெய்து புரிந்து சேர்க்கும்
பணத்தையே எந்நாளும் பணிவாய் நெஞ்சே.

## பத்திராதிபர் குறிப்புக்கள்

(436–ம் பக்கத்தின் தொடர்ச்சி)

திருவாங்கூர் அரசு :—சிலர் பயந்தபடி யின்றி, காலம் சென்ற மகாராஜா ஸ்வீகாரஞ்செய்து கொண்ட அரசிக ளில் மூத்தமகாராணியாரே, மைனராயிருக்கும் மகாரா ஜாவின் பிரதிநிதியாயிருந்து அரசு செலுத்தும்படி பிரிட் டிஷ் துரைத்தனத்தார் அங்கீகரித்து, அவ்வண்ணமே நடந்து வருகின்றது. பிரதிநிதி மகாராணியாரின் முதல் ஆக்ஞைகளில் ஒன்றினால், வைக்கம் ஸத்யாக்ரகப் போரா ட்ட நிமித்தம் சிறைப்பட்டிருந்த தேசத்தொண்டர்கள் விடுதலையடைந்து விட்டனர். ஆயின், இதையே அடிப் படையாகக் கொண்டு மனக்கோட்டைகட்ட இடமில்லை. உலகத்திலே யுள்ள நாகரிக நாடுகளிலெல்லாம், பூர்வாசார அபிமானம் அதிகமாக உள்ளது நமது இந்தியாதேச மென்னலாம்; இந்தியாவிலே இப்பழம் பற்று மிக்கது தக்ஷிணபாகம்; தக்ஷிணபாகத்தில் அப்பற்று அமிதமா யுள்ளது மலையாளமாகும்; இப்படிப்பட்ட மலையாளத்தி லேயும் ராஜகுடும்பமே அபரிமிதமான பழம் பற்றுடைய தாயிருப்பது இயல்பேயாகும். எனினும், திருவாங்கூரிலே இப்பொழுது திவானா யிருப்பவரும், பிரிட்டிஷ் அரசாங் கப் பிரதிநிதியா யிருப்பவரும், முன்னேற்றக் கொள்கை கள் உடையோரென்பது பிரசித்தம். வயதில் இளையோரா யும், இந்தத்தலை முறையையே சேர்ந்தோராயு முள்ள ராஜப்பிரதிநிதி மகாராணியாரும், ஒருவேளை, இறந்தகா லத்திலும் வருங்காலத்தையே அதிகம் நோக்குவோரா யிருப்பின், வைக்கத்துப் போராட்டம் விரைவில் நன்று முடியலாகுமென் றெண்ண இடமுண்டு.

---


## திருக்குறள் பொருக்குமணிகள்

பல பண்டிதர்களும் அறிவாளர்களும் கூடிச் சாமா னிய ஜனங்களுக்காகத் திரட்டியுதவிய நூல்; சிறிய எளிய இனிய உரையுடன் விரைவில் வெளிவரும் - விலை நாலணாதான். இப்பொழுதே ஆர்டர் செய்யுங்கள்.

பஞ்சாமிர்தம் ஆபீசு, மயிலாப்பூர்.

ஒரு நாட்டியக் கச்சேரி :—வெள்ளச் சேதங்களைப் பார்வையிட்டுக் கொண்டு, கனம் சென்னைக் கவர்னரவர்கள் திருப்பனந்தாள் சென்ற பொழுது, அவ்வூர்ப் பண்டார சந்நிதியவர்கள், ஒரு நாட்டியக் கச்சேரி நடத்திக் கவர்ன ரவர்களை உபசரித்தன ரென்றும், இச் "செய்கையைக் கண்டிக்க நமக்குச் சரியான மொழிகள் அகப்படவில்லை" என்றும், நவசக்தி, வருத்தத்துடன் எழுகின்றது. பின் வரும் வெண்பாவானது இதன் நியாயத்தை ஒருவாறு பொருத்திக் காட்டும் :—

"தேசக் கவர்னர் திருப்பனந்தாள் சென்றதினம்
வேசைக்கூத் தங்கு விளங்கிய தாம் !—ஏசுவதேன் ?
கூத்தன் அடியவர்கள் கூத்திகளைக் கொண்டாடல்
சாத்திரமாம் இன்பும் தரும்."

"சாஸ்த்ராயச ஸுகாயச" என்பது வடமொழிவசனம்.

---

# குசிகர் குட்டிக் கதைகள்

இதுவரை இங்கிலீஷில் மட்டுமிருந்து இப்பொழுதே புதிதாகத் தமிழில் வெளி வந்துள்ளன.

முதல் எட்டுக்கதைகள்...10 அணு.
இரண்டாம் எட்டு ...10 அணு.
இரண்டும் சேர்ந்து வாங்கினல் 1 ரூ. தான்.

முதல் எட்டு:— (1) குதிரைக்காரன் குப்பன் (2) அவனுலா ன பரிகாரம் (3) திரௌபதி கனவு (4) ஓர் அபாயகரமான கிரிசக்கரவண்டி (5) எட்டுச்சுரைக்காய் (6) "என்னை மன்னித்து மறந்துவிடு" (7) கோடங்கி ராமுடு (8) பொய் யல்ல மெய்யே.

இரண்டாம் எட்டு:— (9) தந்தையும் மகனும் (10) வரன் தேடும் வைபவம் (11) அது நேர்ந்த விதம் (12) தர்மசங் கடம் (13) கமலத்தின் கலியாணம் (14) சாஸ்தாப்பிரீதி (15) இருக்கும் போதில்லை (16) இனி அவர் நெஞ்சுவேகும்!

சில அபிப்பிராயங்கள்:– (1) ஹிந்து பத்திரிகை "இக்கதைகளை நம்முக்கிராம வாசிகளும் பெண்பாலாரும் அவசியம் படிக்க வேண்டும்" (2) நவசக்தி – "கதைகள் படிப்பதற்கு இன்ப மா யிருக்கின்றன." (3) இந்துநேசன் – "தமிழுலகத்தார் வாங்கிப்படிப்பது எவ்விதத்தும் பொருந்தும்"

லீ கமிஷன் ரிப்போர்ட்:— "கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது" போன்றும், "இருப்பவனுக்கே மேலும் கொடுக்கப்படும், இல்லாதவனிடமுள்ள சிறிதும் பறிக்கப்படும்" என்னும் விவிலிய வாக்கை யடுத்தும், லீ கமிஷன் செய்த சிபார்சுகளையும், அறிக்கை முழுதையுமே, இந்திய சட்டசபை, நிராகரித்துத் தள்ளி விட்டது வியப்பன்று. அச்சபையாரின் அபிப்பிராயத்தை முற்றும் அவமதித்து, துரைத்தனத்தார், கமிஷன் சிபார்சுகளைக் கைக்கொண்டு மேல் நடத்துவாராயின், அதுவும் வியப்பைத்தராது. இவ்விஷயத்தைப் பற்றியும், தேசத் தொண்டர்களை விசாரணையின்றிச் சிறைப்படுத்தும் அதிகாரத்தைப் பிடுங்கிவிடும் விஷயத்தைப்பற்றியும், பண்டித மதிலால் நேரு சட்டசபையில் பேசிய சொற்பொழிவுகளின் சாதுரியத்தையும், தீரத்தையும், காம்பீரியத்தையும், எவ்வாறு புகழ்வது! அம்மொழிகளைக் கேட்டபின்னரும், நம் நாட்டுப் பிரமுகர்கள் சிலர், நாட்டுக்கட்சிக்கு விரோதமாக வோட்டுக் கொடுத்ததைக் கண்டவரும் கேட்டவரும், வெள்கித் தலைகுனிவதன்றி வேறென்ன செய்வது! இதுவே வியப்பைத்தருகிறது.

---


# முத்துமீனாக்ஷி

ஒரு பிராமணப் பெண் தன் சரித்திரத்தைத்தானே எழுதியது.

பலவருஷங்களாகப் பிரதிகளில்லாமல், இப்பொழுதே இரண்டாம் பதிப்பு வெளி வந்திருக்கிறது — இக்கதை இங்கிலீஷில் மொழி பெயர்க்கப்பட்ட பொழுது, அப்பதிப்புக்கு ஸர். ஸி. சங்கரன் நாயர் முகவுரை எழுதியளித்தார்.

திருத்திய இரண்டாம் பதிப்பு — விலை — 0–8–0

சில அபிப்பிராயங்கள்:— (1) இந்து நேசன்—"கதைப் போக்கும் வார்த்தைகளின் அமைப்பும், விஷயங்களின் கிராஹ்யமும் இந்துக் குடும்பங்களுக்கு ஏற்குமாதலால், இதற்கு நம்மவர் அனைவரும் போதிய ஆதரவு காட்டுவாராக." (2) டெய்லி எக்ஸ்ப்ரஸ் — "கதை எளிதான உருக்கமான நடையில் எழுதப்பட்டிருப்பதால், இருபாலாரும் படித்துப் பயன் பெறலாகும்." (3) சுதேசமித்திரன் — "படிக்கப் படிக்க இன்பம் தரத்தக்கதாக இருக்கிறது. (4) நவசக்தி — "இந்நூல் மிகநன்றாக எழுதப்பட்டிருக்கிறது. கதைப் போக்கு மிகவும் நன்றாயிருக்கிறது."

காங்கிரஸ் சபையும் நூல் நூற்றலும்:— இச் சபையானது, சாதி மதம் நிறம் முதலிய பேதங்களின்றி, இந்தியர் எல்லோரும், ஆங்கில - இந்தியரும் கூட, ஒன்று சேர்ந்து, இந்தியாவின் முன்னேற்றத்தையும் உரிமைப் பேற்றையும் நாடி உழைத்தற்கென்றே ஏற்பட்டது. இதன் அங்கத்தினராயிருப்பவர், இந்தியாவின் நிலையான பொதுவான நன்மையையே நாடுவோராவர். இந்த ஒரு பெருங்கோட்பாட்டில் மட்டும் மனமொத்தவராயும், அந் நன்மையை நாடும் வழிகளில் அபிப்பிராய பேதங்கள் உள்ளவராயும் இருத்தல், பலதிறப்பட்ட இனத்தார்கள் குழுமியுள்ள இம்மா பெரும் தேசத்திலே விலக்க முடியாததாகும். இந்தியன் என்பான் எவனுமே இதைச்சேரும் உரிமை யுள்ளவன். இது தான் ஜனநாயக தத்துவ நீதியாகும். அவன், மிதவாதியாகுக அமிதவாதியாகுக, காந்தியனாகுக தாஸியனாகுக, இந்திய ஜன்மத்தினால், இந்தியாவின் நன்மையை நாடும் கருமத்தினால் மட்டும், இச்சுதந்தரம் அவனதாகும். இது தான் நியாயம். மகாத்மா காந்தியும் மற்றோரும் இந்நியாயத்தை எத்தனையோ தரம் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். மிதவாதிகள் உள்பட எல்லாக் கட்சியினரையும் காங்கிர

---


# ஸ்ரீமத் பகவத்கீதை.

மூலத்துடன் அத்வைத விசிஷ்டாத்வைத த்வைத பாஷ்யச் சுருக்கத்துடனும் இது வரையில் வெளியிடாத ரகஸ்யங்கள் அடங்கிய முன்னுரையுடனும் கண்ணனுடைய கருத்திற் கிணங்க சென்னை ஸம்ஸ்கிருத காலேஜ் உபாத்யாயர் ஸ்ரீமான் சி. ஆர். ஸ்ரீனிவாஸய்யங்கார் பி. ஏ. அவர்களால் எழுதப்பட்டது.

முழு காலிகோ பயிண்டு செய்தது.

விலை ரூபா 3—0—0

சுதேசமித்திரன் ஆபீஸ்,

சென்னை.

ளைச் சேரும்படி இதுவரை அழைத்திருக்கின்றனர். காங்கிரஸின் அங்கத்தினரை மட்டுமின்றி, அதிகாரிகளைக் கூட நூல் நூற்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யக் கூடாதென்று, சின்னாட்களுக்கு முன்னரே தீர்மான மாயிற்று. இப்படியிருக்க, ('பெருமாள்' குடும்பன், தன் பெயரை மாற்றிப், 'பெரிய பெருமாள்' என்று மறுபெயர் பூண்டுவந்த கதைபோல), இப்பொழுது மீண்டும் ஒரு விதியை நியமித்து, நூல் நூற் போர் மட்டும்தான் காங்கிரஸையே சேரலாமென்று கூறுவது, ஒருசிறிதும் பொருந்தாது. "தன்னெஞ் சறிவது பொய்யற்க" என்னும் நீதிப்படி தானொழுகுவது மட்டுமன்றி, எல்லோரும் எப்பொழுதும் அப்படியேதான் ஒழுக வேண்டு மென்று போதிப்பவர் மகாத்மாகாந்தி. இவ்விஷயத்தில் மட்டும் அவ்வொழுக்கத்துக்குப் போதிய இடம் பிறர்க்குக் கொடாததேனோ? அந் நீதிப்படி தன்னெஞ்சு ஒப்பாதபிறர், அவாது பிரியத்துக்காகவோ, தாக்ஷிண்யத்துக்காகவோ நூல்நூற்க இசைவதை மகிழ்ந்தேற்பது வியப்பையே தருகின்றது. நாட்

---


## தாருல் இஸ்லாம்

இஃது இனிய தமிழில் உயர்ந்தநடையில் அதிரஸத்துடன் ஆனந்தமயமாய் எழுதப்பட்ட அநேக அருமையான வியாசங்களையுடையது. தமிழ் நாட்டுச் சோதர சோதரிகளுக்குத் தக்க அறிவை யூட்டுவது. இஸ்லாத்தின் உயரிய தன்மையை உரைத்து விளக்குவது. ஸமரஸ நோக்கங் கொண்டது. இஸ்லாத்தின் ராஜீய தேசிய ஞானத்தை எடுத்துணர்த்துவது. தமிழ் மொழி வளர்ச்சியில் மிகவூக்கங் கொண்டது.

வருஷசந்தா ரூ 3. தான். வெளி நாட்டுக்கு ரூ 4.

## ஜவாஹிருல் 'புர்: கான்

(குர்ஆன் ஷரீபின் தமிழ் மொழி பெயர்ப்பும் அதன் விரிவான வியாக்யானமும் ஒருங்கே கூடியது.)

இதுவரை 1000 பிரதிகள் விலையாய் விட்டன. இன்னும் சில பிரதிகளே எஞ்சியிருக்கின்றன. இன்றே எழுதுங்கள்! ஏமாந்து போக வேண்டாம்!!

160 பக்கங்களுள்ள முதல் வெளியீட்டின் கிரயம் ரூ 1-8.

"தாருல் இஸ்லாம்" ஆபீஸ்
தபால் பெட்டி நெ. 15, சென்னை.

டின் போதாக்காலமே அம்மகானேயும் இவ்வாறு கூறவும் நடக்கவும் செய்கின்றது போலும்! இந்தப் புதிய நிபந்தனையானது, பலரைப் பொய்யான ஒழுக்கத்தில் புகுத்திவிடும்; பலரை வெறுப்புடன் காங்கிரஸை விட்டு வெளியேறும்படி துரத்திவிடும்; அன்றியும், ராஜீயத் துறையில் காங்கிரஸுக்கு இப்பொழுதுள்ள ஆதிக்கத்தையும் மதிப்பையும் தாழ இறக்கிவிடும் என்பது திண்ணம். 'சுதந்திரமானது ஒவ்வொரு இந்தியனுக்கும் பிறப்புரிமை' என்று திலகர் கூறினது உண்மையாயின், அந்தச் சுதந்திரத்துக்காக உழைப்பதும் ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும் என்பதைக் கூறவேண்டுமோ? ஆயின், ஒருவன் தன்கடமையைச் செலுத்தும் உரிமையை யாவரே பறிக்கலாகும்? இந்தியனைப் பிறந்த ஒருவனை, 'நீ நூல் நூற்றாலன்றி இந்தியன் நாஷனல் காங்கிரஸைச் சேர்ந்து உன் பிறப்புரிமைக்காக உழைக்க ஒண்ணாது' என்று மறுப்பது, ஜனநாயகத்தின் வழியதாகுமோ? குறுகிய நோக்கத்தால் வரும் கொடுங்கோன்மையே யாகுமன்றோ? இந்தியன் ஸோஷியல் ரிபார்மர் பத்திரிகையின் ஆசிரியர், மகாத்மா காந்தியை மகிழ்விப்பதற்

---


# லோகோபகாரி

வருஷ சந்தா:—உள் நாடு ரூ. 4.
வருஷ சந்தா:—வெளி நாடு ரூ. 6.
முப்பது ஆண்டுகளாய் நிலவி வரும்

## வாரப் பத்திரிகை.

ஆசிரியர். பரலி. சு. நெல்லையப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிர் பெற்றுப் பொற்படைவதற்குப் பாடுபடும் ஒரு பத்திரிகை. லோகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் சமாச் சாரங்களெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். பாரத தேசம் சகல அம்சங்களிலும் சுயராஜ்யம் பெற்று லோகமெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பது லோகோபகாரியின் நோக்கம்.

"லோகோபகாரி" பத்திரிகாலயம்,
கோமளேசுவரன்பேட்டை, சென்னை. MADRAS.

காகவே தானும் நூல்நூற்க ஒப்புக்கொண்டிருக்கிறார்; அஃதோடு நில்லாமல், 'இந்த நிபந்தனையினாலே தற்சுதந்திர பங்கம் ஒன்றுமில்லை' என்று கூறுவது ஆச்சரியமாயிருக்கின்றது. இந்தியாவின் தற்கால நிலைமையிலே, நாட்டிலும் நாட்டுச் சபையிலும் பரிபூரண ஒற்றுமையிருத்தல் அத்தியாவசியம் என்பது உண்மையே. ஆயின், அவ்வொற்றுமையும், நாட்டுச்சபையும் தான், எதன்பொருட்டு? சுயராஜ்யம் பெறும்பொருட்டே யெனின், ஒவ்வொரு இந்தியனும் இப்பொழுதுள்ள தன்னுரிமையையும் இழந்து, தன் மனம் ஒப்பினாலும் ஒப்பாவிட்டாலும் எவினது செய்யும் அடிமையைப்போன்று, ஒரு செயலைச் செய்யவேண்டுமென்று கூறுவது சுயராஜ்ய முயற்சிக்கு அடிப்படையாகுமோ? உண்மையில், அது, பிள்ளைவரன் கேட்கப்போனவிடத்தில் கணவனையே இழந்த கதைபோலும், "சுக்கலாம் பரதரம்" என்று கண்ணில் குட்டிக்கொள்வது போலவும் அன்றோ ஆகின்றது! நூல்நூற்றல் இழிவென்றேனும், இந்தியாவுக்குக் கதர்பிரசாரம் அவசியம் அன்றென்றேனும் நான் கூறவில்லை. ["எல்லோரும் நூல் நூற்கவேண்டும்" என்னும் நிபந்தனை, சம்பூரண சுயராஜ்யத்தோடு விளங்கும் ஜனநாயக சமூகத்திலே, 'ஒவ்வொருவனும்

---


# The Authors' Press And Publishing-House

ED. ELLIOT RD. MYLAPORE

The Best and the Cheapest

For All Job & Book Work

GIVE US A TRIAL.

தனக்குவேண்டிய ஊண் உடைகளைத்தானே ஆக்கிக் கொள்ளவேண்டும்' என்னும் நிபந்தனை வழியதாகப் பிறக்கின், ஒரு வேளை பொருந்து மென்னலாம்.]—ஆனால், இப்பொழுது உலகமும் இந்தியாவுமுள்ள நிலைமையிலே, இப்படிப்பட்ட ஒரு நிபந்தனையை ஏற்படுத்துதல், முன்னே கூறியபடி, கொடுங்கோன்மையன்றி மற்றொன்றாகாது. இதனால் காங்கிரஸ் சபையில் ஒற்றுமை யேற்பட்டு அது பலப்படுவதற்குப் பதிலாக, உள்ளபலமும் குன்றி, அது முற்றிலும் சீர் குலைந்துபோமென்றே அஞ்சுகிறேன்.

மகாத்மாவின் பட்டினி—ஹிந்து முஸ்லிம்களுக்குள் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் அதிமுக்கியமாகத் தோற்றும் தருவாயிலே, நாட்டில் பலவிடங்களில் அவர்களுக்குள் கலகங்களும் கொலைகளும் நிகழ்வதைக்காணச் சகியாதவராய், அன்பின் மிகுதியால் தன்பிள்ளையின் குற்றத்துக்காகத் தன்னையே புடைத்துத் தண்டித்துக் கொள்ளும் தாயைப்போல, மகாத்மா காந்தி, மூன்றுவாரம் உண்ணா விரதம் பூண்டுவிட்டார். யுத்தகளத்திலே, போர் நிகழ்ச்சியிலே, ஒரு சாதாரணப் படையாளைப்போல் சேனாபதியும் ஓடியாடிச் சமர்புரிவது பழைய காலத்து முறை. போரிலே வெற்றிபெறுவதினும், தன் வீரத்தையும் பராக்கிரமத்தையும் காட்டிப் புகழ் பெறுவதையே மேலாக

---

ஆசிரியர்

அச்சுப் பிரசுராலயம்—புஸ்தகசாலை

மயிலாப்பூர்—சென்னை

விஜயமார்த்தாண்டம்—காதற்பத்து-கற்புப்பத்து. 2-ம் பதிப்பு—நவரஸம் கொழிக்கும் நாவல்-பழமொழிக் களஞ்சியம்-விலை 1—4—0.

பாலராமாயணம்—இராமாயணக் கதையை இனிமையாய்க் கூறுவது—விலை 0—12—0.

பாரிஸ்டர் பஞ்சநதம்—புதிய சிறிய ரஸிக நாடகம்—0—6—0. பஞ்சாமிர்தம் சந்தாதாரர்க்குப் பாதி விலை—மூன்றணா தான்.

மதிக்கும் மனப்பாங்கின் வழியதாகும் அது - இந்நாள் முறைவேறு : படைவீரர் பல்லாயிரவர் கிடைப்பர் ; சேனையை வெற்றிபெறும்படி அணிவகுத்து நடத்தவல்ல மதியூகிகளோ மிகச்சிலரே யாவர்; எனவே, யுத்தத்தின் நோக்கம் தற்புகழன்றி வெற்றியாயின், சேனாபதி தன்னுயிரை அபாயத்துக் குட்படுத்தாது காத்து, தான் பின்னின்று படைகளைமேல் நடத்துவதே உத்தமமாகும் - மகாத்மா காந்தி தற்புகழுக்காகப் பட்டினியிருக்கிறார் என்று எவருமே கூறார்—அவர் தன்னயச்சிந்தையே யில்லாதவராதலால் தான், அவரை அனைவரும் 'மகாத்மா'வாகக் கருதுகின்றனர். "அன்புக்குமுண்டோ அடைக்குந்தாழ்" என்னும் உண்மைப்படியும், அசாதாரணமான சில கொள்கை

---


## Lieut Panju : A Modern Indian

*By A. Madhaviah*

A most fascinating Novel—**One Rupee**

*Some Opinions.*

*The Indian Review* " a Kusika story on a bigger canvass ** no better book on domestic reform could be placed in the hands of our ladies."

*United India and Native States*—"The language is pure and simple, with a pleasant idiomatic flow showing literary perfection.*** The hero's chaste life and scrupulous adherence to ideals and subsequent sacrifice are of absorbing interest."

*The Daily Express*—"……what is wanted is not mere imitation novels of the Western type, but real, orginal productions of the indigenous variety, with Indian characters faithfully drawn and fully developed and with original plots scientifically and artistically constructed, and bearing reference to Indian Society as it is or as it ought to be. We have before us now a book of this description by one who may not be unfamilar to our readers, Mr. A Madhaviah.*** A striking feature of the book to us is the extraordinary extent to which it has succeeded in being true to life……The price of one rupee is by no means high."

களினாலுமே, அவர் இவ்விரதத்தைப் பூண்டுள்ளார் - எனினும், அவரது சேனாதிபத்தியம் சுயராஜ்யப் போருக்கு இன்றியமையாததென்று கருதுவோர் அனைவரும்—அப்படி நினையாதார் யாவரே உளர்?—எங்ஙனமாயினும் அவ்விரதத்தைத் தடுத்து, அவர் உயிரைக் காப்பாற்றக்கடவர். "மகத்தான ஒரு காரியத்துக்காக உயிரை விட்டுவிடுவது எளிது; அதன்வழிவரும் ஒவ்வொரு சங்கடத்தையும் அவமானத்தையும் சகித்துக்கொண்டு, மனந்தளராமல் அதேகண்ணாக உழைத்து, பலவிதக் துன்பங்களிலும் கிடந்து உழலுவதுதான் கஷ்டமானது" என்று, ஒரு பெரியோர் கூறியிருப்பது, இச்சந்தர்ப்பத்தில் ஞாபகத்துக்கு வருகின்றது. மகாத்மா இவ்வுண்மையை அறியாதவரல்லர் - தன் உயிர்க்கு நஷ்டம் வாராதென்று தான் நம்புவதாகவே கூறுகிறார். இந்தியாவிலே இப்பொழுதுள்ள ஜீவன்களிலெல்லாம் அதிமுக்கியமான ஒரு ஜீவனை, இவ்விதப் பரீக்ஷைக்குட்படுத்துதல் தகாது - இதை அவர்க்கு நினைப்பூட்டியும், கூடியவரை ஹிந்து முஸ்லீம்களின் ஒந்றுமையை வலுக்கச் செய்தும், அவர் உண்ணா நோன்பை முறிக்கும்படி செய்தல் அவசியம்.

---


# Kusika's Short Stories

**Revised Second Edition**

Part I—15 Stories ··· 0—12—0
Part II—12 " ··· 0— 8—0
Both parts together—27 Stories ··· 1— 0—0

1. *The Indian Review.*—"Kusika's stories are among the classics of their kind, full of graphic and amusing pictures of South Indian life, as vivid and instructive as anything yet attempted in this side of India."

2. *The Indian Bookman*—"······Incisive descriptions of modern South Indian life and customs, recognised for many years as of unusual merit. Mr. Madhaviah has the gift of vivid characteriation···"

தலைவர்களின் ஒற்றுமைக் கூட்டம்:—மகாத்மா காந்தி உபவாசத்தின் கைகண்ட பலனாக, ஹிந்து - முஸ்லீம் மனஸ்தாபங்களை நீக்கி ஒற்றுமையைப் பலப்படுத்துதற் கென்றே, டில்லியில், நாட்டுத்தலைவர் பல கட்சியினரும், சில ஆங்கிலேயப் பிரமுகர்களும், கூடியிருக்கின்றனர். உபவாசத்தை நிறுத்தும்படி இச் சபையார் வேண்டிக் கொள்ள, அதனால் உயிர்ச்சேதம் நேரலா மென்று வைத் தியர்கள் கூறினால் நிறுத்தி விடுவதாக, மகாத்மா ஒப்புக் கொண்டிருக்கிறார். இது நிற்க: டில்லியில் கூடியுள்ள தலை வர்களால், ஹிந்து - முஸ்லீம்களுக்குள் நேரும் கலகங் களை முற்றிலும் நிறுத்திவிட முடியுமா? என்ற வினாவுக்கு விடை, அவரவர் மனப்பாங்கையும் ராஜ்யக் கொள்கை களையும் பொறுத்திருக்கு மெனினும், இவர்கள் நினைத்த மாத்திரத்தில் நிறுத்தி விடுதல் சாத்திய மில்லை என்றே பலரும் ஒப்புக் கொள்வர். இதன் முக்கிய காரணத்தைக், கொச்சையான ஓர் உவமானத்தால் விளக்கப்புகின், தலைக் கும் வாலுக்கும் சம்பந்த மில்லாமையே என்று கூறலாம். தலையே வாலை ஆட்டுவிப்பதா யிருந்தால், வாலாட்டத்தால் உண்டாகும் குழப்பத்தைத் தலையால் நிறுத்த முடியும். தலை வேறு வால் வேறு என்றிருந்தால், இது முடியாதே? அல்லது, தலைக்கும் வாலுக்கும் சம்பந்தமும் பரஸ்பர சிநேக பாவமும் இல்லாமையோடு நில்லாமல், சில அம் சங்களில் விரோத உணர்ச்சியும் அசூயையும் இருக்கு மாயின், வாலின் ஆட்டத்தைத் தலை நிறுத்துவ தென்பது, ஒரு பொழுதும் முடியாத காரியமேயாகும். இவ்விஷயத் தைப்பற்றி அடுத்த காசில் விரிவாய் ஆராய்வேன்.

வெள்ளக்கஷ்ட நிவாரணநிதி:—பஞ்சாமிர்தம் பத்திரிகை யைப் பற்றிய "இலாபத்தோடு புண்ணியம்" என்னும் விளம்பரப் படி, 29-9-24 வரை, பின்வரும் 7 சந்தாதார்களும், இந்நிதிக்கு, நபருக்கு ஒரு ரூபாவிகிதம், இப்பத்திரிகை மூலமாக உதவியிருக்கி ன்றனர். (1) மருத்துவக்குடி ஸ்ரீ. ராகவசாஸ்திரியார் (2) அரியூர் ஸ்ரீ. பத்மநாபபிள்ளை (3) சாத்தூர் ஸ்ரீ. ரங்கஸாமி ஐயங்கார் (4) மதுரை ஸ்ரீ. வெங்கடேசுவரன் (5) திண்டிவனம் ஸ்ரீ. நவநீதம் செ ட்டியார் (6) பூதப்பாண்டி ஸ்ரீ. ராமபத்ரையர் (7) கோவிலடி ஸ்ரீ. K. M. S. முதலியார்.

அ. மாதவையர்